மலர் : 52 இதழ் :1

தமிழரசு

ஜூலை 2021
விலை ரூ. 20/–

செய்தித் துறையின் வெளியீடு



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 30.06.2021 அன்று, காஞ்சிபுரத்தில், பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத்திற்குச் சென்று அங்கு வைக்கப்பட்டுள்ள பார்வையாளர் குறிப்பேட்டில் குறிப்பெழுதிக் கையொப்பமிட்டார்.

மக்கள் நலம் காக்கும் மகத்தானப் பணியில் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்படுபவர்கள் மருத்துவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
மருத்துவர் தின வாழ்த்துச்
செய்தி – 30.06.2021

தன்னலமற்று மக்கள் நலம் காக்கும் மகத்தானப் பணியில் அர்ப்பணிப்பு உணர்வுடன் செயல்படும் மருத்துவர்கள் அனைவருக்கும் 'இந்திய மருத்துவர்கள் நாளில்' வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவின் புகழ்பெற்ற மருத்துவரும் மேற்கு வங்கத்தின் முன்னாள் முதலமைச்சருமான டாக்டர். பிதான் சந்திர ராய் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் ஆண்டுதோறும் ஜூலை 1ஆம் நாள் 'இந்திய மருத்துவர்கள் நாள்' கடைப்பிடிக்கப்படுகிறது. 80 ஆண்டுகள் வாழ்ந்த டாக்டர். பி.சி. ராய் அவர்கள் பிறந்ததும் இறந்ததும் ஜூலை முதல் நாள்தான்.

பிறப்பு எளிதாக அமைவதற்கும், இறப்பிலிருந்து உயிர்களைக் காப்பதற்கும் மருத்துவ சேவை அவசியமாகிறது என்பதன் அடையாளமாக இந்த நாள் விளங்குகிறது. தற்போதைய கொரோனா பேரிடர் காலத்தில் மருத்துவர்களின் சேவை இன்றியமையாததாய் இருக்கிறது. அதனை உணர்ந்து வெள்ளை உடுப்பு அணிந்த இராணுவம்போல் அல்லும் பகலும் அரும்பணியாற்றுகின்றனர் மருத்துவர்கள்.

குறிப்பாக, கொரோனா இரண்டாவது அலையின் தாக்கம் தமிழ்நாட்டில் தீவிரமாக இருந்த நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழக அரசு அமைந்தது. அப்போது நாம் மேற்கொண்ட போர்க்கால நடவடிக்கைகளில், தளகர்த்தர்களாக – சிப்பாய்களாக – முன்களவீரர்களாகப் பணியாற்றி, நோய்த்தொற்றைக் கட்டுக்குள் கொண்டுவந்த மருத்துவர்களுக்கு இந்த நன்னாளில் என் வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எளிய மக்களின் உயிரையும், உடல் நலத்தையும் பாதுகாக்கும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் தலைமையிலான தி.மு.கழக ஆட்சியில் வலுப்படுத்தப்பட்ட தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பு, மேலும் வலிமை பெற இந்த அரசு மேற்கொள்ளும் முயற்சிகளுக்கு உங்களின் ஒத்துழைப்பை எதிர்நோக்குகிறேன்.

இது மக்களின் அரசு. மக்களின் உயிர் காக்கும் மருத்துவர்களுக்கான அரசாகவும் என்றும் இருக்கும் என்ற உறுதியினை வழங்குகிறேன். அதன் அடையாளமாகத்தான் கொரோனா தடுப்புப் பணியில் தங்கள் இன்னுயிரை ஈந்த மருத்துவர்களின் குடும்பத்திற்கு உடனடி நிவாரண உதவியாக ரூ.25 இலட்சமும், பணியில் உள்ள மருத்துவர்களுக்கு ஊக்கத்தொகையாக ரூ.30 ஆயிரமும் வழங்கப்பட்டது.

நீங்கள் மக்களைக் காக்கும் மகத்தானப் பணியைத் தொடருங்கள். இந்த அரசு உங்களைப் பாதுகாக்கும் முன்கள வீரராகச் செயலாற்றும்; துணை நிற்கும்.

தமிழரசு

தமிழ்நாடு அரசு
செய்தித் துறையின் வெளியீடு

திருவள்ளுவர் ஆண்டு 2052
பிலவ வருடம் : ஆனி – ஆடி
ஜூலை 2021

மலர் : 52 விலை ரூ.20 இதழ் : 1

ஆசிரியர் - வெளியிடுபவர்
முனைவர் **வீ.ப. ஜெயசீலன்,** இ.ஆ.ப.,
இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர்

நிருவாக ஆசிரியர்
த. ஹரிராம்
இணை இயக்குநர் (வெளியீடுகள்)

முதன்மைப் பொறுப்பாசிரியர்
அ. மகேஸ்வரி
உதவி இயக்குநர்

பொறுப்பாசிரியர்கள்
சு. தீபா
எஸ். உதயா கதிரவன்
ச. மஞ்சுளா
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்கள்

உதவி ஆசிரியர்கள்
மு. மணிமேகலை
அ. மதன்
கு. சுபாஷ்
போ. முத்துக்குமார்

கணினி வடிவமைப்பு
தி. ஜெய்சங்கர்
க.இரா. உமாமகேஸ்வரி

முதுநிலை அச்சுப்பிழைத் திருத்துபவர்
கோ. சந்திரசேகர்

வடிவமைப்பாளர்
கோ. முரளி கிருஷ்ணன்

தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம்,
எண்.5, இராஜீவ் காந்தி சாலை,
கானகம், தரமணி, சென்னை–600 113.
தொலைபேசி : 22542221 / 22542224
மின்னஞ்சல் : tamilarasujournal1@gmail.com
இணையதளம் : www.tndipr.gov.in

தமிழரசு இதழுக்கு
www.tamilarasu.org என்ற இணையதளத்தில்
சந்தாத் தொகையினை நேரடியாக செலுத்தலாம்.

“மருத்துவர்களாகிய நீங்கள் மக்களைக் காக்கும் மகத்தானப் பணியைத் தொடருங்கள். இந்த அரசு உங்களைப் பாதுகாக்கும் முன்களவீரராகச் செயலாற்றும்; துணை நிற்கும்.”

– மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்

இந்த இதழில்...

★ **“எல்லோருக்கும் எல்லாம்” என்ற மாபெரும் தத்துவத்தின் அடிப்படையில் அனைவருக்குமான அரசாக இந்த அரசு இயங்கும்**
16ஆவது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடரில் கலந்துகொண்டு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **பன்வாரிலால் புரோகித்** அவர்கள் 21.06.2021 அன்று சட்டப்பேரவையில் ஆற்றிய உரை 5

★ **முத்தமிழறிஞர் கலைஞரின் தொடர்ச்சி நான் – தமிழினத்தை நம்மால்தான் வளர்ச்சிபெற வைக்கமுடியும் என்ற நம்பிக்கையோடு நம்மை ஆட்சியில் அமர்த்தியுள்ளார்கள் தமிழ்நாட்டு மக்கள்**
மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் உரை மீதான விவாதத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் பதிலுரை – 24.06.2021........ 16

★ **திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரியில் ஒருங்கிணைந்த பேறுகால அவசரச் சிகிச்சை மையம் திறப்பு**
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 07.07.2021 அன்று தொடங்கி வைத்தார்கள். 61

★ **தொழிலாளர்களின் நலன்களைப் பேணிக் காப்பதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது**
தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் திருத்தியமைப்பு – மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவிப்பு – 29.06.2021........75

முதலாம் பக்க அட்டை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 16.06.2021 அன்று, தலைமைச் செயலகத்தில், கொரோனா நோய்த்தொற்றினால் பெற்றோர்களை இழந்து, ஆதரவின்றித் தவிக்கும் குழந்தைகளுக்கு நிவாரண உதவித்தொகைகளை வழங்கி, நலன் விசாரித்தார்கள்.

"எல்லோருக்கும் எல்லாம்" என்ற மாபெரும் தத்துவத்தின் அடிப்படையில் அனைவருக்குமான அரசாக இந்த அரசு இயங்கும்

16ஆவது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக் கூட்டத் தொடரில் கலந்துகொண்டு மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. **பன்வாரிலால் புரோகித்** அவர்கள் 21.06.2021 அன்று சட்டப்பேரவையில் ஆற்றிய உரை.

மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களே!

வணக்கம்.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, 16வது சட்டமன்றப் பேரவையின் முதல் கூட்டத் தொடரில் இங்குக் கூடியிருக்கும் அனைத்து உறுப்பினர்களுக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். மக்களாட்சியின் கலங்கரை விளக்கமாகத் திகழும் இந்த மாமன்றத்தில் வீற்றிருக்கும் ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரிடமும் எதிர்பார்க்கப்படும் கடமைகளை, நீங்கள் ஒவ்வொருவரும் செவ்வனே நிறைவேற்றுவீர்கள் என உறுதியாக நம்புகிறேன்.

அண்ணல் அம்பேத்கர் அவர்கள் வகுத்தளித்த இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையில் இறையாண்மையும், சமத்துவச் சமுதாயமும், மதச்சார்பின்மையும் கொண்ட மக்களாட்சியின் மாண்பு அமையப்பெற்ற குடியரசாக இந்தியா மலரவேண்டும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டு மக்கள் எடுத்த தீர்க்கமான முடிவால், இந்தத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி பெற்றுள்ள மகத்தான வெற்றி இந்த நோக்கத்திற்கு எடுத்துக்காட்டு.

சமூக நீதி, ஆண் பெண் சமத்துவம், அனைவருக்குமான பொருளாதார நீதி, இட ஒதுக்கீடு மூலம் அனைவருக்கும் வாய்ப்பு, கல்வி மற்றும் சமூகச் சீர்திருத்தத்தின் மூலம் முன்னேற்றம் ஆகிய திராவிட இயக்கத்தின் கொள்கைகளை இந்த அரசு தன் அடித்தளமாகக் கொண்டுள்ளது. இந்த அரசின் ஒவ்வொரு செயலும், ஒவ்வொரு சட்டமும், ஒவ்வொரு திட்டமும், ஒவ்வொரு முயற்சியும் மேற்கூறிய கொள்கைகளையே அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

தமக்கு வாக்களித்தோர் என்றும், வாக்களிக்காதோர் என்றும் எந்த பாரபட்சமும் இன்றி, தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்குமான அரசாக இந்த அரசு எப்போதும் செயல்படும். அனைவரையும் ஒருங்கிணைத்துச் செல்லும் இந்த அரசின் நெறிமுறைக்கு ஏற்ப, தொடர்புடையோர் அனைவரையும், அனைத்துத் தரப்பு மக்களையும், சட்டமன்றப் பேரவையிலுள்ள அரசியல் கட்சிகளையும் கலந்தாலோசித்து, கோவிட் பெருந்தொற்றினை எதிர்கொள்வது குறித்து இந்த அரசு திட்டமிட்டுள்ளது.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இந்த மாமன்றத்தில் அறுபதாண்டுகள் அரும்பணியாற்றிய ஓர் ஒப்பற்றத் தலைவர்

திராவிட இயக்கத்தின் மகத்தானத் தலைவர், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர்

கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் மறைந்து ஏறக்குறைய மூன்று ஆண்டுகளுக்குப் பிறகு, இந்த அரசு பதவியேற்றுள்ளது. இந்த மாமன்றத்தில் அறுபதாண்டுகள் அரும்பணியாற்றிய ஓர் ஒப்பற்றத் தலைவராக அவர் திகழ்ந்தார். அவர் நம்முடன் இன்று இல்லை என்றாலும், அவருடைய கொள்கைகள் இந்த அரசை எப்போதும் வழிநடத்திச் செல்லும். மக்களாட்சியின் மாண்பின் மீது அவர் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கையைத் தொடர்ந்து பின்பற்றும் வகையில், ஓர் உண்மையான குடியரசின் உயிர் நாடியாக விளங்கும் நமது மக்களாட்சியின் அடித்தளத்தை வலுப்படுத்தத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொள்ளும்.

மாநிலங்களுக்கு சுயாட்சி என்ற தனது தலையாய இலக்கினை எட்டவும், அரசியலமைப்புச் சட்டத்தின் வழிமுறைகளைப் பின்பற்றி உண்மையான கூட்டாட்சித் தத்துவத்தை நிலைநிறுத்தவும், இந்த அரசு உறுதியாக உள்ளது. **வலுவான மாநில அரசுகள் மூலமாகவே ஒரு வலிமையான ஒன்றிய அரசை உருவாக்கிட முடியும்.** இந்த அரசு, மாநிலங்களின் உரிமைகளைப் பாதுகாப்பதில் உறுதியாக நிற்பதுடன், மாநில அரசுகளின் உரிமைகள் மீறப்பட்டால் அரசியலமைப்பின் துணையோடு அதைக் கடுமையாக எதிர்க்கும். அதே நேரத்தில், '**உறவுக்குக் கை கொடுப்போம், உரிமைக்குக் குரல் கொடுப்போம்**' என்ற கொள்கைக்கு ஏற்ப, நாட்டை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லும் கூட்டு முயற்சியாளர்களாக, ஒன்றிய அரசுடன் தொடர்ந்து நல்லுறவைப் பேணும்.

இந்த அரசு பதவியேற்றபின், மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் புது டில்லி சென்று, **கொரோனா தடுப்பு நடவடிக்கைகளுக்கு தமிழக அரசுக்குத் தேவைப்படும் உதவிகள், தமிழ்நாடு அரசின் கொள்கை கோட்பாடுகளின் அடிப்படையில் ஒன்றிய அரசிடம் வலியுறுத்த வேண்டிய பிரச்சினைகள், தமிழ்நாட்டின் எதிர்கால வளர்ச்சிக்குத் தேவைப்படும் முக்கியத் திட்டங்கள் ஆகியவற்றை விளக்கி, ஒன்றிய அரசின் உதவியைக் கோரும் பல்வேறு கோரிக்கைகளை மாண்புமிகு பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து அளித்தார்கள்.** இந்தக் கோரிக்கைகள் குறித்து ஆராய்ந்து, தமிழ்நாடு அரசிற்குத் தேவைப்படும் உதவிகளை ஒன்றிய அரசு செய்யும் என நம்புகிறோம்.

இந்த அரசு பதவியேற்றபோது, தமிழ்நாட்டையும் நம் நாடு முழுவதையும் பெருமளவில் பாதித்திருந்த கோவிட் பெருந்தொற்றின் இரண்டாம் அலை மிகப்பெரும் சவாலாக அமைந்திருந்தது. வாக்குப்பதிவு முடிந்த பின்னரும் கோவிட் தடுப்புப் பணிகள் தொய்ந்திருந்த நிலையில், வாக்கு எண்ணிக்கை முடிவுற்றதையடுத்து, புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்றக் கட்சித் தலைவராக இருந்தபோதே, **மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மற்ற எல்லாப் பணிகளையும் விட, கோவிட் பெருந்தொற்று நோய்க்கு எதிரான பணிகளுக்கே முன்னுரிமை அளித்தார்கள்.**

கொரோனா தொற்றுநோய்க்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் சிகிச்சை

ஆக்சிஜன் வசதி கொண்ட படுக்கைகள் உள்ளிட்ட மருத்துவக் கட்டமைப்பு வசதிகள் போர்க்கால அடிப்படையில் கணிசமாக உயர்த்தப்பட்டன. **முன் எப்போதும் இல்லாத அளவிற்கு அதிகரித்த ஆக்சிஜன் மற்றும் உயிர் காக்கும் மருந்துகளின் தேவையையும் சிறப்பு நடவடிக்கைகள் மூலம் இந்த அரசு நிறைவு செய்துள்ளது. முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ், காப்பீடு பெறப்படும் மருத்துவ சிகிச்சைகளை விரிவுபடுத்தி, ஏழை, எளிய மக்கள் தனியார் மருத்துவமனைகளிலும், கருப்புப் பூஞ்சை தாக்கம் உள்ளிட்ட கோவிட் நோய்க்கான அனைத்து சிகிச்சைகளையும் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.** தடுப்பூசி போடும் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. தடுப்பூசி போட்டுக்கொள்ள மக்களிடையே தயக்கம் இருந்த சூழ்நிலை அறவே மாறி, தற்போது, தமிழ்நாட்டில் தடுப்பூசி போடும் மக்களின் எண்ணிக்கை கணிசமாக உயர்ந்துள்ளது. ஆனால், ஒன்றிய அரசால் வழங்கப்படும் தடுப்பூசியின் ஒதுக்கீடு போதுமானதாக இல்லை. எனவே, தமிழ்நாட்டிற்கு ஒதுக்கீடு செய்யப்படும் தடுப்பூசிகளின் எண்ணிக்கையை உயர்த்திட வேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகிறோம்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முழு உடல் கவசம் அணிந்து கொரோனா சிகிச்சைப் பிரிவிற்கு நேரில் சென்று ஆறுதல்

கோவிட் பெருந்தொற்றிற்கு எதிரான போரில் ஈடுபட்டுள்ள மருத்துவர்கள், செவிலியர்கள் உள்ளிட்ட மருத்துவப் பணியாளர்கள் மற்றும் முன்களப் பணியாளர்கள் பல்வேறு வகையிலும் ஊக்கப்படுத்தப்பட்டுள்ளனர். **தமிழகமெங்கும் நடைபெறும் கொரோனா தடுப்புப் பணிகளைத் தொடர்ந்து நேரில் சென்று ஆய்வுசெய்து வரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கோவை இ.எஸ்.ஐ. மருத்துவமனையில் முழு உடல் கவசம் அணிந்து கொரோனா சிகிச்சைப் பிரிவிற்கே நேரில் சென்று, அங்கு சிகிச்சை பெறும் கொரோனா நோயாளிகளிடம் நலம் விசாரித்து, அங்கு பணிபுரியும் மருத்துவர்களையும், செவிலியர்களையும் ஊக்கப்படுத்தினார்கள்.** கூடுதல் மருத்துவப் பணியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கோவிட் பெருந்தொற்றுப் பரவலை எதிர்கொள்வதில் அயராமலும் தன்னலம் கருதாமலும் பணிபுரியும் முன்களப் பணியாளர்கள் அனைவருக்கும் அரசின் சார்பில் எனது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் சிறப்பான முயற்சிகளினால், **கோவிட் பெருந்தொற்றுப் பரவலுக்கெதிரான போரில் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினரும், புலம்பெயர் தமிழர் சமுதாயத்தினரும் ஊக்கத்துடன் ஒன்று திரண்டுள்ளனர். பெருநிறுவனங்கள், சிறுதொழில் நிறுவனங்கள், வணிகர் சங்கங்கள், அரசுசாரா தொண்டமைப்புகள், அரசியல் கட்சிகள், கலைத்துறையினர், தன்னார்வலர்கள் என அனைவரும் கோவிட் பெருந்தொற்றை எதிர்கொள்வதில் இந்த அரசுடன் தோளோடு தோள் நின்று செயல்படுகின்றனர். இதுவரை, முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு 335.01 கோடி ரூபாய் நிதியுதவி பல்வேறு தரப்பிலிருந்து குவிந்துள்ளது.** இத்தொகையில், 141.10 கோடி ரூபாய் உடனடியாகவும், வெளிப்படையாகவும், உயிர் காக்கும் மருந்துகளையும், கருவிகளையும் கொள்முதல் செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள நிலையில், அரசு மருத்துவமனைகளில் திரவ மருத்துவ ஆக்சிஜன் வழங்குவதற்காக 50 கோடி ரூபாயும், கோவிட் பெருந்தொற்றின் மூன்றாம் அலை தொடர்பான முன்னேற்பாடு நடவடிக்கைகளுக்கு 50 கோடி ரூபாயும் ஒதுக்கப்படும்.

கொரோனா பேரிடர் காலத்தில் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில் ரூ.4,000 நிதியுதவி

பெருந்தொற்றுப் பரவல் சூழலில் மக்களின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும், வருமானமின்றி பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவி வழங்கவேண்டும் என்பதையும் உணர்ந்துள்ள இந்த அரசு, மாநிலத்திலுள்ள 2.1 கோடி அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு 4,000 ரூபாய் நிவாரணத் தொகையை இரண்டு தவணைகளாக மொத்தம் 8,393 கோடி ரூபாய் நிதியுதவியை மே, ஜூன் மாதங்களில் வழங்கியுள்ளது. உலகின் தலைசிறந்த பொருளாதார நிபுணர்கள் பலரும், பொருளாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ள இப்பேரிடர் காலத்தில் ஏழை, எளியோருக்கு நேரடி நிவாரணத் தொகை வழங்குவதே சரியான நடவடிக்கை என வலியுறுத்திவரும் நிலையில், அதை ஒட்டியே தமிழக அரசும் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்தி உள்ளது. நுகர்வோர் தேவையை ஊக்குவிக்கவும், பொருளாதார சுழற்சி இயல்பு நிலைக்குத் திரும்பிடவும் இது உதவும். இது தவிர, 466 ரூபாய் மதிப்பிலான 14 வகையான அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்புகளும், 977.11 கோடி ரூபாய் செலவில் அனைத்து அரிசி அட்டைதாரர்களுக்கும் வழங்கப்பட்டு வருகின்றன. மேலும், மே, ஜூன் மாதங்களுக்கு, **மாநிலத்திலுள்ள அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்களின் குடும்பத்திலுள்ள ஒவ்வொரு நபருக்கும் கூடுதலாக ஐந்து கிலோ அரிசியும் வழங்கப்பட்டு வருகிறது.** இதனால், மாநில அரசிற்குக் கூடுதலாக 687.84 கோடி ரூபாய் செலவு ஏற்படும். "ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்" என்ற பேரறிஞர் அண்ணாவின் கொள்கையை மனதிற்கொண்டு செயல்படும் இந்த அரசு, கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வாழ்வாதார உதவியாக மொத்தம் 10,068 கோடி ரூபாயை இந்த அரசு பதவி ஏற்றது முதல் வழங்கி உள்ளது.

மேலும், கோவிட் பெருந்தொற்றின் **மூன்றாம் அலை ஏற்பட வாய்ப்புள்ளது என மருத்துவ வல்லுநர்கள் எச்சரித்துள்ள நிலையில், இதை சமாளிப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொள்ளும். அதற்கேற்ப, மருத்துவக் கட்டமைப்பு வசதிகள் மேலும் வலுப்படுத்தப்பட்டு வருகின்றன.** 11 புதிய மருத்துவக் கல்லூரிகளை அமைப்பது உள்ளிட்ட, மருத்துவத் துறையில் நடைபெற்று வரும் அனைத்துக் கட்டுமானப் பணிகளும் விரைந்து முடிக்கப்பட்டு வருகின்றன. **சென்னை கிங் மருத்துவமனை வளாகத்தில் 250 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 500 படுக்கை வசதிகளைக் கொண்ட புதிய பன்னோக்கு சிறப்பு மருத்துவமனை கட்டப்பட உள்ளது.** மாநிலத்திலுள்ள பல அரசு மருத்துவமனைகளில், ஆக்சிஜன் சேமிப்பும் உற்பத்தித் திறனும் மேலும் அதிகரிக்கப்பட்டு வருகின்றன. **திரவ மருத்துவ ஆக்சிஜனையும், அது தொடர்புடைய கருவிகளையும் தயாரிக்கும் தொழிற்சாலைகளைத் தமிழ்நாட்டில் நிறுவுவதற்கு, தனியார் முதலீட்டாளர்களுக்குச் சிறப்புத் தொகுப்புச் சலுகைகளை இந்த அரசு வழங்குகின்றது.** மாநிலங்களின் கோரிக்கைகளுக்குச் செவிமடுத்து, தேசிய அளவில் தடுப்பூசிகளை கொள்முதல் செய்து, அனைவருக்கும் இலவசமாக வழங்கும் கொள்கையை மீண்டும் ஏற்றுக்கொண்ட ஒன்றிய அரசின் முடிவை இந்த அரசு வரவேற்கிறது. இந்த ஆண்டு இறுதிக்குள்ளாக, நாட்டிலுள்ள 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து மக்களுக்கும் கோவிட் பெருந்தொற்றுக்கு எதிரான தடுப்பூசியை வழங்குவதற்காக போதிய அளவில் தடுப்பூசி கிடைப்பதை உறுதி செய்யுமாறு இந்த அரசு ஒன்றிய அரசை வலியுறுத்தி வருகின்றது.

செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்கு புத்துயிர் அளிக்கப்படும்

தமிழ் மொழியின் பெருமையைப் போற்றும் வகையில், தமிழ் மொழியை இந்திய அலுவல் மொழிகளில் ஒன்றாக

அறிவிக்க ஒன்றிய அரசை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும். தமிழ்நாட்டிலுள்ள தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் உட்பட அனைத்து ஒன்றிய அரசு அலுவலகங்களிலும் தமிழ்மொழி இணை–அலுவல் மொழியாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும், இதற்காக அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 343இல் உரிய திருத்தங்களை மேற்கொள்ளவும் ஒன்றிய அரசை வலியுறுத்தும். சென்னையிலுள்ள செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனத்திற்குப் புத்துயிர் அளிக்கப்படும். இந்த நிறுவனத்தை வேறு எந்தப் பல்கலைக்கழகத்துடனும் இணைக்காமல், அதன் தன்னாட்சி நிலை பாதுகாக்கப்பட வேண்டும் என்றும் ஒன்றிய அரசை இந்த அரசு வலியுறுத்தும்.

ஈழத் தமிழர்களுக்கு, சம குடிமைசார் மற்றும் அரசியல் உரிமைகளை உறுதி செய்திட, இலங்கை அரசை அறிவுறுத்துமாறு ஒன்றிய அரசு வலியுறுத்தப்படும். இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு இந்தியக் குடியுரிமை வழங்கத் தேவையான சட்டங்களையும் சட்டத் திருத்தங்களையும் மேற்கொள்ளுமாறும் இந்த அரசு ஒன்றிய அரசை வற்புறுத்தும்.

தமிழ்நாட்டில் சட்டம் ஒழுங்கை நிலைநாட்டுவதற்கு இந்த அரசு உயர் முன்னுரிமை அளிக்கும். சாதி, மதப் பிரச்சினைகள் இல்லாத அமைதியான, இணக்கமான சமூகச் சூழல் என்பது மாநிலத்தின் வளர்ச்சிக்கு முற்றிலும் இன்றியமையாதது. மேலும், மாநிலத்தில் உள்ள அனைத்துத் தரப்பு மக்களுக்கும் சமத்துவத்தையும், நீதியையும் இந்த அரசு உறுதிப்படுத்தும்.

காவல்துறையினருக்கும், அவர்கள் பாதுகாத்து, சேவையாற்றும் மக்களுக்கும் இடையிலான நல்லுறவே, காவல்பணியின் இன்றியமையாத குறிக்கோள் என்று இந்த அரசு நம்புகிறது

சட்டம், ஒழுங்கைத் திறம்படப் பராமரிப்பதை உறுதி செய்வதற்கும், குற்றங்களைத் தடுப்பதற்கும் காவல்துறை பணியாளர்களைத் தொடர்ந்து ஊக்கப்படுத்த வேண்டும். இந்த வகையில், காவல்துறையினருக்கும், அவர்கள் பாதுகாத்து, சேவையாற்றும் மக்களுக்கும் இடையிலான நல்லுறவே, காவல்பணியின் இன்றியமையாத குறிக்கோள் என்று இந்த அரசு நம்புகிறது. இத்தகைய நல்லுறவை மேலும் வலுப்படுத்துவதற்காக, காவல்துறையினருக்குத் தேவையான பயிற்சி உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். காவல்துறைப் பணியாளர்களின் குறைதீர்க்கும் செயல்முறைகள் வலுப்படுத்தப்படும். கருணை அடிப்படையிலான நியமனங்கள், குறிப்பாக, பணிக்காலத்தில் இறந்தவர்களின் குடும்பத்தினருக்கான நியமனங்கள் விரைவுபடுத்தப்படும்.

அரசின் வருவாய் மற்றும் செலவினங்களைப் பெருமளவில் பாதிக்கக்கூடிய **எண்ணற்ற அரசு வழக்குகள் பல்வேறு நிலைகளில் நிலுவையில் உள்ளன. அனைத்து வழக்குகளுக்கும் விரைவாகத் தீர்வு காண்பதற்கும், உரிய காலகட்டத்தில் முடிவு எட்டப்படும் வரை, அரசு ஒரு தரப்பாக உள்ள வழக்குகளை முனைப்புடன் கண்காணிப்பதற்கும், புதிய மேலாண்மை அமைப்புகளையும், நடைமுறைகளையும் இந்த அரசு உருவாக்கும்.**

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் என்ற திட்டத்தின் கீழ், 63,500 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது

பரிவுள்ள ஆளுமை என்பது இந்த அரசின் முக்கியக் கோட்பாடாகும். 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' என்ற திட்டத்தின்கீழ் பெறப்படும் அனைத்து மனுக்கள் மீதும் 100 நாட்களுக்குள் தீர்வு காண்பதற்காக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே சிறப்பு அலுவலர் ஒருவரை நியமித்துள்ளார். இத்திட்டத்தின்கீழ், பெறப்பட்ட மனுக்களில், பெருந்தொற்று பரவல் காலத்திலும், இதுவரை 63,500 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது என்பதை இந்த அவைக்குத் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இந்த அரசால் செலவிடப்படும் ஒவ்வொரு ரூபாயும் குடிமக்களுக்கு முழுமையாகப் பலனளிப்பதை இந்த அரசு உறுதி செய்யும்

கோவிட் பெருந்தொற்று, அனைத்துத் துறைகளின் செயல்பாடுகளையும் பாதித்துள்ளதோடு, பொருளாதாரத்திலும், நிருவாக அமைப்புகளிலும் உள்ள பலவீனங்களையும் வெளிப்படுத்தியுள்ளது. அதே வேளையில், நீண்ட காலமாக நிலுவையிலுள்ள அமைப்பு சார்ந்த சீர்திருத்தங்களை மேற்கொள்வதற்கான ஊக்கத்தையும், வாய்ப்பையும் இத்தகைய நிகழ்வுகள் ஏற்படுத்தியுள்ளன. தற்போதுள்ள மனித வள மேலாண்மைக்கான அமைப்புமுறை, மிக முக்கியமான தரவு அமைப்புகள், தணிக்கை, கண்காணிப்பு செயற்பாடுகள் ஆகியவை முழுவதுமாக சீர்செய்யப்பட வேண்டுமென இந்த அரசு கருதுகிறது. பொறுப்புடைமையைத் தக்கவைத்து, அதை மேம்படுத்துவதோடு, நடைமுறைகளையும், செயற்பாடுகளையும் எளிமையாக்குவதன் மூலம் இந்த அரசால் செலவிடப்படும் ஒவ்வொரு ரூபாயும் குடிமக்களுக்கு முழுமையாகப் பலனளிப்பதை இந்த அரசு உறுதி செய்யும்.

மின் ஆளுமையை ஊக்குவித்து, இணையவழி மூலம் அரசு சேவைகளைப் பெறுவதற்கான வழிகளை உயர்த்தி, வெளிப்படைத் தன்மையையும், பொறுப்புடைமையையும் உறுதிப்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும். **'எங்கும் எப்போதும் அரசு**

சேவைகளை' பொதுமக்கள் இணையவழி வாயிலாக உடனுக்குடன் பெறுவதற்கு வழிவகை செய்யப்படும்.

பொதுமக்களுக்கு இயற்கைப் பேரிடர் தொடர்பான செய்திகளையும், எச்சரிக்கைத் தகவல்களையும் சரியான நேரத்தில் தெரிவிப்பதற்காக, புதிய தொழில்நுட்ப சேவைகள் வழங்கப்படும். அரசு சாரா அமைப்புகள் உட்பட, சுற்றுப்புறத்தில் உள்ள முதலில் உதவக் கூடியவர்களுக்கு, பேரிடர் காலத்தில் ஆரம்பக்கட்ட மீட்புப் பணிகளை மேற்கொள்வதற்கான பயிற்சி அளிக்கப்படும். மேலும், பேரிடர் மீட்புப் பணிகளுடனும் மேலாண்மையில் ஈடுபட்டுள்ள அரசு அலுவலர்களின் செயல்பாடுகளுடன் அவர்களின் செயல்பாடு ஒருங்கிணைக்கப்படும்.

லோக் ஆயுக்தா அமைப்பிற்கு புத்துயிரும், உரிய அதிகாரமும் அளிக்கப்படும்

தூய்மையான நிருவாகத்தை உறுதி செய்வதே இந்த அரசின் முன்னுரிமை ஆகும். **மக்கள் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட அனைவரின் மீதான புகார்களையும் விசாரிக்க, லோக் ஆயுக்தா அமைப்பிற்கு புத்துயிரும், உரிய அதிகாரமும் அளிக்கப்படும்.** ஊழல் தடுப்பு மற்றும் விழிப்புப்பணி ஆணையரகம் முடுக்கிவிடப்பட்டு, நிலுவையிலுள்ள புகார்கள் மீது விரைவாக விசாரணை மேற்கொள்ளப்படும். பல்வேறு அரசு அமைப்புகளால் வழங்கப்படும் பொதுச்சேவைகளை முறைப்படுத்திட 'சேவைகள் உரிமைச் சட்டம்' அறிமுகப்படுத்தப்படும்.

பொருளாதார ஏற்றத்தாழ்வுகளும், இடைவெளிகளும் அதிக அளவில் இருக்கும்போது, சமூக நீதி சாத்தியமல்ல. எனவே, அனைவரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்பதே இந்த அரசின் முழு நோக்கமாகும். வளர்ச்சியும், முன்னேற்றமும் பொருளாதார அமைப்பின் உச்சியில் இருப்பவர்களுக்கு மட்டுமல்லாது சமுதாயத்திலுள்ள அனைவருக்கும் பலனளிக்க வேண்டும் என்பதே இந்த அரசின் குறிக்கோள்.

முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக்குழு

கடந்த சில ஆண்டுகளில் தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி மந்த நிலையில் உள்ளதைக் காண்கிறோம். இந்தப் போக்கை மாற்றியமைப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும். வரும் சில ஆண்டுகளுக்கு மட்டுமே கிடைக்கக்கூடிய மனிதவளத்தின் பலன்களை முழுமையாகப் பயன்படுத்தி, விரைவான பொருளாதார வளர்ச்சியை அடைய முற்படுவோம். **இந்த வளர்ச்சி இலக்குகளை எட்டுவதற்கானப் பாதையை வகுத்துத் தமிழக அரசிற்குத் தகுந்த ஆலோசனைகளை வழங்கிட 'முதலமைச்சருக்கான பொருளாதார ஆலோசனைக்குழு' ஒன்றை அமைக்க இந்த அரசு முடிவு செய்துள்ளது. அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் தொழில்நுட்பக் கழகத்தின் பேராசிரியரும் நோபல் பரிசு பெற்றவருமான எஸ்தர் டஃப்லோ, இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் பேராசிரியர் ரகுராம் ராஜன், ஒன்றிய அரசின் முன்னாள் தலைமைப் பொருளாதார ஆலோசகர் டாக்டர். அரவிந்த் சுப்ரமணியன், பொருளாதார நிபுணர் பேராசிரியர் ஜான் ட்ரீஸ், முன்னாள் ஒன்றிய நிதிச் செயலாளருமான டாக்டர். எஸ். நாராயண் ஆகிய உலகின் தலைசிறந்த பொருளாதார அறிஞர்கள் இந்தக் குழுவில் உறுப்பினர்களாக இருப்பார்கள்.** இக்குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில், மாநிலத்தின் பொருளாதாரத்தை மீண்டும் எழுச்சிபெறச் செய்து, பொருளாதார வளர்ச்சியின் பயன்கள் அனைத்துத் தரப்பினரையும் சென்றடைவதை இந்த அரசு உறுதி செய்யும்.

தமிழ்நாட்டின் நிதிநிலையின் தற்போதைய உண்மையான நிலையை விளக்கும் வெள்ளை அறிக்கை ஒன்று ஜூலை மாதத்தில் வெளியிடப்படும்

தமிழ்நாட்டின் நிதிநிலை கவலைக்குரியதாக இருக்கும் இச்சூழ்நிலையில், மாநிலத்தின் நிதிநிலையை மேம்படுத்துவது இந்த அரசின் தலையாய கடமையாகும். இந்த வகையில், மாநிலத்தின் ஒட்டுமொத்தக் கடன் சுமையைக் குறைக்கவும், நிதிநிலையை மேம்படுத்தவும் இந்த அரசு முழுக்கவனம் செலுத்தும். இதன் முதல் கட்டமாக, தமிழ்நாட்டின் நிதிநிலையின் தற்போதைய உண்மையான நிலையை விளக்கும் வெள்ளை அறிக்கை ஒன்று ஜூலை மாதத்தில் வெளியிடப்படும். இதன் மூலம், தமிழ்நாட்டு மக்களுக்கு மாநில நிதிநிலையின் விவரங்கள் முழுமையாகத் தெரிவிக்கப்படும்.

துல்லியமான புள்ளி விவரங்களின் அடிப்படையிலேயே அனைத்து முடிவுகளும் எடுக்கப்பட வேண்டுமென்று இந்த அரசு நம்புகிறது. குறிப்பாக, துறைகளுக்கிடையே போதிய நிதி ஒதுக்கீடு செய்வதில் இம்முறை கடைப்பிடிக்கப்பட வேண்டும். இவ்வாறு புள்ளி விவரங்களின் அடிப்படையில் முடிவெடுப்பது **பொதுமக்களின் பார்வையில் அரசு செயல்பாட்டின் வெளிப்படைத் தன்மையையும் உயர்த்தும். பன்னாட்டு நிதி நிறுவனங்களின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் திட்டங்கள் உள்ளிட்ட பல திட்டங்கள் இந்த அடிப்படையிலேயே மேற்கொள்ளப்படும்.**

வேளாண்மைக்கென்று தனியான ஒரு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும்

நம் நாட்டின் முதுகெலும்பாகத் திகழும் விவசாயிகளின் முக்கியத்துவத்தைப் போற்றும் வகையில், இந்த அரசு, வேளாண்மைத் துறையை, 'வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை' எனப் பெயர் மாற்றம்

செய்துள்ளது. விவசாய உற்பத்தியாளர் குழுக்கள், உழவர் நலச் சங்கங்கள், வல்லுநர்களின் முனைப்பான பங்களிப்புடன் கூடிய புதிய தொழில்நுட்பங்கள், பயிரிடுவதற்கான புதிய முறைகள், வேளாண்மை நவீனமயமாக்கல் ஆகியவற்றிற்குத் தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கப்படும். **விவசாயிகளின் வருவாயை உயர்த்துவதற்காக, கால்நடைப் பராமரிப்பு, இயற்கை வேளாண்மை, தோட்டக்கலைப் பயிர்களைப் பயிரிடுதல் போன்ற வேளாண் தொடர்புடைய செயல்பாடுகள் ஊக்குவிக்கப்படும்.** வேளாண்மை உற்பத்தியைப் பெருக்கவும், விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கவும், ஆண்டுதோறும் வேளாண்மைக்கென்று தனியான ஒரு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்படும்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட உழவர் சந்தைகளுக்குப் புத்துயிர் அளிக்கப்படும்

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட உழவர் சந்தைகளுக்குப் புத்துயிர் அளிக்கப்பட்டு, மாநிலம் முழுவதும் அத்தகைய உழவர் சந்தைகள் அமைக்கப்படும். விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதற்காக, அரசின் மேற்பார்வையில் கிராமப்புறச் சந்தைகள் உருவாக்கப்படும். **கோவிட் பெருந்தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக அமல்படுத்தப்பட்ட ஊரடங்கு காலத்தில், வாகனங்கள் மூலம் மக்களுக்கு அவர்கள் வீட்டிலேயே காய்கறிகளும், பழங்களும் விற்பனை செய்யப்பட்டன. பொதுமக்களிடையே பெருமளவில் வரவேற்பு பெற்ற இத்திட்டத்தை விரிவுபடுத்தி, தொடர்ந்து செயல்படுத்தப்படும்.**

குறுவை சாகுபடிக்காக, திட்டமிட்டபடி, இந்த ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் தேதி அன்று மேட்டூர் அணை திறக்கப்பட்டுள்ளது

2021–2022ஆம் ஆண்டில், 125 இலட்சம் மெட்ரிக் டன் உணவு தானிய உற்பத்தி என்ற இலக்கினை அடைய இந்த அரசு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும். காவிரி டெல்டா பகுதியில் குறுவை சாகுபடிக்காக, திட்டமிட்டபடி, இந்த ஆண்டு ஜூன் மாதம் 12ஆம் தேதி அன்று மேட்டூர் அணை திறக்கப்பட்டுள்ளது. **கடைமடைப் பகுதிகள் வரை நீர் சென்றடைவதை உறுதி செய்வதற்காக, 4,061 கிலோமீட்டர் நீளமுள்ள கால்வாய்களைத் தூர்வாரும் பணிகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.**

இளைஞர்களின் ஆர்வத்தையும் ஆற்றலையும் பயன்படுத்தி, தமிழ்நாட்டிலுள்ள நீர்வளங்கள் மீட்டெடுக்கப்பட்டு, பாதுகாக்கப்படும்

தமிழ்நாடு போன்ற நீர்ப் பற்றாக்குறை உள்ள மாநிலத்திற்கு நீர்வள மேலாண்மை மிகவும் முக்கியமானதாகும். எனவேதான், **நீர்வளங்களுக்கென ஒரு தனி அமைச்சகம் இந்த அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. நிலத்தடி நீரைச் சார்ந்துள்ள விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் நலனைப் பாதுகாப்பதற்காக, நிலத்தடி நீர்ப் பயன்பாட்டை முறைப்படுத்துவதற்கான புதிய சட்டம் ஒன்று இயற்றப்படும்.** இளைஞர்களின் ஆர்வத்தையும், ஆற்றலையும் பயன்படுத்தி, தமிழ்நாட்டிலுள்ள நீர்வளங்கள் மீட்டெடுக்கப்பட்டு, பாதுகாக்கப்படும்.

கருநாடக அரசால் திட்டமிடப்பட்டுள்ள மேகதாது திட்டத்தை நிராகரிக்க வேண்டுமென்று ஒன்றிய அரசை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும்

மாநிலங்களுக்கு இடையேயான நதிநீர்ப் பிரச்சினைகளில் தமிழ்நாட்டின் உரிமைகளைப் பாதுகாக்க, இந்த அரசு உறுதியான நடவடிக்கைகளை எடுக்கும். மாண்புமிகு உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு எதிராக, கருநாடக அரசால் திட்டமிடப்பட்டுள்ள மேகதாது திட்டத்தை நிராகரிக்க வேண்டுமென்று ஒன்றிய அரசை இந்த அரசு தொடர்ந்து வலியுறுத்தும். **முல்லைப் பெரியாறு அணையினை வலுப்படுத்தும் எஞ்சியுள்ள பணிகளை மேற்கொள்ளத் தேவையான அனுமதிகளை விரைந்து வழங்குமாறு கேரள அரசையும், ஒன்றிய அரசையும் இந்த அரசு கேட்டுக்கொள்ளும்.**

மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 2009ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம், 9ஆம் தேதி அன்று, திருச்சி–கரூர் இடையே மாயனூரில் காவிரி நதியின் குறுக்கே கட்டளை கதவணை கட்டுவதற்காக அடிக்கல் நாட்டி, காவிரி – குண்டாறு இணைப்புத் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள். அத்திட்டத்தை விரைவாகச் செயல்படுத்திட இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. **அத்திக்கடவு–அவினாசி திட்டப் பணிகளை முடித்திட இந்த அரசு உறுதியாக உள்ளது. பரம்பிக்குளம்–ஆழியாறு ஒப்பந்தத்தின்கீழ், இடைமலையாறு அணை கட்டுமானத்தைக் கேரள அரசு நிறைவு செய்துள்ளதையடுத்து, அதன் தொடர்ச்சியாக, ஆனைமலையாறு அணை கட்டுவதற்காகக் கேரள அரசுடன் இந்த அரசு பேச்சுவார்த்தையைத் தொடங்கும்.**

மீனவர்கள் நலனிற்கான தேசிய ஆணையத்தை அமைக்குமாறு ஒன்றிய அரசிடம் இந்த அரசு கோரும்

கச்சத்தீவை மீட்க ஒன்றிய அரசுக்குத் தொடர்ந்து அழுத்தம் கொடுப்பது உட்பட, நமது மீனவர் சமூகத்தின் நலன்களை இந்த அரசு பாதுகாக்கும். இலங்கைக் கடற்படையினரால் பலமுறை தமிழக மீனவர்கள் தாக்கப்படுவது, கைது செய்யப்படுவது, உயிரிழப்பு ஏற்படுவது போன்ற நிகழ்வுகளுக்கு நிரந்தரத் தீர்வு காண, ஒன்றிய அரசை இந்த அரசு வலியுறுத்தும்.

கடல்சார் மற்றும் உள்நாட்டு மீனவர்களின் அனைத்து நலன்களையும் பாதுகாப்பதற்காக, மீனவர்கள் நலனிற்கான தேசிய ஆணையத்தை அமைக்குமாறு ஒன்றிய அரசிடம் இந்த அரசு கோரும்.

ஆவின் பால் விலை குறைப்பால் அதன் விற்பனை உயர்ந்துள்ளது

இந்த அரசு பிறப்பித்த முதல் ஐந்து ஆணைகளில் ஒன்றாக, நடுத்தர வகுப்பினருக்குப் பெரும் பயனளிக்கும் வகையில், ஆவின் பாலின் சில்லறை விற்பனை விலை லிட்டருக்கு மூன்று ரூபாய் குறைக்கப்பட்டுள்ளது. இதனால், **ஆவின் நிறுவனத்தின் தினசரி பால் விற்பனையும் ஏறத்தாழ 1.5 இலட்சம் லிட்டர் அளவுக்கு உயர்ந்துள்ளது.**

குடும்ப அட்டை கோரி விண்ணப்பிக்கும் தகுதிவாய்ந்த அனைத்து நபர்களுக்கும் பதினைந்து நாட்களுக்குள் 'ஸ்மார்ட் கார்டு' வழங்கப்படும்

ஒவ்வொரு குடும்ப அட்டைதாரருக்கும் விலையில்லா அரிசி தொடர்ந்து வழங்கப்படும். குடும்ப அட்டை கோரி விண்ணப்பிக்கும் தகுதி வாய்ந்த அனைத்து நபர்களுக்கும் பதினைந்து நாட்களுக்குள் 'ஸ்மார்ட் கார்டு' வழங்கப்படும். கடந்த 2007ஆம் ஆண்டு, மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் **முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்ட சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ், பருப்பு, பாமாயில் மற்றும் சர்க்கரை போன்ற பொருட்களின் கொள்முதல் முறைப்படுத்தப்பட்டுள்ளது. இதனால், அரசுக்குக் கணிசமான அளவில் நிதி சேமிப்பு ஏற்பட்டுள்ளது.**

அண்ணா நூற்றாண்டு நூலகம் புதுப்பொலிவு பெறும் வகையில் புனரமைக்கப்படும்

சமூக நிலையிலும், கல்வி நிலையிலும் பின்தங்கிய மாணவர்களுக்கு நீட் (NEET) தேர்வு ஏற்படுத்தியுள்ள பாதிப்புகள் குறித்து ஆராய, நீதியரசர் ஏ.கே.ராஜன் அவர்களது தலைமையில் ஒரு குழுவை இந்த அரசு அமைத்துள்ளது. இக்குழுவின் பரிந்துரைகளைப் பெற்று, தமிழ்நாட்டில் நீட் தேர்வால் மாணவர்கள் பாதிப்படையாமல் இருக்கத் தேவையான சட்டங்களை நிறைவேற்றி, அத்தகைய சட்டங்களுக்கு மாண்புமிகு குடியரசுத் தலைவரின் ஒப்புதல் பெற, உரிய நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொள்ளும். அண்ணா நூற்றாண்டு நூலகம் புதுப்பொலிவு பெறும் வகையில் புனரமைக்கப்படும். **மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பெயரில், 70 கோடி ரூபாய் செலவில் மதுரையில் சர்வதேசத் தரத்திலான நவீன பொது நூலகம் கட்டும் பணிகள் விரைவில் தொடங்கப்படும்.**

குழந்தைகள் தொடர்ந்து கல்வி கற்பதை உறுதி செய்வதற்காக, ஓர் இலக்குசார் திட்டம் செயல்படுத்தப்படும்

அனைத்துக் குழந்தைகளுக்கும் கல்வி கிடைத்திட, இந்த அரசு இடையறாத முயற்சிகளை மேற்கொள்ளும். அரசுப் பள்ளிகளில் பயிலும் அனைத்துக் குழந்தைகளுக்கும் தரமான கல்வியை வழங்குவதற்கு உயர் முக்கியத்துவம் அளிக்கப்படும். 2019–2020ஆம் ஆண்டில், ஒன்றிய அரசின் கல்வி அமைச்சகத்தால் கொண்டு வரப்பட்ட செயல்திறன் தரக் குறியீட்டின் (PGI) தரவரிசைப் பட்டியலில், கற்றல் வெளிப்பாடு மற்றும் தரத்தில் தமிழ்நாடு பின்தங்கி விட்டது. எனவே, இதில் அதிக கவனம் செலுத்தி, முதலிடத்தைப் பெறுவதற்கான அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும். குழந்தைகள் தொடர்ந்து கல்வி கற்பதை உறுதி செய்வதற்காக, ஓர் இலக்குசார் திட்டம் செயல்படுத்தப்படும். **பெருந்தொற்றுக் காலத்தின்போது ஏற்பட்டுள்ள கற்றல் இழப்பை சரிசெய்யும் வகையில், தகவல் தொடர்பு தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, மாணவர்களுக்குப் புத்தாக்கப் பயிற்சிகள் வழங்கப்படும்.**

திறன் மேம்பாட்டுப் பயிற்சி வாயிலாக, வேலைவாய்ப்புகளையும், சுய வேலைவாய்ப்புகளையும் உயர்த்தும் நோக்கத்துடன் சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்

கோவிட் பெருந்தொற்றுக் காலத்தின்போது, மக்களின் வாழ்க்கையையும் அவர்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாப்பது இந்த அரசின் முதன்மைப் பணியாகும். அதன்படி, இயன்ற வரையில், நிலையான இயக்க நடைமுறைகளுக்கு இணங்க, தொழிற்சாலைகளும், வணிக நிறுவனங்களும் செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ளன. அமைப்புசாராத் தொழிலாளர்கள் நல வாரியங்களின் செயல்பாடு வலுப்படுத்தப்பட்டு, வாரிய உறுப்பினர்களுக்கு, தேவைப்படும் காலத்தில் உதவி கிடைப்பதை இந்த அரசு உறுதி செய்யும். திறன் மேம்பாட்டுப் பயிற்சி வாயிலாக, வேலைவாய்ப்புகளையும், சுய வேலைவாய்ப்புகளையும் உயர்த்தும் நோக்கத்துடன் சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படும். பல்வேறு அரசுத் துறைகளின் திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டங்கள், தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் மூலமாகச் சிறப்பாக ஒருங்கிணைக்கப்படும்.

கோவிட் பெருந்தொற்றால் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ள தொழில் நிறுவனங்களை விரைவாக மீட்டெடுக்க, பல்வேறு நடவடிக்கைகளை இந்த அரசு மேற்கொண்டுள்ளது. சிறுகடன் பெற்றுள்ளவர்களுக்குக் கடனைத் திரும்பச் செலுத்துவதற்குக் குறிப்பிட்ட காலத்திற்கு விலக்கு அளிப்பது குறித்து, ஒன்றிய அரசு மற்றும் ரிசர்வ் வங்கியின் கவனத்திற்கு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சென்றுள்ளார்கள். இந்தப் பெருந்தொற்றுக் காலத்தின்போது, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கு நிவாரணங்களை மிக விரைவாக அரசு வழங்கியுள்ளது. மேலும், மாநில அரசிடமிருந்து பெறப்படும் மூலதனம் மற்றும் வட்டி மானியங்களை விடுவிக்கும் நடைமுறைகளை விரைவுபடுத்தியதன் மூலம் கூடுதல் நிதி அளிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சிக் கழகத்திற்கு நிலுவைத்தொகை செலுத்துவதற்கான காலஅளவும், 15 சட்டரீதியான உரிமங்களைப் புதுப்பிப்பதற்கான காலஅளவும் நீட்டிக்கப்பட்டுள்ளன. நிதி நிறுவனங்களிலிருந்து கடன் பெறும்போது, சொத்து ஆவணங்களை அடமானம் வைக்கும் பத்திரப்பதிவின் மீதான முத்திரைத் தீர்வையைச் செலுத்துவதிலிருந்து அளிக்கப்படும் விலக்கை, இந்த ஆண்டு டிசம்பர் மாதம் வரையில் அரசு நீட்டித்துள்ளது. தொழில் நிறுவனங்களின் பணியாளர்களால் செலுத்தப்பட வேண்டிய தொழில் வரியைச் செலுத்துவதற்கான கால அளவும் மூன்று மாதத்திற்கு நீட்டிக்கப்பட்டுள்ளது.

தொழில்துறையில் தொழில்நுட்ப மேம்பாட்டினை உறுதிப்படுத்துவதும், மாநிலத்தின் அனைத்துப் பகுதிகளிலும், அனைத்துத் துறைகளிலும், பன்முகத் தொழில் வளர்ச்சியை உறுதி செய்வதுமே தமிழ்நாட்டின் தொழில் கொள்கையின் நோக்கங்கள் ஆகும். குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களை மீட்டெடுப்பதற்கான திட்டங்களை வகுப்பதற்காக, தொழிலதிபர்கள், வங்கியாளர்கள், நிதித்துறை வல்லுநர்கள், அரசு அலுவலர்கள் ஆகியோர் அடங்கிய நிபுணர்குழு அமைக்கப்படும். தென் மாவட்டங்களின் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான திட்டங்களை வகுக்க நீதியரசர் இரத்னவேல் பாண்டியன் அவர்களது தலைமையில் குழு அமைத்து, அதன் பரிந்துரைகளின்படி மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எடுத்த நடவடிக்கைகள் போன்றே, சென்னை–கன்னியாகுமரி தொழில் பெருவழியிலும் (Corridor), சென்னை–பெங்களூரு தொழில் பெருவழியிலும் அமைந்துள்ள தொழில் வளர்ச்சிக் குறைவாக உள்ள வட மாவட்டங்களில், அதிக வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தக்கூடிய தொழில் நிறுவனங்களைத் தொடங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுக்கும்.

மாநிலத்திலுள்ள அனைத்து மின் நுகர்வோருக்கும் தடையின்றி மின்சாரம் வழங்குவதை உறுதி செய்வது இந்த அரசின் முக்கிய நோக்கமாகும். கடந்த சில ஆண்டுகளிலிருந்த தவறான நிருவாகத்தால் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகமும், தமிழ்நாடு மின் தொடரமைப்புக் கழகமும் கடுமையான நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன. இவ்விரு கழகங்களின் நிதிநிலை மற்றும் நிருவாகக் கட்டமைப்பு குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்படும். நீண்ட காலமாக நிலுவையில் உள்ள மின் உற்பத்தித் திட்டங்களை விரைவாக நிறைவேற்றுவதன் மூலமும், பழைய, செயல்திறன் குறைந்த காற்றாலைகளை புனரமைத்து, புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தியை ஊக்குவிப்பதன் மூலமும், மின் உற்பத்தித் திறன் உயர்த்தப்படும். நவீனத் தொழில்நுட்பங்களையும், நுண் மின் கட்டமைப்புகளையும் பயன்படுத்தி, மின் சேமிப்பை உயர்த்துதல் மற்றும் விநியோகத்தில் மின் இழப்புகளைக் குறைத்தல் ஆகியவற்றிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்படும்.

உள்ளாட்சி அமைப்புகளின் தன்னாட்சிக் கொள்கை மீது இந்த அரசு உறுதியான நம்பிக்கை கொண்டுள்ளது. இதன் அடிப்படையில், மாநிலத்திலுள்ள ஊரக மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்கு இந்த அரசு புத்துயிர் அளிக்கும். 2016ஆம் ஆண்டில் நடைபெறவிருந்த உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல்கள், ஒன்பது மாவட்டங்களில் உள்ள ஊரக உள்ளாட்சி அமைப்புகளிலும், அனைத்து நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளிலும் நடைபெறவில்லை. **முன்னர் மேற்கொள்ளப்பட்ட எல்லை வரைவு, அனைத்து வகையிலும் முறையாக இருப்பதை உறுதி செய்த பின்னர், கோவிட் பெருந்தொற்றின் தீவிரம் குறைந்தவுடன், இந்தத் தேர்தல்களை நடத்துவதற்கான உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.**

ஊரக வீட்டு வசதி, குடிநீர் வழங்கல், தெரு விளக்கு, சாலை வசதி, நீர்நிலைகளை மறுசெறிவூட்டல் போன்ற பணிகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்படும். நகர்ப்புற மற்றும் கிராமப்புறப் பகுதிகளிலுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் குடிநீர் வழங்குவது இந்த அரசின் தலையாய முன்னுரிமையாக இருக்கும்.

கிராமப்புற, நகர்ப்புறப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் **ஏழை, எளியோருக்கான வீடுகளின் கட்டுமானப் பணிகளை விரைவாக முடிப்பதில் இந்த அரசு கவனம் செலுத்தும்.** வீடுகளை ஒதுக்கீடு செய்வதற்காகக் கண்டறியப்பட்டுள்ள அனைத்துத் தகுதி வாய்ந்த பயனாளிகளுக்கும் வீடுகள் வழங்கப்படும்.

நவீன வசதிகளுடன் துணை நகரங்கள் உருவாக்கப்படும்

மாநிலத்தில் உள்ள பெரிய நகரங்களில் நெருக்கடியைக் குறைப்பதற்காகப் புறநகர்ப் பகுதிகளில் நவீன வசதிகளுடன் துணை நகரங்கள் உருவாக்கப்படும். மாநிலம் முழுவதையும் உள்ளடக்கும் வகையில் மண்டலம் வாரியான திட்டங்கள் வகுக்கப்படும். அனைத்துத் தரப்பினருடனும் உரிய ஆலோசனைகளை மேற்கொண்டு, **சென்னைக்கான மூன்றாவது பெருந்திட்டத்தைத்**

தயாரிக்கும் உரிய காலமான 2026ஆம் ஆண்டிற்கு முன்னரே அப்பணி முடிக்கப்படும்.

சென்னையில் மாநகரக் கட்டமைப்பை நவீன சர்வதேசத் தரத்திற்கு உயர்த்திடும் வகையில், 'சிங்காரச் சென்னை 2.0' எனும் புதிய திட்டம்

சென்னைக்கு அருகில் இருந்த 42 உள்ளாட்சி அமைப்புகளை சென்னை மாநகராட்சியுடன் இணைத்து, மாநகர எல்லைகள் விரிவாக்கப்பட்டன. இணைக்கப்பட்ட பகுதிகளின் அடிப்படைக் கட்டமைப்புகளில் இன்னும் உரிய முன்னேற்றம் ஏற்படவில்லை. எனவே, இணைக்கப்பட்ட பகுதிகளில் இந்த அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் மேம்படுத்தப்படும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னை மாநகராட்சியின் மேயராக இருந்தபோது, சென்னை மாநகரத்தை 'சிங்காரச் சென்னையாக' மாற்ற பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இந்த வகையில், சென்னையில் மாநகரக் கட்டமைப்பை நவீன சர்வதேசத் தரத்திற்கு உயர்த்திடும் வகையில், 'சிங்காரச் சென்னை 2.0' எனும் புதிய திட்டம் செயல்படுத்தப்படும்.

சுற்றுச்சூழல், நகரத் திட்டமிடல், பேரிடர் மேலாண்மை ஆகிய துறைகளின் வல்லுநர்களை உள்ளடக்கிய 'சென்னைப் பெருநகர வெள்ளநீர் மேலாண்மைக்குழு'

நகர்ப்புற நிர்வாகத் திறனை மேம்படுத்துவதற்காகவும், போக்குவரத்து மற்றும் குடிநீர் வழங்கல் உள்ளிட்ட முக்கிய துறைகளில் குடிமக்களுக்குச் சேவைகளைச் சிறப்பாக வழங்கவும், ஒரு புதிய மாதிரித் திட்டம் உருவாக்கப்படும். வெள்ளக் கட்டுப்பாட்டு முறைகளை வகுக்கவும், வெள்ளத்தால் ஏற்படும் பாதிப்புகளைக் குறைக்கவும், வெள்ளநீர் வடிகால்களை வடிவமைக்கவும், சுற்றுச்சூழல், நகரத் திட்டமிடல், பேரிடர் மேலாண்மை ஆகிய துறைகளின் வல்லுநர்களை உள்ளடக்கிய 'சென்னைப் பெருநகர வெள்ளநீர் மேலாண்மைக் குழு' அமைக்கப்படும்.

மதுரவாயல் முதல் சென்னைத் துறைமுகம் வரையிலான உயர்மட்டச் சாலைத் திட்டப் பணிகள் விரைவுபடுத்தப்படும்

நெடுஞ்சாலைக் கட்டமைப்புகளின் தரத்தை உயர்த்துவதற்கு முன்னுரிமை அளிக்கப்படும். முக்கியமான நெடுஞ்சாலைகளை மேம்படுத்தவும், அகலப்படுத்தவும், வலுப்படுத்தவும் தேவையான திட்டம் வகுக்கப்படும். அனைத்து முக்கிய நகரங்களுக்கும் புறவழிச் சாலைகள் அமைக்கப்படும். கடந்த ஆண்டுகளில், காரணமின்றி நிறுத்தி வைக்கப்பட்ட மதுரவாயல் முதல் சென்னைத் துறைமுகம் வரையிலான உயர்மட்டச் சாலைத் திட்டப் பணிகளை விரைவுபடுத்தத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

2009ஆம் ஆண்டில், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் தலைமையிலான அரசு, சென்னை மெட்ரோ இரயில் திட்டப் பணிகளைத் தொடங்கியது. சென்னை மெட்ரோ இரயில் திட்டத்தின் இரண்டாம் கட்டப் பணிகள் விரைவாக நிறைவேற்றப்படுவதை இந்த அரசு உறுதி செய்யும். இத்திட்டத்தின் முதல் கட்டத்தைப் போலவே, 50:50 என்ற செலவுப் பகிர்வு அடிப்படையில், ஒன்றிய அரசு தங்களுடைய பங்கு மூலதனத்திற்கு ஒப்புதலை விரைவாக வழங்க வேண்டும் என்று இந்த அரசு வலியுறுத்தும். **மதுரை, திருச்சிராப்பள்ளி, சேலம், திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் பெருந்திரள் விரைவு போக்குவரத்து அமைப்புகளுக்கான சாத்தியக்கூறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.**

மாநிலத்தின் பேருந்துப் போக்குவரத்து அமைப்பை நவீனமயமாக்குவதிலும், திறம்படச் செயல்படுத்துவதிலும் இந்த அரசு உறுதியாக உள்ளது. **பெண்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்கும், திருநங்கைகளுக்கும் அனைத்துச் சாதாரண நகரப் பேருந்துகளிலும் கட்டணமில்லாப் பயணத்திற்கான திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்.** இந்த வரலாற்றுச் சிறப்புமிக்க திட்டத்தின் மூலம் பொருளாதாரச் செயல்பாடுகளில் பெண்களின் பங்களிப்பும், பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்துவோரின் பங்கும் அதிகரிக்கும்.

தமிழ்நாட்டின் சுற்றுலாத் திறனை முழுமையாக வெளிக்கொணரும் வகையில், ஒரு பெருந்திட்டம் நடப்பாண்டில் வெளியிடப்படும். பழங்காலக் கோட்டைகளும், அரண்மனைகளும் பழமை மாறாமல் புதுப்பிக்கப்பட்டு, பாரம்பரியச் சுற்றுலா ஊக்குவிக்கப்படும்.

கோயில்களின் பராமரிப்பைச் செம்மைப்படுத்துவதற்கு மாநில அளவிலான ஓர் உயர்மட்ட ஆலோசனைக்குழு

தமிழ்நாட்டின் இந்து சமய மற்றும் அறக்கட்டளைச் சட்டம் நம் நாட்டிற்கே ஒரு முன்மாதிரி சட்டமாக விளங்குகிறது. கோயில்களின் நிர்வாகத்தில் வெளிப்படைத் தன்மையையும், பொறுப்புடைமையையும் முன்னிறுத்த இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. கோயில்களின் நிதி, நிலங்கள் மற்றும் சொத்துகள் பாதுகாக்கப்படும். அனைத்து முக்கிய இந்துக் கோயில்களிலும் பக்தர்களுக்கான வசதிகளை மேம்படுத்துவதற்கும், கோயில்களின் பராமரிப்பைச் செம்மைப்படுத்துவதற்கும், பிற ஆலோசனைகளை வழங்குவதற்கும், மாநில அளவிலான ஓர் உயர்மட்ட ஆலோசனைக்குழு மீண்டும் அமைக்கப்படும்.

பெண்களின் நல்வாழ்வு, மேம்பாடு மற்றும் முன்னேற்றம் தொடர்பான பல்வேறு சிறப்புத் திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தும். **மகப்பேறு உடல் நலன் மற்றும் புற்றுநோய் கண்டறிதல் போன்ற நடவடிக்கைகள் மூலமாக, பெண்களின் உடல் நலனை மேம்படுத்துவதில் தனிக்கவனம் செலுத்தப்படும். பணிபுரியும் இடங்களில் பெண்களுக்கெதிரான குற்றங்கள் தடுப்பு, இணையவழிக் குற்றங்கள் மற்றும் குடும்ப வன்முறைகளிலிருந்து பாதுகாப்பு ஆகியவற்றிற்கு உயர் முக்கியத்துவம் வழங்கப்படும்.** வேலைவாய்ப்புகளில் பெண்களின் பங்களிப்பை அதிகளவில் ஊக்குவிக்கும் பொருட்டு, பணிபுரியும் மகளிருக்கான விடுதிகள் மாவட்டந்தோறும் நிறுவப்படும்.

மகளிர் சுய உதவிக்குழு இயக்கத்திற்குப் புத்துயிர் அளிக்கப்படும்

தமிழ்நாட்டில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குப் பயன் தரக்கூடிய நிதிச் சேவைகளை ஒருங்கிணைப்பதன் மூலம், மகளிர் சுய உதவிக்குழு இயக்கத்திற்குப் புத்துயிர் அளிக்கப்படும். சுய உதவிக்குழுக்களின் பொருளாதாரச் செயல்பாடுகளை உயர்த்துவதற்காக, அவர்களுக்கு வங்கிக் கடன் வழங்கும் வழிவகைகள் வலுப்படுத்தப்படும். இணையவழி வணிகம் உட்பட, **மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களை விற்பனை செய்வதற்கான வசதிகளையும் இந்த அரசு செம்மைப்படுத்தும்.**

தமிழ் வழியில் பயின்றவர்களுக்கும், அரசுப் பள்ளிகளில் பயின்றவர்களுக்கும், அரசுப் பதவிகளுக்கான வேலைவாய்ப்பில் முன்னுரிமை

‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்ற கணியன் பூங்குன்றனாரின் வரிகளுக்கு ஏற்ப, உயிர்ப்புள்ள தமிழ்ச் சமூகத்தில் இணைந்திட இந்தியாவின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும், உலகின் பல்வேறு நாடுகளிலிருந்தும் மக்களை இவ்வரசு வரவேற்கும். அதே நேரத்தில், தமிழ்நாட்டு மக்களுக்கு, குறிப்பாகத் தமிழ் வழியில் பயின்றவர்களுக்கும், அரசுப் பள்ளிகளில் பயின்றவர்களுக்கும், அரசுப் பதவிகளுக்கான வேலைவாய்ப்பில் முன்னுரிமை கொடுக்கப்படுவதை இந்த அரசு உறுதி செய்யும். இந்த நோக்கத்திற்கு மாறாகக் கடந்த காலங்களில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளை மாற்றியமைக்கவும், ரத்து செய்யவும் தேவையான நடவடிக்கைகள் விரைவாக மேற்கொள்ளப்படும். **தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு அலுவலகங்களிலும், பொதுத்துறை நிறுவனங்களிலும், தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களுக்குப் பணி நியமனத்தில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டும்** என்று ஒன்றிய அரசிடம் இந்த அரசு வலியுறுத்தும்.

தமிழ்நாட்டில் வழங்கப்படும் 69 சதவீத இடஒதுக்கீடு தொடர்ந்து பாதுகாக்கப்படும்

சமூக நீதியின் இலட்சியங்களைப் பாதுகாத்திடவும், சமூக மற்றும் கல்வி ரீதியாகப் பின்தங்கிய பிரிவினரின் முன்னேற்றத்தைப் பாதுகாத்திடவும் இந்த அரசு எப்போதும் பாடுபடும். **100 ஆண்டுகளைக் கடந்து நிற்கும் தமிழ்நாட்டின் இட ஒதுக்கீட்டுக் கொள்கை, காலத்தை வென்று, சமூகநீதியை உறுதி செய்துள்ளது.** இந்த வகையில், தற்போது தமிழ்நாட்டில் வழங்கப்படும் 69 சதவீத இடஒதுக்கீடு தொடர்ந்து பாதுகாக்கப்படும்.

ஒன்றிய அரசின் இதர பிற்படுத்தப்பட்டோருக்கான இடஒதுக்கீட்டில், சமூக பொருளாதார நிலையில் முன்னேற்றம் அடைந்தவர்களை நிர்ணயிப்பதற்கான வருமான அளவுகோல்களை நீக்கவும், அவை நீக்கப்படும் வரையில், தற்போதைய வருமான வரம்பினை 8 இலட்சம் ரூபாயிலிருந்து 25 இலட்சம் ரூபாயாக உயர்த்தவும், இந்த அரசு ஒன்றிய அரசை வலியுறுத்தும். வெவ்வேறு சமூகங்களின் பின்தங்கிய நிலையை நிர்ணயிப்பதில், மாநில அரசின் அதிகாரம் எவ்வகையிலும் பாதிக்கப்படாமல் இருப்பதையும் இந்த அரசு உறுதி செய்யும்.

அரசுப் பணிகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான நிரப்பப்படாத காலியிடங்கள் சிறப்பு நியமனங்களின் மூலம் நிரப்பப்படும். பழங்குடியினர் சான்றிதழ்களை வழங்கும் செயல்முறை எளிமைப்படுத்தப்பட்டு, விரைவுபடுத்தப்படும். திட மற்றும் **திரவக் கழிவு மேலாண்மையில் நவீன தொழில்நுட்பங்களையும், கருவிகளையும் பயன்படுத்தி, தூய்மைப் பணியாளர்களுக்குப் பாதுகாப்பான, சுகாதாரமான பணிச்சூழல் உருவாக்கித் தரப்படும்.**

கல்வி முன்னேற்றம், பொருளாதார மேம்பாடு மற்றும் வீட்டுவசதிகளைச் சிறுபான்மையினர் எளிதில் பெறுவதற்கான திட்டங்களை, சச்சார் குழுவின் பரிந்துரைகளை அடிப்படையாகக் கொண்டு இந்த அரசு திறம்படச் செயல்படுத்தும். உரிய நிருவாக மற்றும் சட்டரீதியான நடவடிக்கைகள் மூலமாக வக்ஃபு வாரியத்தின் நிலங்கள் பாதுகாக்கப்படும்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறை வலுப்படுத்தப்படும்

மாற்றுத்திறனாளிகளின் நலனை உறுதி செய்வதற்கு இந்த அரசு அளிக்கும் முக்கியத்துவத்தைக் குறிக்கும்

வகையில், மாற்றுத்திறனாளர் நலன் தொடர்பான துறையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தன் பொறுப்பிலேயே வைத்துக் கொண்டுள்ளார்கள். மாற்றுத்திறனாளிகளுக்கான உரிமைகள் சட்டம் 2016இன் விதிகள் திறம்பட நடைமுறைப்படுத்தப்படும். இவர்களுக்கான பராமரிப்பு, மறுவாழ்வு மற்றும் ஆதரவளிக்கும் திட்டங்களின் பயன்கள் சரியாகச் சென்றடைவதை உறுதி செய்வதற்காக, அதிக இடங்களில் களப்பணியாற்றிடும் வகையில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை வலுப்படுத்தப்படும்.

2008ஆம் ஆண்டில், மாண்புமிகு முன்னாள் முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள், மூன்றாம் பாலினத்தினருக்கு ‘திருநங்கைகள்’ என முதன்முதலில் பெயரிட்டார்கள். திருநங்கைகளுக்கு நலவாரியத்தை அமைத்து, அதன் மூலம் நலத்திட்டங்களைச் செயல்படுத்தினார்கள். திருநங்கைகளின் வாழ்க்கையையும், வாழ்வாதாரத்தையும் மேம்படுத்த, வேலைவாய்ப்பு பெறுவதற்கும், தொழில் தொடங்குவதற்கும் ஏற்ற வகையில் திறன் பயிற்சி அளிக்கப்படும்.

விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்பது தனிநபர் மற்றும் சமூகத்தின் உடல் மற்றும் மனநலனை மேம்படுத்துகிறது. ஒலிம்பிக் போட்டிகள் போன்ற சர்வதேசப் போட்டிகளில் அதிகப் பதக்கங்களை வெல்வதற்குத் தேவையான, உயர்மட்ட செயல்திறன் பயிற்சி, ஊக்கத்தொகை, போட்டிகளில் பங்கேற்பதற்கான பயணச் செலவுகள் ஆகியவை நமது மாநிலத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கு வழங்கப்படும். **அரசுத் துறைகளில் விளையாட்டு வீரர்களுக்கான ஒதுக்கீட்டின்கீழ் விளையாட்டு வீரர்களின் பணி நியமனம் திறம்பட செயல்படுத்தப்படும்.**

அரசின் நலத்திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்பதில், அரசு அலுவலர்களின் பங்கினை இந்த அரசு முழுமையாக உணர்ந்துள்ளது. அனைத்து அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்களின் நலனை இந்த அரசு தொடர்ந்து பாதுகாக்கும். **அரசு அலுவலர்கள் மற்றும் ஓய்வூதியர்களுக்கான புதிய காப்பீட்டுத் திட்டத்தின் பலன்கள் மேலும் உயர்த்தப்பட்டு, செயல்படுத்தப்படும்.**

எதிர்நோக்கியுள்ள அனைத்துச் சவால்களையும் வென்று, திறம்பட்ட நிருவாகத்தை வழங்குவதற்கும், மாநிலத்தில் உள்ள அனைத்துத் துறைகளிலும் பொருளாதார வளர்ச்சியை மீண்டும் ஊக்குவிப்பதற்கும் இந்த அரசு உறுதி பூண்டுள்ளது. சமூக நீதி மற்றும் பொருளாதார வளர்ச்சியின் பயன்கள், சமூகத்தின் அனைத்துப் பிரிவினரையும் சென்றடைவதை மக்களுக்கான இந்த அரசு உறுதி செய்யும். மாநிலத்தின் மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக இந்த அரசு செயல்படுத்த விரும்பும் பல்வேறு கொள்கைத் திட்டங்களை இந்த உரையில் நான் எடுத்துரைத்துள்ளேன். **இதுபோன்ற பல நல்ல திட்டங்கள் எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்திலும் இடம்பெறும்.**

நமது மாநிலத்தின் மக்கள், மிகப்பெரும் எதிர்பார்ப்புகளுடன் வாக்களித்து, இந்த மாமன்றத்திற்கு உங்கள் ஒவ்வொருவரையும் தேர்ந்தெடுத்துள்ளனர். நீங்கள் அனைவரும் இந்த எதிர்பார்ப்புகளை நிறைவு செய்யும் வகையில் கடினமாக உழைப்பீர்கள் என நம்புகிறேன். மேலும், தமிழ்நாடு சட்டமன்றத்தின் மகத்தான மரபுகளுக்கு ஏற்ப, விவாதங்களிலும், கலந்துரையாடல்களிலும் ஆக்கப்பூர்வமாகப் பங்களிப்பீர்கள் என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை.

‘எல்லோருக்கும் எல்லாம்’ என்ற மாபெரும் சமூக நீதித் தத்துவத்தின் அடிப்படையில் அனைவருக்குமான அரசாக இந்த அரசு இயங்கும். ஒரு கட்சியின் அரசாக இல்லாமல் மக்களின் அரசாக நடைபோடும். அனைத்து மக்களும் சேர்ந்து ‘எமது அரசு’ என்று பெருமையோடு நெஞ்சு நிறைந்து சொல்லும் வகையில் இந்த அரசு தனது பயணத்தைத் தொடரும்.

தந்தை பெரியார் காண விரும்பிய சுயமரியாதைச் சமூகமாகவும், உரிமை பெற்ற மக்களாகவும், எல்லா வளமும் கொண்ட மாநிலமாகவும், தமிழ்நாட்டை மாற்றுவதற்கு இந்த அரசு உறுதியேற்றுள்ளது.

திராவிடச் சித்தாந்தத்தின் ஒப்பற்றத் தலைவர், நவீனத் தமிழ்ச் சமுதாயத்தைச் செதுக்கிய சிற்பி, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வகுத்தளித்த பாதையில் தொடர்ந்து பீடு நடை போட்டு, இந்தியாவின் அனைத்து மாநிலங்களும் தலைநிமிர்ந்து நோக்கும் வகையில் தமிழ்நாட்டை உயர்த்திக் காட்டுவோம். இந்தியாவின் ஈடு இணையற்ற மாநிலம் இன்பத் தமிழ்நாடுதான் என்பதை நிரூபித்துக் காட்டுவோம். அதற்கு உங்கள் ஒவ்வொருவரின் ஒத்துழைப்பையும் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு, இந்த உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி!

வணக்கம்!!

முத்தமிழறிஞர் கலைஞரின் தொடர்ச்சி நான், தமிழினத்தை நம்மால்தான் வளர்ச்சிபெற வைக்கமுடியும் என்ற நம்பிக்கையோடு நம்மை ஆட்சியில் அமர்த்தியுள்ளார்கள் தமிழ்நாட்டு மக்கள்

மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் அவர்களின் உரை மீதான விவாதத்திற்கு
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் பதிலுரை – 24.06.2021.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே! தடியால் தட்டித் தமிழினத்தை எழுப்பிய தந்தை பெரியாரையும், அன்பெனும் உயிராய் ஒருங்கிணைத்த பேரறிஞர் அண்ணா அவர்களையும், தனித்தனி ஊரில் பிறந்தவர்களையும் ‘உடன்பிறப்பு’ என்ற ஒற்றைச் சொல்லால் ஈர்த்த முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களையும் நெஞ்சில் தாங்கி எனது பதிலுரையைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு ஆளுநர் அவர்கள் கடந்த 21ஆம் தேதி, இந்த மாபெரும் சட்டமன்றத்தில் தமிழ்நாடு அரசின் நோக்கங்களையும், எண்ணங்களையும் எடுத்துக்காட்டக்கூடிய நல்லதோர் உரையை ஆற்றியிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த அரசின் முதலமைச்சர் என்ற முறையிலும், தனிப்பட்ட நிலையிலும் எனது மனமார்ந்த நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு ஆளுநர் அவர்களது உரை மீதான விவாதத்தில் உரையாற்றிய அனைவருக்கும் நன்றி தெரிவித்து, எனது உரையைத் தொடங்கும் அதேவேளையில், என்னை இந்த மாமன்றத்திற்குத் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கக்கூடிய கொளத்தூர் தொகுதி வாக்காளப் பெருமக்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகம் பெற்ற மகத்தான வெற்றிக்குக் காரணமான அனைத்துக் கழக உடன்பிறப்புகளுக்கும், தோளோடு தோள்நின்று பணியாற்றிய தோழமைக் கட்சியினருக்கும், பெரும் எதிர்பார்ப்புகளுடன் தங்களுக்குச் சேவை செய்வதற்கான பெரும் வாய்ப்பினை எங்கள் மீது நம்பிக்கை வைத்து வழங்கியிருக்கக்கூடிய அருந்தமிழ் நாட்டு மக்களுக்கும், முதற்கண் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

‘தமிழ்நாடு முதலமைச்சர்’’ என்ற இந்த அரிய ஆசனத்தைப் பார்க்கும்போதும், அதிலே அமரும்போதும்,

என்னுடைய எண்ணங்கள், கடந்த ஒரு நூற்றாண்டு வரலாற்று நிகழ்வுகளையும், முதலமைச்சராகப் பொறுப்பேற்று, அந்த வரலாற்றைப் படைத்த தனிப்பெரும் நாயகர்களையும் சுற்றிச் சுழல்கின்றன. அதன் காரணமாக மெய்சிலிர்ப்பும், பிரமிப்பும், வியப்பும் உண்டாகின்றன.

குறிப்பாக, திராவிட இயக்கத்தின் முன்னோடியான நீதிக்கட்சி, 1920ஆம் ஆண்டு முதல் 1937ஆம் ஆண்டுவரை சுமார் 17 ஆண்டுகள் தமிழ்நாட்டை ஆட்சி செய்தது. முதன்முதலாக சமூக நீதிக்கான ஆணைகளை வழங்கி, வடமொழி ஆதிக்கத்தைத் தகர்த்து, மகளிருக்கான உரிமைகளை அங்கீகாரம் செய்து, அவர்களுக்குப் பிரதிநிதித்துவம் தந்து, கல்வித் துறையில் சீர்திருத்தங்களைப் புகுத்தி, சமுதாய மாற்றங்களுக்கான விதைகளை விதைத்து, சமூக நீதியை நீர் ஊற்றி வளர்த்த கட்சி. ஆங்கிலேயரின் இரட்டை ஆட்சி முறையில், மிகவும் குறைவான சட்ட அதிகாரங்களை வைத்துக்கொண்டு, தொலைநோக்குத் திட்டங்களையும் அக்காலத்தில் எவரும் சிந்தித்திராத சீர்திருத்தங்களையும் நிறைவேற்றிய கட்சி. திராவிட இயக்கத்தின் தாய்க் கழகமான நீதிக்கட்சி, சென்னை மாகாணத்தில் ஆட்சிப்பொறுப்பில் அமர்ந்து 100 ஆண்டுகள் கடந்துவிட்டது.

அன்றைக்கு இருந்த மிகக் குறைவான அதிகாரங்களைக் கொண்டே வகுப்புவாரி உரிமையை நிலைநாட்டியது நீதிக்கட்சி; பட்டியலின மக்களது நலனைப் பேணியது நீதிக்கட்சி; திருக்கோயில்களைக் காத்தது நீதிக்கட்சி; அத்தகைய நீதிக்கட்சி ஆட்சிக்கு வந்து 100 ஆண்டுகளைக் கடந்துவிட்ட இந்த நேரத்தில், திராவிட முன்னேற்றக் கழகம் மீண்டும் ஆட்சிக்கு வந்திருப்பதை நான் பெருமையாகக் கருதுகிறேன்.

தியாகராயரும், நடேசனாரும், டி.எம். நாயரும் போட்ட சமூகநீதி – சமத்துவ சமுதாயம் காணும் அடித்தளத்தில் அமைந்துள்ள ஆட்சிதான் இன்றைய தி.மு.க. ஆட்சி. 1967ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பில் முதன்முதலாக திராவிட முன்னேற்றக் கழகம் அமர்ந்தபோது, "நீதிக் கட்சி ஆட்சியின் தொடர்ச்சிதான் இந்த ஆட்சி" என்று பேறறிஞர் அண்ணா அவர்கள் சொன்னார்கள். அதே வழியில், எங்களது ஆட்சியும் நீதிக் கட்சியின் தொடர்ச்சிதான் என்பதைப் பெருமையோடு நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

நீதிக்கட்சியின் தொடர்ச்சி பேறறிஞர் அண்ணா! பேறறிஞர் அண்ணாவின் தொடர்ச்சி முத்தமிழறிஞர் கலைஞர்! முத்தமிழறிஞர் கலைஞரின் தொடர்ச்சி நான்! ஏன், இந்த அரசு! தமிழினத்தை நம்மால்தான் வாழ வைக்க முடியும் – தமிழினத்தை நம்மால்தான் வளர்ச்சிபெற வைக்கமுடியும் என்ற நம்பிக்கையோடு தி.மு.கழகத்தை ஆட்சியில் அமர்த்தியுள்ளார்கள் தமிழ்நாட்டு மக்கள்! இந்த அரசின் கொள்கைகளை, தமிழ்நாடு எட்டவேண்டிய இலக்கை, எமது தொலைநோக்குப் பார்வையைத்தான் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது உரையில் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்.

அன்று நீதிக்கட்சியின் முதலாவது (First Prime Minister) பிரதம அமைச்சராக இருந்த கடலூர் ஏ. சுப்பராயலு ரெட்டியார் அவர்கள், காங்கிரஸ் கட்சியின் சார்பில் முதலமைச்சராக இருந்த பெருந்தலைவர் காமராஜர் அவர்கள், திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தோற்றுவித்து, ஆட்சிப் பொறுப்பில் அமர்த்தி, முதலமைச்சராக இருந்த பேறறிஞர் அண்ணா அவர்கள், 5 முறை முதலமைச்சர் பொறுப்பேற்று 19 ஆண்டுகள் ஆட்சி செய்த சாதனைச் செல்வர், நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் ஆகியோரையும், முதலமைச்சராக இருந்த தகுதிமிக்க ஏனைய சான்றோர்களையும், இந்த நேரத்தில் நினைவுகூர்வது என்னுடைய கடமை ஆகும். நமது முன்னோர்களை நினைவுகூர்வது என்பது, தமிழர் பண்பாட்டின் தவிர்க்க முடியாத முக்கியமான கூறு என்பதை மறந்துவிட முடியாது.

கடந்த 2 நாட்களாக இந்த அவையிலே நடந்திருக்கக்கூடிய விவாதத்திலே, திராவிட முன்னேற்றக் கழகம், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய தேசிய காங்கிரஸ், பாட்டாளி மக்கள் கட்சி, பாரதிய ஜனதா கட்சி, விடுதலைச் சிறுத்தைகள் கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி, மறுமலர்ச்சி தி.மு.க., மனித நேய மக்கள் கட்சி, கொங்குநாடு மக்கள் தேசியக் கட்சி, தமிழக வாழ்வுரிமைக் கட்சி ஆகிய கட்சிகளைச் சார்ந்த 22 மாண்புமிகு

உறுப்பினர்கள், ஆளுநர் உரையின் மீது, தங்களுடைய சீரிய கருத்துக்களை மையப்படுத்தி இங்கே உரையாற்றி இருக்கிறார்கள். உரையாற்றிய உங்கள் அனைவரது கருத்துக்களையும் இந்த அரசுக்கு நீங்கள் சொல்லும் ஆரோக்கியமான ஆலோசனைகளாகவே நான் எடுத்துக் கொள்கிறேன்.

ஏனென்றால் நான் பேறறிஞர் அண்ணாவினுடைய அரசியல் வாரிசு. முத்தமிழறிஞர் கலைஞருடைய கொள்கை வாரிசு. சட்டமன்ற உறுப்பினர்கள் பேசும்போது முன்வைத்த கோரிக்கைகள், தொகுதி சார்ந்த பிரச்சினைகள் அனைத்தும் சம்பந்தப்பட்ட துறை அமைச்சர்களால் குறித்து வைக்கப்பட்டுள்ளன. துறை அதிகாரிகளோடு கலந்தாலோசித்து நிச்சயமாக, உறுதியாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஐந்து ஆண்டுகால ஆட்சி உரிமை கொண்ட அரசு இது. இதில் செயல்படுத்தக்கூடிய திட்டங்கள், கொள்கைகள், கோரிக்கைகள் ஆகிய அனைத்தையும் ஆளுநர் உரையில் மட்டுமே முழுமையாகச் சொல்லிவிட முடியாது. ஆளுநர் உரை என்பது, அரசாங்கத்தின் ஓராண்டுக்கான கொள்கை விளக்கச் சுருக்கம். அதில் அரசாங்கத்தின் ஐந்தாண்டுகளுக்கான நோக்கம், திட்டம், அணுகுமுறை, செயல்பாடுகள் என அனைத்தையும் அடக்கிவிட முடியாது. ஆளுநர் உரை ஒரு முன்னோட்டம்தான். அனைவருக்கும் எளிதில் புரியும்படி சொல்ல வேண்டும் என்றால், இது ஒரு “ட்ரெய்லர்”மாதிரி. “முழு நீளத் திரைப்படத்தை விரைவில் வெள்ளித்திரையில் காண்க” என்று முன்பெல்லாம் சொல்லப்பட்டு வந்ததைப்போல, இந்த அரசு வகுத்திருக்கும் பாதை, அதில் மேற்கொள்ள உள்ள பயணம், பயணத்தில் எதிர்கொள்ளவிருக்கிற இடர்ப்பாடுகள், அந்த இடர்ப்பாடுகளைக் களைந்தெறியும் சூட்சுமங்கள், சவால்கள், அவற்றைச் சந்திப்பதற்கான சாதுரியங்கள் என அனைத்தும் விரைவில் இந்தப் பேரவையிலே வைக்கப்படவுள்ள நிதிநிலை அறிக்கையில் விரிவாக இடம்பெறும் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

“பொறுத்தார் பூமி ஆள்வார்” என்பது பழமொழி. நாங்கள் 10 ஆண்டுகள் பொறுத்திருந்தோம்; இப்போதுதான் ஆட்சிப் பொறுப்பிற்கு வந்திருக்கிறோம். கொடுத்த வாக்குறுதிகளை நிச்சயம் நிறைவேற்றிக் காட்டுவோம். அதில் உங்களுக்கு ஒரு துளி கூட சந்தேகம் வேண்டாம்.

“தேர்தல் அறிக்கையில் 505 வாக்குறுதிகளைக் கொடுத்தார்கள். அதில் எதையும் நிறைவேற்றவில்லை” என்று மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். நாங்கள் ஆட்சிக்கு வந்து இன்றோடு 49 நாட்கள்தான் ஆகி இருக்கின்றன. ஆனாலும், என் மீதும், திராவிட முன்னேற்றக் கழக அரசின் மீதும் இருக்கின்ற நம்பிக்கையின் காரணமாக, இப்போதே அனைத்து வாக்குறுதிகளையும் நிறைவேற்றி இருக்கலாமே என்ற எதிர்பார்ப்பை வெளிப்படுத்தியிருக்கும் மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு முதலில் நான் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகள் அனைத்தும் நிச்சயமாக நிறைவேற்றப்படும். அதில் எந்தவிதமான சந்தேகமும், யாரும் படவேண்டிய அவசியமில்லை.

ஆட்சிக்கு வந்த முதல் நாளிலிருந்து நாங்கள் மக்களுக்குக் கொடுத்திருக்கக்கூடிய வாக்குறுதிகளில் ஒவ்வொன்றாக நிறைவேற்றிக் கொண்டுதான் வருகிறோம். அதற்கான பணிகளில்தான் எங்களை நாங்கள் ஒப்படைத்துக் கொண்டிருக்கிறோம்.

பல்வேறு ஊடகங்களில் தி.மு.க. அரசினுடைய முதல் முப்பது நாட்கள் எப்படி இருக்கிறது என்று கேள்வி கேட்டு, அதற்கு பொதுமக்கள் அளித்த பதில்களை அனைவரும் பார்த்திருப்பீர்கள். தி.மு.க.வுக்கு வாக்களிக்கவில்லையே என்று பலரும் தங்களது வருத்தத்தைப் பதிவு செய்திருக்கிறார்கள். **“எங்களுக்கு வாக்களித்தவர்கள், இவர்களுக்கு வாக்களித்தோமே என்று மகிழ்ச்சி அடையக்கூடிய வகையிலும், வாக்களிக்கத் தவறியவர்கள், இவர்களுக்கு வாக்களிக்கத் தவறிவிட்டோமே என்று வருத்தப்படக் கூடிய வகையிலும், எனது பணி இருக்கும்”** என்று முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களுடைய நினைவிடத்தில் தி.மு.க. வெற்றி பெற்றவுடன் ஊடகங்கள் வாயிலாக நான் தமிழ்நாட்டு மக்களுக்குத் தெரிவித்தேன். அந்த வகையில், நம்முடைய பணிகள் சிறப்பாக அமைந்திருக்கிறது என்று எண்ணி, இன்னும் சிறப்பாகச் செயல்பட உத்வேகம் கொள்கிறேன்.

ஆளுநர் மாளிகையில் பதவிப் பிரமாணம் செய்து வைக்கப்பட்டவுடன், தலைமைச் செயலகத்திற்குச் சென்று நான் பொறுப்பேற்றேன். பொறுப்பேற்றவுடனே, கொரோனா நிவாரண நிதியாக ரூ.4,000 வழங்க உத்தரவிட்டேன். முதல் தவணையான ரூ.2,000 மே மாதத்திலேயே வழங்கப்பட்டது. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாளான ஜூன் 3 அன்று மேலும் ரூ.2,000 வழங்கப்பட்டது. மொத்தம் ரூ.8,393 கோடி செலவில் 2 கோடியே 11 இலட்சம் குடும்பங்கள் இதனால் பயனடைந்திருக்கின்றன. ஆவின் பால் விலையை லிட்டருக்கு ரூ.3 குறைத்துள்ளோம். அது 16.05.2021 முதலே செயல்பாட்டுக்கு வந்தது. அனைத்து மகளிரும் நகரப் பேருந்துகளில் கட்டணமில்லாமல் பயணம் செய்யலாம் என உத்தரவிட்டோம். திருநங்கைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கும் இந்தச் சலுகை நீட்டிக்கப்பட்டது. என்னிடம் தரப்பட்ட மனுக்களை 100 நாட்களில் தீர்த்து வைக்க ‘உங்கள் தொகுதியில் முதலமைச்சர்’ திட்டத்தைத் தொடங்கினேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதவியேற்றவுடன் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்

இன்றுவரை, இன்றைக்குக் காலை வரை, ஆதாரத்தோடு, புள்ளி விவரங்களோடு சொல்ல வேண்டுமென்று சொன்னால், 75 ஆயிரத்து 546 மனுக்களுக்கு இதுவரை தீர்வு காணப்பட்டுள்ளது.

தனியார் மருத்துவமனைகளில் சிகிச்சை பெறும் கொரோனா நோயாளிகளுக்கான கட்டணத்தை முதலமைச்சர் காப்பீட்டுத் திட்டத்தின் மூலம் அரசே செலுத்த உத்தரவிட்டோம். இதனால் 20 ஆயிரத்து 520 பேர் பயனடைந்துள்ளனர். கருப்புப் பூஞ்சை நோய் பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கக்கூடிய 330 பேருக்கு ரூ.77 இலட்சத்து 53 ஆயிரம் செலுத்தப்பட்டுள்ளது.

கொரோனாவைக் கட்டுப்படுத்த ஒருங்கிணைந்த கட்டளை மையம் (War Room) உருவாக்கப்பட்டது. தடுப்பூசிதான் உயிர்க்கவசம் என்பதால், தடுப்பூசி போடுவது மக்கள் இயக்கமாகவே மாற்றப்பட்டது. இதன் விளைவாக மக்கள் மத்தியில் மாபெரும் விழிப்புணர்வு ஏற்பட்டு, இந்த அரசு பொறுப்பேற்றதிலிருந்து 47 நாட்களில் 65 இலட்சம் தடுப்பூசிகள் போடப்பட்டுள்ளன. ஏற்கெனவே போடப்பட்ட தடுப்பூசிகளின் எண்ணிக்கையைவிட இது இருமடங்கு அதிகமாகும்.

இன்னும் சொல்ல வேண்டுமென்றால், கொரோனாவைப் பற்றி அனைவரும் பேசினார்கள். நாங்கள் ஆட்சிக்கு வரும்போது கொரோனா உச்சத்திலிருந்தது. மே 7ஆம் நாள், தமிழ்நாட்டில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களுடைய எண்ணிக்கை நாளொன்றுக்கு 26 ஆயிரமாக இருந்தது, அது 36 ஆயிரமாக உயர்ந்துகொண்டு இருந்தது. மருத்துவ வல்லுநர்களை விசாரித்தபோது, ‘இது 50 ஆயிரம் ஆகும். ஏன், அதைவிடத் தாண்டிக்கூடப் போகும்’ என்றெல்லாம் சொன்னார்கள். தொடக்கத்தில் கடும் சவாலாகத் தெரிந்தது. ஆனால் அரசு எடுத்த போர்க்கால நடவடிக்கைகளின் காரணமாக, அப்படியே படிப்படியாகக் குறைந்து 7,000க்கும் கீழ் வந்துவிட்டது. இன்னும் படிப்படியாகக் குறைந்துவிடும் என்ற நம்பிக்கை எங்களுக்கு இருக்கிறது. படுக்கைகள் இல்லை, ஆக்சிஜன் வசதி இல்லை என்ற சூழலில்தான் நாங்கள் ஆட்சிக்கு வந்தோம். **“இல்லை, இல்லை” என்ற சொல்லை இல்லாமல் ஆக்கியிருக்கிறோம் இந்த ஆட்சியிலே.**

புதிய படுக்கைகள் உருவாக்கப்பட்டன. ஆக்சிஜன் வசதி கொண்டவையாக, தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகளாக உருவாக்கப்பட்டன. கடந்த ஒன்றரை மாத காலத்தில் மட்டும் 89 ஆயிரத்து 618 படுக்கைகள் தமிழகத்தில் உருவாக்கப்பட்டுள்ளன என்பதை இந்த மன்றத்தின் வாயிலாகப் பொதுமக்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கொரோனா மூன்றாவது அலை வரக்கூடாது. வந்தாலும், அதனைத் தாங்கி எதிர்கொள்ளும் சக்தி இன்றைய அரசுக்கு இருக்கிறது. அரசு எடுத்த நடவடிக்கை காரணமாகத்தான் தொற்று குறைந்தது. ஆனால், மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தங்கள் ஆட்சியிலே அதிகபட்சமாக 7,000 பேர் மட்டுமே பாதிக்கப்பட்டதாகவும், தி.மு.க. ஆட்சியில் 26 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டதாகவும் சொல்லி இருக்கிறார்கள். பிப்ரவரி மாதம் 26ஆம் தேதி தேர்தல்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொரோனா நிவாரண உதவித்தொகை மற்றும் மளிகைத் தொகுப்புகளை வழங்கினார்

தேதி அறிவிக்கப்பட்டதை வைத்து இப்படிச் சொல்கிறார். மே 6ஆம் தேதி வரைக்கும் முதலமைச்சராக இருந்தது அவர்தான். கடந்த 22ஆம் தேதி அவையில் பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், தமிழ்நாட்டில் தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட 26.02.2021ஆம் தேதியுடன் தனது கடமையும் பொறுப்பும் முடிந்ததைப் போலப் பேசினார்கள்.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையின்கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டு பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

“தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட 26.02.2021 அன்று 481 பேருக்குத்தான் கொரோனா பாதிப்பு இருந்தது. அப்போது, தேர்தல் நடத்தை விதிமுறைகளும் அமலுக்கு வந்தது. அதனால், அதிகாரிகளுடன் பேச முடியவில்லை. இருந்தாலும், தலைமைச் செயலாளருடன் பேசி மாவட்ட கலெக்டர்கள், மருத்துவ நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தக் கூறினேன். ஆனால், தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலில் இருப்பதால், தேர்தல் ஆணையத்திடம் அனுமதி பெற வேண்டும் என்று தலைமைச் செயலாளர் கூறினார். இதுகுறித்து, தேர்தல் ஆணையத்துக்கு நான் கடிதம் எழுதினேன். ஆனால், தேர்தல் ஆணையத்திலிருந்து பதில் கடிதம் தலைமைச் செயலாளருக்குத்தான் வந்தது. தலைமைச் செயலாளர் தான் ஆலோசனை நடத்தினார். “நான் முதலமைச்சராக இருந்தபோது கொரோனா தடுப்புப் பணியில் தமிழகம் முதலிடத்திலிருந்தது” என்று பேசினார்கள். 26.02.2021க்குப் பிறகு அன்றைய முதலமைச்சர் அவர்கள் எந்த அரசுப் பணிகளையும் பார்க்கவில்லையா என்பதுதான் என்னுடைய கேள்வி.

12.04.2021 அன்று கொரோனா தடுப்புப் பணிகள் குறித்து கோட்டையில் மூத்த அமைச்சர்கள், அரசு அதிகாரிகளோடு அன்றைய முதலமைச்சர் அவர்கள் ஆலோசனை நடத்தினார்கள். அப்போது தமிழ்நாட்டிலிருந்த பாதிப்பு 6,618. 17.04.2021 அன்று தலைமைச் செயலாளர் தலைமையில் ஆலோசனை நடந்தது. இந்த ஆலோசனை அனைத்தும் அன்றைய முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டதாக அரசுச் செய்திக் குறிப்பு கூறுகிறது. அன்றைய தினம் கொரோனா பாதிப்பு 8,449. 18.04.2021 அன்று உயர்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகளை நேரில் சென்று ஆய்வு செய்து ஆறுதல் கூறினார்

அதிகாரிகளை அழைத்து அன்றைய முதலமைச்சர் அவர்கள் ஆலோசனை நடத்தி இருக்கிறார். அதற்கு மறுநாள் தமிழ்நாட்டில் பாதிப்பு 10,941. 26.04.2021 அன்று அதிகளவிலான தடுப்பூசிகளை வழங்க வேண்டும் என்று மாண்புமிகு பிரதமருக்கு அன்றைய முதலமைச்சர் அவர்கள் கடிதம் எழுதியிருக்கிறார். அன்றையதினம் தமிழ்நாட்டில் பாதிப்பு 15,659 ஆகிவிட்டது. தடுப்பூசி கொள்முதல் குறித்து அன்றைய முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக 28.04.2021 அன்றைய அரசின் செய்திக்குறிப்பு சொல்கிறது. அன்றைய பாதிப்பு 16,665. இதுதான் உண்மையான நிலைமை.

அதாவது, ஏப்ரல் மாதத்தில் முழுமையாக அன்றைய முதலமைச்சர் மேற்பார்வையில்தான் பணிகள் நடந்துள்ளன. ஆனால் கொரோனா கட்டுப்படுத்தப்படவில்லை என்பதுதான் உண்மை. மே 2ஆம் தேதி வாக்குகள் எண்ணப்பட்டன. அன்றைய தினம் ஏற்பட்ட பாதிப்பு 19,588. இவை அனைத்துக்கும் முந்தைய அ.தி.மு.க. அரசுதான் பொறுப்பேற்க வேண்டும். மார்ச் 6ஆம் தேதியிலிருந்தே தமிழ்நாட்டில் கொரோனா ஆதிக்கம் அதிகமாகிவிட்டது. மார்ச் 30ஆம் தேதியே தமிழ்நாட்டில் கொரோனா இரண்டாவது அலை வீசி வருகிறது என்று குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையம், தமிழ்நாடு கல்வித் துறைக்கு எச்சரிக்கை விடுத்திருக்கிறது. ஏப்ரல் 6 முதல் அதிகமாகப் பரவத் தொடங்கிவிட்டது. பாதிப்பு எண்ணிக்கை 5000–த்தில் இருந்து 19 ஆயிரம் ஆக ஆனது. எனவே, கொரோனாவை அ.தி.மு.க. அரசு கட்டுப்படுத்திவிட்டது என்ற வாதம் மிகமிகத் தவறானது. அவரை யாராவது கொரோனா தடுப்புப் பணிகளில் ஈடுபடக் கூடாது என்று கையைக் கட்டிப் போட்டு வைத்திருந்தார்களா எனத் தெரியவில்லை. ‘நடுவுல கொஞ்சம் பக்கத்தைக் காணோம்’ என்று ஒரு திரைப்படம் வந்தது. அதைப்போல பிப்ரவரி 26 முதல் மே 6 வரையிலான இரண்டு மாத ஆட்சியை அ.தி.மு.க. மறந்துவிட்டதா என்று நான் கேட்க விரும்புகிறேன். ஆட்சிக்கு வரப்போவதில்லை என்று தெரிந்ததும் அலட்சியமாக இருந்ததன் விளைவுதான் பாதிப்பு எண்ணிக்கை 26 ஆயிரம் எனக் கூடியது. இத்தகைய மோசமான சூழலைக் கட்டுப்படுத்தியதுதான் தி.மு.க. அரசின் மகத்தான சாதனை என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

கொரோனா வந்தபோது அதுபற்றி எதுவும் தெரியவில்லை, மருத்துவர்களுக்கே தெரியவில்லை, மருந்தும் இல்லை, தடுப்பூசியும் இல்லை என்று இப்போதிருக்கும் மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் சொன்னார்கள். அந்தக் குழப்பமான சூழலில்தான் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டச் சொன்னேன். பலமுறை நான் சொன்னேன். “ஸ்டாலின் என்ன டாக்டரா?” என்று இப்போதிருக்கிற மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் கேட்டார்கள். நான் உள்ளபடியே கோபப்படவில்லை.

உண்மை என்னவென்றால், கொரோனாவுக்குப் பிறகு தமிழ்நாட்டில் அனைத்துப் பொதுமக்களும் டாக்டர் ஆகிவிட்டார்கள். அதுதான் உண்மை. எல்லோருமே பாதி டாக்டராகத்தான் பேசிக்கொண்டிருக்கிறார்கள். எனவே, இனிமேல் நாம் யாருமே, யாரையுமே நீங்கள் டாக்டரா என்று கேட்க முடியாது. அந்த அளவுக்கு நிலைமை ஆகிவிட்டது.

நான் எதற்காக அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டச் சொன்னேன் என்றால், அனைத்துத் தரப்பினரது ஆலோசனையையும் கேட்க வேண்டும் என்பதற்காகத்தான். கழக ஆட்சி அமைந்ததும்,

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மாற்றுத்திறனாளிகளுக்கான கோவிட் தடுப்பூசி சிறப்பு முகாமினை தொடங்கி வைத்தார்

அனைத்துச் சட்டமன்றக் கட்சிக் குழுவை உள்ளடக்கி ஒரு குழுவை நியமித்தோம். அ.தி.மு.க. சார்பிலே கூட முன்னாள் அமைச்சர், மருத்துவர் மாண்புமிகு விஜயபாஸ்கர் அவர்கள்கூட அதில் இடம்பெற்றிருக்கிறார். இந்தக் குழுவின் ஆலோசனைகளைப் பெற்றுத்தான் இன்றைய அரசு செயல்படுகிறது. எனவே, கொரோனா தடுப்புப் பணிகள் குறித்த மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரது கோரிக்கைகளையும், ஆலோசனைகளையும் தங்கள் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்கள் மூலமாக அரசுக்கு நீங்கள் தொடர்ந்து சொல்ல வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் உரிமையோடு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கிறேன்.

ஏனென்றால், இது அரசியல் பிரச்சினை அல்ல; கட்சிப் பிரச்சினையும் அல்ல; ஆட்சியின் பிரச்சினையும் அல்ல; மக்கள் பிரச்சினை. மக்கள் நலன் சார்ந்திருக்கக் கூடிய பிரச்சினை. எதிர்க்கட்சித் தலைவர் பேசும்போது, 'நான் தவறாகச் சொல்லவில்லை, அனைவரும் சேர்ந்து செயல்பட வேண்டும்' என்று சொன்னார்கள். அதற்காக அவருக்கு நான் மீண்டும் மீண்டும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். **அனைவரும் சேர்ந்து செயல்பட்டு, அனைத்துத் தரப்பினரது ஆலோசனையையும் பெற்று கொரோனாவுக்கு முழுமையான முற்றுப்புள்ளியை இந்த அரசு வைக்கும் என்று நான் உறுதிபட இந்த அவையிலே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.**

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தி.மு.க. அரசு செய்துள்ள சாதனைகளைத் தொடர்ந்து சொல்ல வேண்டுமானால், தூத்துக்குடி ஸ்டெர்லைட் ஆலைக்கு எதிராகப் போராடியவர்கள் மீது போடப்பட்ட வழக்குகள், மக்களுக்காகக் குரல் கொடுத்த அரசியல் கட்சித் தலைவர்கள் மீதான வழக்குகள் அனைத்தும் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. ஸ்டெர்லைட் போராட்டத்தில் உயிரிழந்தவர்களின் வாரிசுகள், அதாவது 17 பேருக்கு அவர்களின் கல்வித் தகுதிக்கேற்ற வேலை வழங்கப்பட்டிருக்கிறது. ஸ்டெர்லைட் போராட்டத்தில் தாக்கப்பட்டு, காயமடைந்த 94 பேருக்கு தலா ரூ.1 இலட்சம் நிவாரணம் வழங்கப்பட்டிருக்கிறது. கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனைகள் வழங்க அனைத்துச் சட்டமன்றக் கட்சி உறுப்பினர்கள் குழு அமைக்கப்பட்டிருக்கிறது.

செங்கல்பட்டில் இருக்கும் தடுப்பூசி மையத்தையும், ஊட்டியில் உள்ள பாஸ்டர் நிறுவனத்தையும் செயல்பட வைக்க மாண்புமிகு பிரதமரை வலியுறுத்தியிருக்கிறோம். ஊடகவியலாளர்கள் கொரோனா தொற்றால் இறக்க நேரிட்டால் ரூ.10 இலட்சம் நிவாரணம் என அறிவித்து அதையும் செயல்படுத்தியிருக்கிறோம். சிங்கப்பூர் மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் உள்ளிட்ட மத்திய கிழக்கு நாடுகளிலிருந்து ஆக்சிஜன், ரெகுலேட்டர்கள், ஆக்சிஜன் நிரப்ப உருளைகள் வாங்கப்பட்டன.

கொரோனா தொற்றால் பெற்றோர்கள் இருவரையும் இழந்த குழந்தைகளுக்கு ரூ.5 இலட்சம் வைப்பு நிதி மற்றும் மாதாந்திரப் பராமரிப்பு உதவித்தொகை ரூ.3000, பெற்றோரில் ஒருவரை இழந்த குழந்தைகளுக்கு உடனடி நிவாரணமாக ரூ.3 இலட்சம், கல்வி மற்றும் விடுதிக் கட்டணத்தை அரசே ஏற்கும் என இப்படிப் பல்வேறு சலுகைகளை அறிவித்துச் செயல்படுத்தியிருக்கிறோம்.

திருக்கோயில்களில் மாத ஊதியமின்றிப் பணியாற்றக் கூடிய அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், பூசாரிகளுக்கு

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகளை நேரில் சென்று ஆய்வு செய்தார்

ரூ.4 ஆயிரம், மருத்துவ முன்களப் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை, காவலர் முதல் ஆய்வாளர் வரைக்கும் ரூ.5 ஆயிரம் ஊக்கத்தொகை, திருநங்கையருக்கு நிவாரண உதவி அளித்திருக்கிறோம்.

கொரோனா தடுப்புப் பணியில் இறந்த மருத்துவர்கள், காவல் துறையினர் ஆகியோருக்குக் குடும்பத்துக்கு ரூ.25 இலட்சம் நிதி வழங்கப்பட்டது. சென்னையில் ரூ.250 கோடி மதிப்பீட்டில் மருத்துவமனை அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மதுரையில் முத்தமிழறிஞர் கலைஞர் பெயரில் ரூ.70 கோடி மதிப்பீட்டில் மாபெரும் நூலகம் அமைக்கப்பட அறிவிப்பு செய்யப்பட்டுள்ளது.

தமிழ் எழுத்தாளர்களுக்கு இலக்கிய மாமணி விருது, அவர்கள் வாழக் கனவு இல்லம் அறிவிக்கப்பட்டது. தமிழின் தலைசிறந்த எழுத்தாளர் கி.ராஜநாராயணன் அவர்களது நினைவைப் போற்ற கோவில்பட்டியில் சிலை அமைக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் ரூ.30 கோடி செலவில் நெல் சேமிப்புக் கிடங்குகள் – உலர் களங்கள் அமைக்கப்படும். நீட் தேர்வு தாக்கம் குறித்து ஆராய்வதற்காக ஓய்வுபெற்ற நீதியரசர் ஏ.கே. ராஜன் தலைமையில் ஆணையம், தொழிற்கல்வியில் அரசுப் பள்ளி மாணவர்கள் சேர்க்கையை அதிகரிக்க ஓய்வுபெற்ற தலைமை நீதியரசர் முருகேசன் தலைமையில் ஆணையம் அமைக்கப்பட்டுள்ளது. மாநில வளர்ச்சிக் கொள்கைக் குழுவுக்குப் பேராசிரியர் ஜெயரஞ்சன் உள்ளிட்ட 8 ஆளுமைகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள்.

பதினான்கு வகையான மளிகைப் பொருட்கள் அனைத்துக் குடும்ப அட்டைதாரர்களுக்கும் ரூ.977 கோடியே 11 இலட்சம் செலவில் வழங்கப்பட்டுள்ளது. அரியலூர், கடலூர் மாவட்டங்களில் ஓ.என்.ஜி.சி. அனுமதி கேட்ட 15 எண்ணெய்க் கிணறுகளுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

மேட்டூர் அணை ஜூன் 12ஆம் நாள் திறக்கப்பட்டதைத் தொடர்ந்து, 4,061 கிலோ மீட்டர் தொலைவிலான காவிரி கால்வாய்கள் தூர்வாரும் பணி மேற்கொள்ளப்பட்டுள்ளது. தமிழ்நாட்டுக்குத் தேவையான 25 முக்கியக் கோரிக்கைகளோடு மாண்புமிகு பிரதமர் அவர்களைச் சந்தித்து அவற்றை விளக்கமாக எடுத்து வைத்திருக்கிறோம். மேகதாது அணை கட்டும் திட்டத்தைக் கைவிட வேண்டும் என்றும் கருநாடக அரசுக்குக் கண்டனம் தெரிவித்தோம். டவ்தே புயலில் காணாமல் போன 21 மீனவர்களின் குடும்பங்களுக்குத் தலா ரூ.20 இலட்சம் நிதியுதவி

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கொரோனா தொடர்பாக அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் அனைத்துத் தரப்பினரது ஆலோசனைகளைக் கேட்டறிந்தார்

அளிக்கப்பட்டுள்ளது. **மின்னகம் என்ற புதிய மின் நுகர்வோர் சேவை மையத்தைத் தொடங்கி வைத்திருக்கிறோம்.**

அதுமட்டுமின்றி, மூன்று நாட்களுக்கு முன்பு ஆளுநரின் உரை மூலமாக ஏராளமான கொள்கை அறிவிப்புகளைச் செய்திருக்கிறோம். இந்த ஆட்சி எதுவும் செய்யவில்லை என்று கூறுவோருக்கு இதுதான் என்னுடைய பதில்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **இதுவரை ஐம்பது நாட்களுக்குள் செய்திருக்கக்கூடிய மிக முக்கியமான சாதனைகளில் சிலவற்றைத்தான் நான் இங்கே சுட்டிக்காட்டியிருக்கிறேன். இவற்றை எதிர்க்கட்சிகள் வேண்டுமானால் மறைக்கலாம். ஆனால் மக்களுக்கு நிச்சயமாக நன்கு தெரியும்.**

ஆளுநர் உரை குறித்துப் பேசிய மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், "யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே என்பார்கள். இந்த அறிக்கையில் மணியோசையும் இல்லை. யானையும் இல்லை" என்று சொன்னார்கள். யானை என்று சொன்னதற்காக நான் அவரைப் பாராட்டுகிறேன். அடக்கப்பட்ட யானைக்குத்தான் மணி கட்டுவார்கள். தி.மு.க. என்பது யாராலும் அடக்க முடியாத யானை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான்கு கால்கள்தான் யானையினுடைய பலம். **'சமூகநீதி, சுயமரியாதை, மொழி–இனப்பற்று, மாநில உரிமை' ஆகிய நான்கின் பலத்தில்தான் தி.மு.க.வும் நிற்கிறது; இந்த அரசும் நிற்கிறது.** இந்த ஆளுநர் உரையைப் படிப்பவர் கண்களுக்குச் சமூகநீதியும், சுயமரியாதையும், தமிழுக்கும், தமிழருக்கும் நாங்கள் செய்ய இருக்கும் நன்மைகளும், மாநில உரிமைகளுக்கான எங்களது முழக்கங்களும் நிச்சயம் தெரியும்.

தமிழ்நாட்டின் கருவூலம் எப்படித் திசைமாறி, உருமாறி, தேய்ந்து, ஒய்ந்து கிடக்கிறது என்பது அனைவருக்கும் தெரியும். அதைச் சீர்படுத்துவதே எங்களுடைய முதல் வேலை. அதையெல்லாம் மனதிலே வைத்துத்தான் இந்திய ரிசர்வ் வங்கியின் முன்னாள் ஆளுநர் பேராசிரியர் ரகுராம் ராஜன் அவர்கள் உள்ளிட்ட பொருளாதார அறிஞர்களைக் கொண்ட ஆலோசனைக்குழு ஒன்றை அமைத்திருக்கிறோம். இன்றைய நிதி நிலைமையில், ஏழை – எளிய, நடுத்தர மக்களும், பாட்டாளி வர்க்கத்தினரும் – வாழ்வாதாரத்தை இழந்து நிற்பதால், அவர்களுக்கு நிதி ஆதாரங்களைப் பகிர்ந்தளித்து வருகிறோம்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தூத்துக்குடி ஸ்டெர்லைட் தாமிர உருக்கு ஆலை போராட்டத்தின்போது உயிரிழந்தவர்களின் வாரிசுகளுக்குப் பணி நியமன ஆணைகளை வழங்கினார்

இருப்பதை எப்படி பெருக்குவது, பெருக்கியதை எப்படிப் பகிர்ந்தளிப்பது, மாநிலத்தின் வளத்தையும், நலத்தையும் எப்படிப் பேணுவது – உயர்த்துவது என்பதை, ஆழ்ந்து, ஆராய்ந்து, "சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல்" செயலாற்றுவோம் என்ற என்னுடைய உறுதியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று நான் கோருகிறேன்.

அவசரப்பட்டு, ஆளுநர் உரையிலே அது இல்லையே, இது இல்லையே என்றெல்லாம் சொன்னீர்களே! தி.மு.க. தேர்தல் அறிக்கையில் சொல்லப்பட்டுள்ள வாக்குறுதிகள் ஆளுநர் உரையில் இடம்பெற்றுள்ளன. அவற்றை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

வேளாண்மைக்குத் தனி நிதிநிலை அறிக்கை

மீண்டும் உழவர் சந்தைகள்

இந்திய அலுவல் மொழிகளில் ஒன்றாகத் தமிழ் இருக்க வேண்டும்.

சிறு, குறு தொழில்கள் மீட்டெடுப்பு

வட மாவட்டங்களில் தொழில் பெருக்கம்

புதிய துணை நகரங்கள்

தமிழ்நாட்டில் உள்ள ஒன்றிய அரசு நிறுவனங்களிலும் பொதுத்துறை நிறுவனங்களிலும் தமிழருக்கு முன்னுரிமை

69 விழுக்காடு இட ஒதுக்கீட்டுக்குப் பாதுகாப்பு

மேகதாது அணைக்கு எதிர்ப்பு

கச்சத்தீவு மீட்பு

நீட் தேர்வு ரத்து

உள்ளாட்சித் தேர்தல்

பட்டியலினத்தவர் பணியிடம் நிரப்புதல்

சென்னைப் பெருநகர வெள்ளநீர் மேலாண்மைக்குழு அமைக்கப்படும்

திருக்கோயில்களின் பராமரிப்பைச் செம்மைப்படுத்த – ஆலோசனை வழங்க மாநில அளவில் உயர்மட்ட ஆலோசனைக்குழு

பணிபுரியும் மகளிருக்கு மாவட்டந்தோறும் மகளிர் விடுதிகள்

சச்சார் குழுவின் பரிந்துரைகளை இந்த அரசு திறம்படச் செயல்படுத்தும்

சேவைகள் உரிமைச் சட்டம் அறிமுகப்படுத்தப்படும்

நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கை

பொருளாதாரத்தை மீட்க வல்லுநர்குழு

இப்படி எத்தனையோ அறிவிப்புகள் ஆளுநர் உரையில் இடம்பெற்றுள்ளன. இவை அனைத்தும் தி.மு.க.வின் தேர்தல் அறிக்கையில் இருப்பவைதான்.

ஆளுநர் உரையிலே இருப்பதை எல்லாம் விடுத்து, இது இதெல்லாம் இல்லையே என்று ஆதங்கப்படுபவர்களுக்கு, "திருச்சியிலே நின்றுகொண்டு, அங்கே இருக்கும் மலைக்கோட்டையையும், கரைபுரண்டோடும் காவிரியையும், கல்லணையையும் காணாமல், "தில்லை நடராசர் எங்கே?" என்று கேட்பவர்களைப் பற்றி என்ன நினைப்பீர்கள்?" என்று பேறறிஞர் அண்ணா அவர்கள் சொன்னதையே நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள திருக்கோயில்களில் நிலையான மாதச் சம்பளமின்றி பணியாற்றி வரும் அர்ச்சகர்கள், பட்டாச்சாரியார்கள், பூசாரிகள் மற்றும் இதரப் பணியாளர்களுக்கு கொரோனா கால நிவாரண உதவித்தொகையாக 4,000 ரூபாய், 10 கிலோ அரிசி மற்றும் 15 வகையான மளிகைப் பொருட்கள் வழங்கும் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்

எங்களது பழைய கொள்கைகளுக்கு மாறுபாடு இருந்தால் சொல்லுங்கள். அதை விட்டுவிட்டு அதைக் குறிப்பிடவில்லை, இதைக் குறிப்பிடவில்லை என்பது சரியான குற்றச்சாட்டாக இருக்க முடியாது. ஒரு புத்தகத்தில் அனைவருடைய பெயரும் இருக்க வேண்டுமென்று சொன்னால், அது டெலிபோன் டைரக்டரியாகத்தான் இருக்க முடியும். இந்த ஆளுநர் உரை என்பது தி.மு.க. அரசாங்கம் போகும் பாதையை டைரக்ட் பண்ணும் புத்தகம்.

இந்த உரைமீது கருத்து சொன்ன, ஆலோசனைகள் சொன்ன அத்தனை பேருக்கும், அதேபோன்று, நன்றி சொல்லிப் பாராட்டிய அத்தனை பேருக்கும், ஒருவேளை நன்றி தெரிவிக்க மறந்த அனைவருக்கும் நான் இந்த நேரத்திலே நன்றி சொல்ல விரும்புகிறேன்.

முத்தமிழறிஞர்
டாக்டர் கலைஞர் அவர்களால்
உருவாக்கப்பட்ட சமத்துவபுரங்கள்
சீரமைக்கப்படும் மற்றும்
புதிய சமத்துவபுரங்கள்
அமைக்கப்படும்

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல், ஆளுநர் உரையில் இடம்பெற்றுள்ள சில முக்கிய கருத்துகளுக்குச் செயல்வடிவம் கொடுத்திடுவதற்கான சில அறிவிப்புகளை நான் வெளியிட விரும்புகிறேன்.

கொரோனா நோய்த்தொற்றுக் குறைந்துள்ளபோதும், அந்தத் தொற்றால் பாதிக்கப்பட்டுக் குணமடைந்தவர்களுக்குச் சில பிரச்சினைகள் (Complications) வருவதாகப் பலரும் தெரிவித்துள்ளனர், தொடர்ந்து தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அனைவரும் தொடர்ந்து சிகிச்சை பெறுவதற்கு **அனைத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளிலும் சிறப்பு சிகிச்சை மையங்கள் (Post COVID Clinics) தொடங்கப்படும். தேவைப்படும் உயர் சிகிச்சை மருத்துவர்களோடு (Specialist Doctors) இந்த மையங்கள் செயல்படும்.**

நம் இளைஞர்களுக்கும் பெண்களுக்கும் தகுந்த வேலைவாய்ப்பு கிடைப்பதே அவர்களின் முன்னேற்றத்திற்கும் நம் தமிழ்ச் சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் அடித்தளமாக அமையும் என நான் உறுதியாக நம்புகிறேன். இந்த நோக்கத்தோடுதான் வளர்ச்சியில் பின்தங்கியுள்ள வட மாவட்டங்களில் அதிக வேலைவாய்ப்புகளை வழங்கக்கூடிய தொழிற்சாலைகளை அமைப்போம் என்று அறிவித்திருக்கிறோம். இதன் முதற்கட்டமாக, செய்யாறில் 12,000 பேருக்கும், திண்டிவனத்தில் 10,000 பேருக்கும் வேலைவாய்ப்பு அளிக்கக்கூடிய பெரும் தொழிற்சாலைகள் அமையவுள்ளன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், காவிரி டெல்டாப் பகுதிகளில் உள்ள விவசாய பெருமக்கள் குறுவை சாகுபடி செய்ய மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து வைத்தார்

கடந்த ஆட்சியில் கருத்துச் சுதந்திரத்திற்கு எதிராக ஊடகங்கள் மீது அரசு தொடர்ந்த வழக்குகள், மூன்று வேளாண் சட்டங்களுக்கு எதிராகப் போராடிய விவசாயிகள் மீதான வழக்குகள், குடியுரிமைத் திருத்தச் சட்டத்திற்கு எதிராகப் போராடியவர்கள் மீதான வழக்குகள், மீத்தேன், நியூட்ரினோ, கூடங்குளம் அணு உலை, சேலம் எட்டுவழிச் சாலை ஆகிய திட்டங்களுக்கு எதிராக அறவழியில் போராடிய மக்கள் மீது போடப்பட்ட வழக்குகள் அனைத்தும் திரும்பப் பெறப்படும்.

ஏற்றத்தாழ்வை இடித்து, சமூகத்தைச் சமப்படுத்தப் போராடிய தந்தை பெரியார் பெயரால் 240 சமத்துவபுரங்களைக் கட்டினார் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள். அந்தச் சமத்துவபுரங்கள் சரியாகப் பராமரிக்கப்படாத அவல நிலையில் இப்போது இருக்கின்றன. அந்தச் சமத்துவபுரங்கள் உடனடியாகச் சீரமைக்கப்படும். அதுமட்டுமல்ல, தமிழகத்தில் மேலும் புதிய சமத்துவபுரங்கள் அமைக்கப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையில், திருக்கோயில்களின் புனரமைப்புக்காக ரூ.1,000 கோடி நிதி ஒதுக்கப்படும் என்ற வாக்குறுதி இருந்தது. அதற்கு முதற்கட்டமாக இந்த நிதியாண்டில் **ரூ.100 கோடி செலவில் திருக்கோயில்களைத் தொன்மை மாறாமல் புதுப்பிக்க, திருக்குளங்களைச் சீரமைத்திட, திருத்தேர்களைப் புதுப்பித்துத் திருவிழாக்கள் நடத்திடத் தேவையான பணிகள் 100 திருக்கோயில்களில் மேற்கொள்ளப்படும்.**

இங்கே பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் பலர், ஆளுநர் உரையைப் பாராட்டிப் போற்றிப் புகழ்ந்தும், ஒரு சிலர்–குறிப்பாக, எதிர்க்கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் குறைகள் எனச் சிலவற்றைச் சுட்டிக்காட்டியும் பேசி இருக்கிறார்கள். ஆளுநர் உரையில் எதுவுமே இல்லை என்பதைப் போலப் பேசுவது, உண்மையான நிலை என்று ஆகிவிடாது; மக்களும் அப்படிக் கருதிவிட மாட்டார்கள்; அவர்கள் எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிப் பொறுப்பு ஏற்ற பிறகு, அதிகாரிகளிடையே நான் பேசும்போது முதல் கூட்டத்திலே நான் சொன்னேன். “எனக்குப் புகழுரை வேண்டாம்; உண்மைகளைச் சொல்லுங்கள்” என்று வலியுறுத்தி இருக்கிறேன். அப்படி நான் சொன்னது ஆக்கப்பூர்வமான கருத்துகளை எடுத்துரைக்க வேண்டும் என்கிற அந்த நல்லெண்ணத்தில்தான். ஆனால், நிறைகளை ஒதுக்கி வைத்துவிட்டு, இல்லாத குறைகளை உருவாக்கி, ஓங்கி உரைப்பது ஆரோக்கியமான ஜனநாயகத்திற்கு வழிகாட்டுவது ஆகாது. எனினும், எதிர்க்கட்சிகளைச் சார்ந்தவர்கள் குறைகளைத் தேடிக் கண்டுபிடித்துச் சொல்லத்தான் செய்வார்கள்; அதனால்தான் அவர்கள் எதிர்க்கட்சி; மாற்றுக் கருத்துகளை, வேறுபட்ட எண்ணங்களை வெளிப்படுத்த ஜனநாயகம் இடம் அளித்திருக்கிறது. புகழுக்கு மயங்கவும் மாட்டேன். குறை கூறுவதால் குன்றிவிடவும் மாட்டேன். ஏனென்றால் இரண்டையுமே அதிகளவு எனது வாழ்க்கையில் நான் பார்த்துவிட்டேன்.

புகழுரைகள், என்னை அதிகளவு அடக்கமானவனாகவும், புகழுரைக்கும்போது அது என்னை மேலும் பக்குவப்படுத்துவதற்கு நான் பயன்படுத்துவேன். எச்சரிக்கை உள்ளவனாகவும் அது ஆக்கி இருக்கிறது. ஏன், என் மீது இதுவரை சொல்லப்பட்ட பழிகள், அவமானங்கள் ஆகியவை என்னை மேலும் மேலும் உழைக்கவும், உண்மையாக இருக்கவும்தான் தூண்டுகிறது. அப்படித்தான் நான் பயன்படுத்தப் போகிறேன்.

ஏனெனில், இந்த மன்றத்தில் வைக்கப்பட்ட புகழுரை, இகழுரை இரண்டையும் எனக்கான உரமாகவே கொண்டு எனது அரசியல் பயணத்தை நான் தொடர்கிறேன். ஒரு மாபெரும் தலைவரின் மகனாக இருந்தாலும், அந்தப் பகட்டோடு நான் என்றைக்கும் நடந்துகொண்டது கிடையாது. அந்தத் தலைவருக்குக் கடைசித் தொண்டனாகத்தான் நான் நடந்து கொண்டேன். இது எனது இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கும் தெரியும். அந்தத் தலைவருக்கும் தெரியும்.

என்னுடைய நெஞ்சமெல்லாம் நிறைந்திருக்கும் அந்த அன்புத் தலைவர், வங்கக் கடலோரத்தில் அல்ல; கோடிக்கணக்கான மக்களுடைய இதயத்தில் குடிகொண்டிருக்கிறார். முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் மறைவுக்குப் பிறகு, அவர் இடத்தில் தலைமைத் தொண்டனாகத்தான் நான் உட்கார்ந்திருக்கிறேனே தவிர, பேரறிஞர் அண்ணாவின் இடத்தில், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞரின் இடத்தில் உட்கார்ந்துவிட்டேன் என்ற கர்வம் எனக்கு ஒரு துளியும் கிடையாது. இன்றல்ல, அது என்றும் இருக்காது.

இத்தகைய மனநிலை கொண்ட நான் இந்த அவைக்குச் சொல்ல விரும்புவது, அரசியல் எல்லைகளைக் கடந்து, விருப்பு, வெறுப்புகளைக் கடந்து, தமிழ்நாட்டு மக்களுக்காக நம்மை நாமே ஒப்படைத்துக் கொள்வோம் என்பதுதான்.

ஆறாவது முறையாக, கழகம் ஆட்சிப் பொறுப்பேற்ற நாள் முதல், தமிழ்நாட்டு மக்களுக்கு ஆறுதலையும், நம்பிக்கையையும் அளித்திடும் வகையில், எப்படி நானும், அமைச்சர் பெருமக்களும் ஓயாது, ஓடியாடிப் பணியாற்றிக் கொண்டிருக்கிறோமோ, இதையெல்லாம் இந்த நாடறியும்; நல்லவர்கள் அறிவார்கள்.

நோபல் பரிசு பெற்ற அபிஜித் பானர்ஜி முதல் 'இந்து' என். ராம் வரை; பொருளாதார நிபுணர் கவுசிக் பாசு, ஒன்றிய அரசின் முன்னாள் நிதி அமைச்சரும் பொருளியல் சிந்தனையாளருமான ப. சிதம்பரம் தொடங்கி, நடுநிலை நாளேடுகள் மற்றும் இதழ்கள் வரை, கழக அரசு குறுகிய காலத்தில் நிகழ்த்தியிருக்கக்கூடிய இந்தச் சாதனைகளை வரவேற்றுப் பாராட்டி இருக்கிறார்கள். கழக அரசின் சாதனைகளுக்கு அவர்கள் நூற்றுக்கு நூறு மதிப்பெண்கள் மனமுவந்து வழங்கி இருக்கிறார்கள். அவர்கள் எல்லாம் என்னுடைய நன்றிக்குரியவர்கள்.

எங்களைப் பொறுத்தவரையில், தேர்தல் கால வாக்குறுதிகளை, வாக்குகளை ஈர்ப்பதற்கான காந்தம் எனக் கருதாமல், நாட்டின் மேம்பாட்டுக்கு, நாட்டு மக்களின் வாழ்க்கை முன்னேற்றத்திற்கு உறுதியாகச் செய்தே தீர வேண்டிய செயல்கள் என்றே நாங்கள் கருதுகிறோம்; "சொன்னதைச் செய்வோம், செய்வதைச் சொல்வோம்" என்பது, முத்தமிழறிஞர் கலைஞர் எங்களுக்குத் தந்த ஆரம்பக் கல்வி அது.

கழகம் மகத்தான வெற்றி பெற்று ஆறாவது முறை ஆட்சி அமைக்கக் காரணமான தமிழ்நாட்டு மக்களை இருகரம் கூப்பி, என்னுடைய தலை தாழ்த்தி, எனது பணிவு அனைத்தையும் ஒருங்கே திரட்டி மீண்டும் வணங்குகிறேன்; மனமும், வாயும் மணக்க மணக்க, பல்லாயிரம் முறை நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

மாற்றத்தைப் படைத்த தமிழ்நாட்டு மக்களை மறந்துவிட முடியுமா? இராமலிங்க அடிகள் மனம் உருகிச் சொன்னதைப் போல, "பெற்ற தாய்தனை மக மறந்தாலும், பிள்ளையைப் பெறும் தாய் மறந்தாலும், உற்ற தேகத்தை உயிர் மறந்தாலும், உயிரை மேவிய உடல் மறந்தாலும், கற்ற நெஞ்சகம் கலை மறந்தாலும், கண்கள் நின்று இமைப்பது மறந்தாலும்" எங்கள் இதயத்தின் இயங்கு சக்தியாக இருக்கும் தமிழ்நாட்டு மக்களை என்றைக்கும் நாங்கள் மறக்க மாட்டோம்.

ஆறாவது முறையாக அமைந்துள்ள கழக ஆட்சியின் முதலாவது ஆளுநர் உரை என்பதால், அரசியல் கட்சி, இந்த வேறுபாடுகளை எல்லாம் மறந்து, குறை எதுவும் இருப்பின் பொருட்படுத்தாமல், அதையும் மறந்து, மாண்புமிகு உறுப்பினர் உதயசூரியன் அவர்கள் முன்மொழிந்து, மாண்புமிகு உறுப்பினர் டி.ஆர்.பி. ராஜா அவர்கள் வழிமொழிந்த இந்த நன்றி அறிவிப்புத் தீர்மானத்தை அனைவரும் ஆதரித்து, புதியதொரு வரலாறு படைத்திடும் எனது முயற்சிக்கு ஊக்கமளித்திடுவீர் என்று அன்புடன், பணிவுடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிற அதே நேரத்தில், மக்களுக்குப் பணியாற்ற வேண்டியது ஒரு அரசினுடைய கடமை. அந்தக் கடமையை நிறைவேற்றுவதற்கு இந்த மாமன்றத்தில் கூடியிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒத்துழைக்க வேண்டும். இந்த விளக்கங்களுக்குப் பிறகு என்னுடைய விளக்கங்களை ஏற்று நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீது திருத்தங்களைக் கொடுத்துள்ள உறுப்பினர்கள் அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, தீர்மானத்தை நிறைவேற்றித் தர வேண்டும் எனக் கேட்டு விடைபெறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

❖ ❖ ❖

முதலீடுகளுக்கு மிகவும் உகந்த மாநிலமாக தமிழ்நாட்டை மாற்ற வேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
30.06.2021 அன்று இருங்காட்டுக்கோட்டை, ஹூண்டாய் மோட்டார் இந்தியா லிமிடெட் நிறுவனத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு ஆற்றிய உரை.

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களே,

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்களே,

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களே,

கொரிய நாட்டின் துணைத் தூதர் திரு. ஒ.எஸ். க்யோன் அவர்களே,

ஹூண்டாய் மோட்டார் கார் நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திரு. கிம் அவர்களே,

இந்த நிகழ்ச்சிக்கு வருகை தந்திருக்கக்கூடிய சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களே,

மாவட்ட ஆட்சித் தலைவர் உள்ளிட்ட அரசு அதிகாரிகளே,

ஹூண்டாய் நிறுவனத்தில் பணியாற்றிக் கொண்டிருக்கக்கூடிய அன்புக்குரிய தொழிலாள நண்பர்களே,

உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கத்தை, நன்றியை, வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

கொரோனா என்ற பெருந்தொற்றுக் காலத்தில் மருத்துவ நெருக்கடி மட்டுமல்லாமல், நிதி நெருக்கடியையும் சமாளிக்க வேண்டிய சூழல் அரசுக்கு ஏற்பட்டிருக்கிறது என்பது உங்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். இந்தச் சூழலில், அரசுக்குத் தோள் கொடுக்குமாறு, தமிழ்நாட்டு மக்களிடத்தில் முதலமைச்சர் என்கின்ற முறையில் நான் கோரிக்கை வைத்தேன். பல்வேறு தொழில் நிறுவனங்கள் இதில் பங்கெடுத்து, பல்வேறு கோணங்களில் பல உதவிகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருக்கிறது.

அதில் குறிப்பாக, ஹூண்டாய் நிறுவனம் சார்பில் ரூ.5 கோடி நிதி அளித்து அரசுக்குத் துணை நின்றிருக்கின்றது, அதற்காக முதலில் நான் இந்த நிறுவனத்திற்கு, தமிழ்நாடு அரசின் சார்பில் என்னுடைய

நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அதுமட்டுமல்ல, மருத்துவ உபகரணங்கள், மாஸ்க்குகள் மற்றும் சானிடைசர்களை இந்த ஹூண்டாய் நிறுவனம் வழங்கியிருக்கிறது. இந்த நிறுவனத்திற்கும், இதன் நிருவாகப் பொறுப்பில் இருக்கின்ற அதிகாரிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் என்னுடைய இதயப்பூர்வமான நன்றியை முதலில் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

1996ஆம் ஆண்டுக்கு முன்னால், இந்தச் சாலையில் பயணம் செய்கிறவர்களுக்குத் தெரியும், பூந்தமல்லியைத் தாண்டினால் நகரம் இருப்பது போலவே தெரியாது. ஆனால், இன்றைக்குப் பூந்தமல்லியைத் தாண்டினால் பல்வேறு தொழிற்சாலைகள் உருவாகியிருக்கிறது என்றால், அதற்குக் காரணம் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த நம்முடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான் என்பதை யாரும் மறுக்கவோ, மறைக்கவோ முடியாது. 1996ஆம் ஆண்டுக்குப் பிறகு சென்னையைச் சுற்றி பல்வேறு தொழிற்சாலைகளை உருவாக்கியவர் அன்றைக்கு முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள். சென்னையிலிருந்து திருப்பெரும்புதூர் வரை, சென்னையிலிருந்து செங்கல்பட்டு வரை, சென்னையிலிருந்து சோழிங்கநல்லூர் வரை, இப்படிப் பல்வேறு தொழிற்சாலைகள் பல பகுதிகளில் 1996ஆம் ஆண்டுக்குப் பிறகு, அதைத் தொடர்ந்து 2006ஆம் ஆண்டு முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டிருக்கிறது.

அதேபோலத்தான், இன்றைய தமிழ்நாடு அரசும் உருவாக்குவதற்குத் திட்டமிட்டிருக்கிறது என்பதை உறுதிப்படுத்த, அத்தகைய சூழலில்தான் இந்த ஹூண்டாய் நிறுவனத்திற்கு நான் வந்திருக்கிறேன். 1998ஆம் ஆண்டு முதன்முதலாக **ஹூண்டாய் கார் நிறுவனத்தின் உற்பத்தியைத் தொடங்கி வைத்தவர் முதலமைச்சராக இருந்த நம்முடைய முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான். 2008ஆம் ஆண்டு இரண்டாவது யூனிட்டைத் தொடங்கி வைத்தவரும் முதலமைச்சராக இருந்த கலைஞர் அவர்கள்தான்.** கடந்த 2011ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் இதே ஹூண்டாய் நிறுவனத்திற்கு, அப்போது துணை முதலமைச்சராக இருந்த நான் அந்த நிகழ்ச்சிக்கு வந்தேன். விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டையில் நிறுவப்பட்ட தொழிற்பயிற்சிப் பள்ளி மாணவர்களுக்கான விடுதிக் கட்டிடத்தைக் காணொலிக் காட்சி வாயிலாக நான் திறந்து வைத்தேன். பொதுவாகவே, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் எதைத் தொடங்கி வைத்தாலும் அது எந்த அளவிற்குச் செழிக்கும், பலருக்குப் பயன்படும், காலங்கள் கடந்து நிற்கும் என்பதற்கு எத்தனையோ உதாரணங்கள் உண்டு. அதில்

இந்தியாவில் தொழில் வளர்ச்சி மிகுந்த மாநிலம் என்ற பெயரையும், புகழையும் நாம் மீண்டும் அடைய வேண்டும்

குறிப்பிடத்தக்க உதாரணம் சொல்ல வேண்டுமென்றால், அதில் ஹுண்டாய் நிறுவனமும் ஒன்று என்று நாம் பெருமையோடு சொல்லியாக வேண்டும்.

ஹுண்டாய் கார் நிறுவனத்தைத் தொடங்கி வைத்துப் பேசிய முதலமைச்சர் கலைஞர் அவர்கள், இந்த நிறுவனத்தை எதற்காகப் பாராட்டினார்கள் என்று சொன்னால், 1,238 பேர்களுக்கு நீங்கள் வேலை கொடுத்தீர்கள், அதற்காகப் பாராட்டினார். அதில் 90 விழுக்காடு நபர்கள் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள் என்பதைச் சொல்லிப் பாராட்டியிருக்கிறார். இன்னும் சொன்னால், இந்த நிறுவனம் அமைப்பதற்காக இந்த வட்டாரத்தைச் சார்ந்த இருங்காட்டுக்கோட்டை, கீவளூர், தண்டலம், செட்டிமேடு ஆகிய ஊர்களைச் சார்ந்த மக்களில் 637 பேர்களுக்கு வேலை கொடுத்தீர்கள், அதையெல்லாம் குறிப்பிட்டு கலைஞர் அவர்கள் அன்றைக்குப் பாராட்டு தெரிவித்தார்கள்.

கார் தயாரிப்பு நிறுவனமாக மட்டுமல்லாமல், சேவை மனப்பான்மையோடு ஹுண்டாய் நிறுவனம் இயங்கி வருவதை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் 1998ஆம் ஆண்டே பாராட்டியிருக்கிறார்கள். அதே சேவை மனப்பான்மையோடு நாங்கள் இன்னும் இருக்கிறோம் என்பதை நிரூபிக்கக்கூடிய வகையில் ரூ.5 கோடியை கொரோனா தடுப்பு நிதியாக நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள் என்பது போற்றத்தக்கது. என்னைப் பொறுத்தவரையில், ஹுண்டாய் நிறுவனத்தைத் தமிழ்நாட்டில் அதிக முதலீடு செய்த நிறுவனமாக மட்டுமல்ல, அதிக கார்கள் உற்பத்தி செய்யக்கூடிய நிறுவனமாக மட்டுமல்ல, திருப்பெரும்புதூர் பகுதியை உலக வரைபடத்திலே ஒரு மிகப்பெரிய உற்பத்தி மையமாக மாற்றியதில் முக்கியப் பங்குகொண்ட நிறுவனமாக இந்த ஹுண்டாய் நிறுவனத்தைப் பார்க்கிறேன். அதற்காக உங்களைப் பாராட்ட, இந்த அளவிற்கு முன்னேறுவதற்கு உழைத்திருக்கக் கூடிய அத்தனை பேருக்கும் நான் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இதுவரை 1 கோடி கார்களை ஹுண்டாய் கார் நிறுவனம் உற்பத்தி செய்திருப்பது என்பது ஒரு மிகப் பெரிய சாதனை. மிகக் குறுகிய காலத்திலேயே, இந்தியாவிலேயே இரண்டாவது மிகப் பெரிய கார் உற்பத்தியாளர் என்ற பெருமையையும், வெளிநாடுகளுக்கு கார்களை ஏற்றுமதி செய்வதில் முதன்மை நிறுவனம் என்ற பெருமையையும் ஹுண்டாய் கார் நிறுவனம் பெற்றிருக்கிறது. தமிழ்நாட்டில் இதுவரை 31.3 இலட்சம் கார்களை உற்பத்தி செய்து 88 நாடுகளுக்கு ஏற்றுமதி செய்திருக்கிறீர்கள். இதனால் உங்கள் நிறுவனம் மட்டும் வளரவில்லை, தமிழ்நாடும் சேர்ந்து வளர்ந்திருக்கிறது, இதுதான் குறிப்பிடத்தக்கது. தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சிக்கு மகத்தான சேவையை ஆற்றிக்கொண்டிருக்கிறீர்கள். உங்கள் சேவையை இன்னும் கூடுதலாக விரிவுபடுத்த வேண்டும் என்றும், ஹுண்டாய் நிறுவனத்தைப்போலவே மற்ற நிறுவனங்களும் தமிழ்நாட்டில் தங்களது முதலீட்டை அதிகப்படுத்த வேண்டும் என்றும் நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய அரசு, தமிழ்நாட்டைத் தெற்கு ஆசியாவிலேயே முதலீடுகளுக்கு மிகவும் உகந்த மாநிலமாக மாற்ற வேண்டுமென்ற நோக்கத்தைக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நிகழ்ச்சியின் வாயிலாக அனைத்துத் தொழில் நிறுவனங்களுக்கும், தொழில் அதிபர்களுக்கும் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். அதற்கான அடிப்படைத் திட்டமிடுதலை நாங்கள் தொடங்கியிருக்கிறோம். உலகப் புகழ்பெற்ற பொருளாதார அறிஞர்களைக் கொண்ட ஆலோசனைக்குழுவை அமைத்திருக்கிறோம். இது, தொழில் நிறுவனங்களுக்கு மாபெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியிருக்கிறது. தமிழ்நாட்டின் மீது உலக ஊடகங்களின் கவனம் குவிய, இந்த அறிவிப்பு அடித்தளம் இட்டிருக்கிறது. இந்தக் குழு அனைத்து பொருளாதார மேதைகளாலும் பாராட்டப்பட்டுக் கொண்டிருக்கிறது. இந்தக் குழுவின் ஆலோசனையைப் பெற்று தமிழ்நாடு அரசு நிச்சயமாகச் செயல்படும். திட்டங்களை வகுப்பதற்காகவும் ஒரு குழு அமைக்கப்பட்டிருக்கிறது. இப்படிப் பல்வேறு முடிவுகளை, ஆய்வுகள் செய்து அனைத்து வகையான மேம்பாடுகளையும் நோக்கிச் செல்ல தமிழ்நாடு அரசு உறுதி கொண்டிருக்கிறது.

முதலீடுகளை அதிகம் பெற முதலில் தேவையானது நிதியல்ல, நம்பிக்கைதான், அதுதான் முதல் முதலீடு. அந்த நம்பிக்கைக் கொண்ட அரசாக தமிழ்நாடு அரசு அடையாளம் காணப்படுவதைப் பார்க்கும்போது, எனக்கு உள்ளபடியே பெருமையாக இருக்கிறது. நாங்கள் ஆட்சிக்கு வந்து இன்னும் இரண்டு மாதங்கள் கூட ஆகவில்லை, அதற்குள் இப்படிப்பட்ட நம்பிக்கையை நாங்கள் பெற்றிருக்கிறோம். **தொழில் துறையில் தொழில்நுட்ப மேம்பாட்டினை உறுதிப்படுத்த**

வேண்டும், பன்முகத் தொழில் வளர்ச்சியை உருவாக்க வேண்டும், புதிய தொழிற்சாலைகளை ஏராளமாக உருவாக்க வேண்டும், ஏற்கெனவே இருக்கக்கூடிய தொழிற்சாலைகளை விரிவுபடுத்த வேண்டும், ஒரே இடத்தில் தொழில்கள் குவிந்துவிடக் கூடாது, அனைத்து மாவட்டங்களிலும் தொழில்கள் பரவலாக அமைக்கப்பட வேண்டும், அப்படி அமைக்கப்படும் தொழிற்சாலைகளில் அந்தந்தப் பகுதியைச் சார்ந்தவர்கள், தமிழ்நாட்டு இளைஞர்கள் பெருவாரியான வேலைவாய்ப்பைப் பெற வேண்டும். தமிழ்நாட்டை நோக்கி தொழிற்சாலைகள் முதலீடு செய்ய முன்வரும் சூழல் உருவாக்கப்பட வேண்டும், தொழில் தொடங்க சாதகமான பகுதியாக அனைத்து மாவட்டங்களையும், நகரங்களையும் மாற்ற வேண்டும் என்கிற அந்த இலக்குகளோடு அரசு செயல்படத் தொடங்கியிருக்கிறது. இந்த இலக்கை நிச்சயமாக விரைவில் அடைவோம். அதற்கு ஹூண்டாய் நிறுவனம் தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்க வேண்டும். தங்களைப் போலவே, மற்ற நிறுவனங்களும் தமிழ்நாட்டில் தொழில்களைத் தொடங்க ஹூண்டாய் நிறுவனம் ஊக்கப்படுத்த வேண்டும். இந்த நிகழ்ச்சியில் கலந்துகொண்டிருக்கக்கூடிய **மாண்புமிகு தொழில்துறை அமைச்சர் திரு.தங்கம் தென்னரசு அவர்கள், தமிழ்நாட்டைத் தொழில் வளர்ச்சி மிகுந்த மாநிலமாக ஆக்கும் பணியைச் சிறப்பாக முன்னெடுத்து வருகிறார்.** “இந்தியாவின் டெட்ராய்ட்” என்று சென்னை அழைக்கப்படும் அளவிற்கு கார் உற்பத்தியில், அன்றைய தி.மு.க. ஆட்சியில் முன்னேற்றம் கண்டோம். இந்தியாவில் தொழில் வளர்ச்சி மிகுந்த மாநிலம் என்ற பெயரையும், புகழையும் நாம் மீண்டும் அடைய வேண்டும்.

1998ஆம் ஆண்டு ஹூண்டாய் நிறுவனத்தின் முதலாவது உற்பத்தியைத் தொடங்கி வைத்துப் பேசிய முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள், “தொழில் வளர்ச்சியில் தமிழ்நாடு ஐந்தாவது இடத்தில் இருக்கிறது, அதனை மூன்றாவது இடத்திற்குக் கொண்டு வருவேன்” என்று உறுதி எடுத்தார்கள், அந்த இலக்கை அடைந்தார்கள். **அதேபோல், தமிழ்நாட்டின் தொழில் வளர்ச்சியை முதலாவது இடத்திற்குக் கொண்டு வருவேன் என்று நான் இந்த நிகழ்ச்சியில் உறுதி எடுத்துக் கொண்டிருக்கிறேன்.** அந்த உறுதியை நிறைவேற்ற ஹூண்டாய் உள்ளிட்ட அனைத்துத் தொழில் நிறுவனங்களும் ஒத்துழைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். தொழில் வளர்ச்சியின் மூலமாக, நாடும், மக்களும், சமூகமும் முன்னேறுகிறது. **எனவே, தொழிற்சாலைகளை ஒரு வர்த்தகமாகப் பார்க்காமல், வாழ்க்கையாகப் பார்த்து எங்களது செயல்பாடுகள் அமையும் என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.** ஹூண்டாய் கார் நிறுவனத்தின் சாதனைகளுக்கெல்லாம் காரணமாக விளங்கும் அதனுடைய ஊழியர்களுக்கும், அலுவலர்களுக்கும், தொழிலாளத் தோழர்களுக்கும் எனது நெஞ்சார்ந்த பாராட்டுதல்களை மீண்டும் ஒருமுறை தெரிவித்து, ஹூண்டாய் கார் நிறுவனம் மேலும், மேலும் வளர்ச்சியடைய என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்து, இந்த அளவில் என் உரையை நிறைவு செய்கிறேன்.

நன்றி, வணக்கம்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 30.06.2021 அன்று காஞ்சிபுரத்தில், பேரறிஞர் அண்ணா நினைவு இல்லத்தில் அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள்.

பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு இல்லத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

படமும் / செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 30.06.2021 அன்று காஞ்சிபுரத்தில், பேரறிஞர் அண்ணா அவர்களின் நினைவு இல்லத்தைப் பார்வையிட்டார்கள். உடன் மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் திரு.தா.மோ.அன்பரசன், நாடாளுமன்ற உறுப்பினர் திரு.க.செல்வம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.க.சுந்தர், திரு.சி.வி.எம்.பி.எழிலரசன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், இ.ஆ.ப., ஆகியோர் உள்ளனர்.

வேலைவாய்ப்புக்குத் தகுந்த பாடத்திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் 02.07.2021 அன்று ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் 02.07.2021 அன்று தலைமைச் செயலகத்தில், உயர்கல்வித் துறையின் செயல்பாடுகள் குறித்தும், துறையின் நோக்கங்களை அடைய எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உயர்கல்வியில் மாணாக்கர்களின் சேர்க்கையை மேலும் அதிகரிக்கவும், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும், பல்கலைக்கழகங்களின் தரத்தினை உயர்த்திடவும் அறிவுறுத்தினார்கள்.

அகில இந்திய அளவில் தமிழகத்தில் உயர்கல்வி மாணாக்கர்களின் சேர்க்கை விகிதம் 51.4. இது தேசிய அளவிலான (27.1) மாணாக்கர்களின் சேர்க்கை விகிதத்தைவிட அதிகமாக இருப்பினும், தமிழகத்தில் சில மாவட்டங்களில் இவ்விகிதம் குறைவாகவே இருந்து வருகிறது. இந்நிலையைச் சீர் செய்யும் விதமாக அடுத்த 10 ஆண்டுகளுக்கான தொலைநோக்குத் திட்டங்கள் குறித்து விவாதிக்கப்பட்டது. மாணாக்கர்களுக்குக் கல்வி ஊக்கத்தொகை வழங்குவதுடன் வேலைவாய்ப்புக்குத் தகுந்த பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்தவும், தேவையான வருவாய் வட்டங்களில் புதிய கல்லூரிகள் துவங்கவும் ஆலோசிக்கப்பட்டது. கல்வி நிறுவனங்களின் தரத்தை உயர்த்தவும், தேசிய மதிப்பீடு மற்றும் தரச் சான்றிதழ் (NAAC) பெற முயற்சிக்கவும், தேசிய நிறுவனத் தர வரிசைக் கட்டமைப்பில் முதல் 10 இடங்களுக்குள் முன்னேறுவது குறித்தும் செயல் திட்டங்கள் விவாதிக்கப்பட்டது.

பலவகைத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் மாணவியரின் சேர்க்கை விகிதாச்சாரத்தை அதிகரிக்கவும், அரசுப் பள்ளி மாணவர்கள் அதிகளவில் உயர்கல்வி பெற வழிவகுப்பது குறித்தும் விவாதிக்கப்பட்டது. GATE தேர்வில் மாணாக்கர்களின் தேர்ச்சி விகிதத்தை அதிகரிக்கப் பயிற்சி வகுப்புகள் நடத்த முடிவெடுக்கப்பட்டது. தொழில்நுட்பக் கல்லூரிகளின் தரத்தை மேம்படுத்தும் விதமாக உள்கட்டமைப்பு வசதிகளை அதிகரிக்கவும், திறன்மிகு வகுப்பறைகள் (Smart Class Room) மற்றும் மின் ஆளுமை திட்டத்தைச் செயல்படுத்தவும் முடிவு செய்யப்பட்டது. தொழிற்சாலைகளுடன் இணைந்து செயல்பட்டு மாணாக்கர்களுக்கு புதிய வாய்ப்புகளை உருவாக்கவும், பேராசிரியர்களுடன் மாணாக்கர்கள் இணைந்து புதிய உத்திகளை முயற்சிக்கவும், கட்டமைப்புகளை உருவாக்க முடிவெடுக்கப்பட்டது. பொறியியல் கல்லூரிகளில் மாணாக்கர்களுக்கான தங்கும் விடுதிகளை அதிகரிப்பது குறித்து விவாதிக்கப்பட்டது.

கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் வேலைவாய்ப்பு மையத்தின் (Placement Cell) தரத்தை மேம்படுத்தவும், வேலைவாய்ப்புக்கு உகந்த புதிய பாடத்திட்டங்களை அறிமுகப்படுத்தவும் முடிவெடுக்கப்பட்டது. கலை, அறிவியல்

மற்றும் கல்வியியல் கல்லூரிகளின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்குப் பயன்படும் வகையில் மின்னணு நூலகங்கள் ஏற்படுத்த முடிவு செய்யப்பட்டது. கல்லூரி வளாகங்களில் மாற்றுத்திறனாளிகளுக்கான உகந்த சூழல் ஏற்படுத்த முடிவெடுக்கப்பட்டது.

பல்கலைக்கழகங்கள் தரத்தை மேம்படுத்தவும் நிலையான நிதி மேலாண்மையை உருவாக்கி நிதிச் சுமையைச் சீராக்கக் கலந்தாலோசிக்கப்பட்டது. உலக மற்றும் தேசிய அளவில் புகழ்பெற்ற அறிஞர்களை இணைய வழியில் விரிவுரைகள் வழங்க வசதிகள் ஏற்படுத்தவும், கற்றலை மேம்படுத்தும் விதமாக, கற்றல் மேலாண்மைத் தளத்தை (LMS) உருவாக்கவும் ஆலோசிக்கப்பட்டது. கல்வி நிறுவனங்களில் முன்னாள் மாணவர்களின் பங்களிப்பை அதிகரிக்கவும், மாணாக்கர்களின் திறன்களை வெளிக்கொணரும் விதமாகத் தமிழ்ப் பாரம்பரியக் கலைத் திருவிழாக்கள் கொண்டாடவும் முடிவெடுக்கப்பட்டது.

அதிக அளவில் உள்ள உயர்கல்வி நிறுவனங்களின் காலிப் பணியிடங்களை வெளிப்படைத் தன்மையுடன் நிரப்ப ஆலோசிக்கப்பட்டது.

தமிழ்நாடு ஆவணக் காப்பகத்தில் உள்ள அனைத்து அரியவகை மற்றும் பாதுகாக்கப்பட்ட ஆவணங்களை மின்னணுமயமாக்க முடிவு செய்யப்பட்டது. தேசிய உயர்கல்வித் திட்டத்தின் மூலம் உயர்கல்வி நிறுவனத்தின் தரத்தை உயர்த்துவதற்கும், ஆசிரியர்களின் திறன் மேம்பாட்டிற்கும், ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கப் பயிற்சிகளுக்காகவும், திறன்படப் பயன்படுத்த அறிவுறுத்தப்பட்டது.

அண்ணா பல்கலைக்கழகத்தின் புதிய முயற்சியாக அரசின் உதவியுடன் அனைத்துத் துறைகளிலும் டிரோன்களை பயன்படுத்தும் விதமாகப் புதிய டிரோன் கார்ப்பரேஷன் நிறுவ ஆலோசிக்கப்பட்டது.

அமெரிக்க இலினொய் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத் தலைவராகப் பொறுப்பேற்றிருக்கும் திரு. ராஜகோபால் ஈச்சம்பாடி அவர்களுக்கு வாழ்த்து

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் வாழ்த்துச் செய்தி – 18.06.2021

இலினொய் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத் தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் தமிழரான திரு. ராஜகோபால் ஈச்சம்பாடி அவர்களுக்கு எனது வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அமெரிக்காவில் உள்ள 131 ஆண்டுகள் பழமையானதும், உலகப் புகழ்பெற்றதுமான இந்தத் தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தின் தலைவராகப் பொறுப்பேற்கும் முதல் இந்தியர் திரு. ராஜகோபால் ஈச்சம்பாடி அவர்கள் என்பதால், தமிழர்களுக்கும், தமிழ்நாட்டிற்கும் மட்டுமின்றி இந்தியத் துணைக் கண்டத்திற்கே உலகளாவிய பெருமையை அவர் பெற்றுத் தந்திருக்கிறார்.

53 வயதாகும் திரு. ராஜகோபால் ஈச்சம்பாடி அவர்கள் திருவாரூரில் பிறந்து, சென்னையில் பள்ளி மற்றும் கல்லூரிப் படிப்பையும், அண்ணா பல்கலைக் கழகத்தின் வளாகக் கல்லூரியான கிண்டி பொறியியல் கல்லூரியில் தமது மேற்படிப்பையும் பயின்றவர்.

வரும் ஆகஸ்ட் 16 அன்று இலினொய் தொழில் நுட்பப் பல்கலைக்கழகத் தலைவராகப் பொறுப்பேற்க இருக்கும் திரு. ராஜகோபால் ஈச்சம்பாடி அவர்கள், தொழில்நுட்பம் மற்றும் ஆராய்ச்சியில் அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் சென்னை ஐ.ஐ.டி.யுடன் இணைந்து செயல்பட விரும்புவதாகத் தெரிவித்திருப்பது, பிறந்த மண் மீது அவர் கொண்டுள்ள மதிப்புமிகு பற்றுதலின் வெளிப்பாட்டைக் காட்டுகிறது!

தமிழர்களின் தொழில்நுட்ப அறிவின் உலகளாவிய உயரத்திற்குச் சான்றாக விளங்கும் திரு. ராஜகோபால் ஈச்சம்பாடி அவர்களுக்கு, தமிழ்நாட்டு மக்களின் சார்பில் எனது நெஞ்சார்ந்த வாழ்த்துகளைப் பெருமிதத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தேமதுரத் தமிழர் புகழ் திக்கெட்டும் பரவட்டும்!

பள்ளி மாணவர்களுக்கு ரூ.292 கோடியில் கல்வித் தொலைக்காட்சி

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வியை ஊக்குவிக்கும் வண்ணமாக, அம்மாணவர்களுக்கு அரசு, பாடநூல்களை வழங்கி வருகிறது.

2021–2022ஆம் கல்வியாண்டிற்கான மாணவர் சேர்க்கை தமிழ்நாடு முழுவதும் சிறப்பாக நடைபெற்று வரும் நிலையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 19.06.2021 அன்று சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், பள்ளி மாணவ, மாணவியர்களுக்குப் பாட நூல்களை வழங்கியும், கொரோனா பெருந்தொற்றுப் பரவல் காரணமாகப் பள்ளி செல்ல இயலாமல் இருக்கும் மாணவர்கள், வீட்டிலிருந்தபடியே கல்வி பயில ஏதுவாக 1 முதல் 12 வரை அனைத்து வகுப்புகளுக்கும் உரிய அனைத்துப் பாடங்களுக்குமான கல்வித் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைத் தொடங்கி வைத்தார்கள். இத்திட்டம் சுமார் ரூ.292 கோடி செலவில் செயல்படுத்தப்படுகிறது. இதனால், அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 69 இலட்சம் மாணவர்கள் பயன்பெறுவர்.

அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்குப் பாடநூல்களை வழங்கி, கல்வித் தொலைக்காட்சியில் 1 முதல் 12ஆம் வகுப்பு வரையிலான அனைத்துப் பாடங்களுக்கான நிகழ்ச்சிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 19.06.2021 அன்று சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலகத்தில் தொடங்கி வைத்தார்கள்.

அதனைத் தொடர்ந்து, அம்மாணவ, மாணவியர்களிடம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் நலம் விசாரித்து, அவர்களுக்குப் பேனா மற்றும் சாக்லேட்டுகளை வழங்கிக் கலந்துரையாடினார்கள்.

பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு மதிப்பெண் வழங்கும் முறை

பன்னிரண்டாம் வகுப்பு மாணவர்களுக்கு
மதிப்பெண் வழங்குதல் குறித்து
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் அறிவிப்பு–26.06.2021.

கொரோனா பெருந்தொற்றின் காரணமாக 2020–2021ஆம் கல்வியாண்டில் நடக்கவிருந்த பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வுகள் ஏற்கெனவே ரத்து செய்யப்பட்டுள்ளன. மாணவர்களுக்கு மதிப்பெண் வழங்கும் முறையை முடிவு செய்வதற்காகப் பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் தலைமையில் உயர் கல்வித் துறை முதன்மைச் செயலாளர், சென்னை பல்கலைக்கழகத் துணைவேந்தர், பள்ளித் தலைமை ஆசிரியர்கள் உள்ளிட்ட அலுவலர்கள் அடங்கிய குழு அரசுக்குத் தனது அறிக்கையை அளித்துள்ளது.

10, 11ஆம் வகுப்புப் பொதுத் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண்கள் ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளன. 12ஆம் வகுப்பு செய்முறைத் தேர்வுகள் நடத்தி முடிக்கப்பட்டு, அதற்கான மதிப்பெண்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில், 12ஆம் வகுப்புக்கான இறுதி மதிப்பெண்களைக் கீழ்க்கண்ட விகிதாச்சார அடிப்படையில் வழங்க வல்லுநர் குழு பரிந்துரைத்துள்ளது :

வ. எண்	தேர்வு	விகிதம்
1.	10ஆம் வகுப்புப் பொதுத் தேர்வு (உயர் மதிப்பெண் பெற்ற 3 பாடங்களுடைய சராசரி)	50%
2.	11ஆம் வகுப்புப் பொதுத் தேர்வு (ஒவ்வொரு பாடத்திலும் பெற்ற எழுத்துமுறை (Written) மதிப்பெண் மட்டும்)	20%
3.	12ஆம் வகுப்பு செய்முறைத் தேர்வு (Practical) / அக மதிப்பீடு (Internal)	30%

- 12ஆம் வகுப்பில் ஒவ்வொரு பாடத்திலும் செய்முறைத் தேர்வு (20) மற்றும் அக மதிப்பீட்டில் (10) என மொத்தம் 30க்குப் பெற்ற மதிப்பெண் முழுவதும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.
- செய்முறைத் தேர்வு இல்லாத பாடங்களில் அக மதிப்பீட்டில் (10) பெற்ற மதிப்பெண் 30 மதிப்பெண்களுக்காக மாற்றப்பட்டு (Extrapolated to 30 Marks) முழுவதும் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.
- கொரோனா பெருந்தொற்று உள்ளிட்ட பல்வேறு காரணங்களுக்காக 12ஆம் வகுப்பு செய்முறைத் தேர்வுகளில் பங்குபெற இயலாத மாணவர்களுக்கு அவர்களின் 11ஆம் வகுப்பு செய்முறைத் தேர்வுகளில் பெற்ற மதிப்பெண் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.
- 11ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு செய்முறைத் தேர்வுகள் இரண்டிலும் பங்குபெற இயலாத மாணவர்களுக்கு அவர்களின் 10ஆம் வகுப்பு மற்றும் 11ஆம் வகுப்பு எழுத்துத் தேர்வுகளின் அடிப்படையில் 12ஆம் வகுப்பு செய்முறைத் தேர்வு மதிப்பெண் வழங்கப்படும்.
- கடந்த ஆண்டு 11ஆம் வகுப்பு எழுத்துத் தேர்வில் ஏதேனும் பாடங்களில் தோல்வி அடைந்திருந்தாலோ, தேர்வு எழுத இயலாத நிலை இருந்திருந்தாலோ, அம்மாணவர்களுக்கு தற்போது அத்தேர்வுகளை மீண்டும் எழுத வாய்ப்பு இல்லாத நிலையைக் கருத்தில்கொண்டு, 35 விழுக்காடு மதிப்பெண் வழங்கப்படும்.
- 11ஆம் வகுப்பு எழுத்துத் தேர்வு, அக மதிப்பீடு, செய்முறைத் தேர்வு மற்றும் 12ஆம் வகுப்பு அக மதிப்பீடு, செய்முறைத் தேர்வு ஆகிய தேர்வு நிலைகளில் ஒன்றில்கூட கலந்துகொள்ளாத மாணவர்கள் தனித் தேர்வர்களாகத் தேர்வு எழுத வாய்ப்பு வழங்கப்படும்.

- ஒவ்வொரு மாணவருடைய மதிப்பெண்ணும் மேற்கூறிய முறைகளில் கணக்கிடப்பட்டு, உச்சநீதிமன்ற ஆணைப்படி ஜூலை 31ஆம் தேதிக்குள் அரசுத் தேர்வுகள் துறை இணையதளத்தில் வெளியிடப்படும்.
- இம்மதிப்பீட்டு முறையில் கணக்கிடப்படும் மதிப்பெண்கள் தமக்குக் குறைவாக உள்ளதாகக் கருதும் மாணவர்களுக்கு, அவர்கள் விரும்பினால் 12ஆம் வகுப்பு எழுத்துத் தேர்வெழுத வாய்ப்பு வழங்கப்படும். அவ்வாறு நடத்தப்படும் தேர்வில் அவர்கள் பெறும் மதிப்பெண்ணே அவர்களது இறுதி மதிப்பெண்ணாக அறிவிக்கப்படும்.
- தனித்தேர்வு எழுதவிருக்கும் மாணவர்களுக்கு கொரோனா பெருந்தொற்றுப் பரவல் சீரடைந்தவுடன், மேற்குறிப்பிட்டோருடன் சேர்த்துத் தக்க சமயத்தில் தேர்வு நடத்தப்படும். இத்தேர்விற்கான கால அட்டவணை பின்னர் அறிவிக்கப்படும்.



சிலம்புச் செல்வர் ம.பொ.சி.

எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்

ம.பொ.சி.யின் பார்வையில் தமிழ்மொழி எனும் நோக்கில் பார்க்கும் பொழுது அவருடைய தமிழ் இயக்கத்திற்காக உருவாக்கிய முழக்கம் தான் 'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்' என்பதாகும். இன்று பரவலாக ஒலிக்கப்பெறும் இந்தத் தமிழ் முழக்கத்தை முதன் முதலில் அவர்தான் வழங்கினார்.

தமிழினமே ஒன்றுபடு

கட்சி அரசியல் பேசாமல் பொது அரசியலைப் பேசவே தமிழரசுக் கழகத்தைத் தோற்றுவித்த ம.பொ.சி., தமிழர்களுக்குப் பொதுவான கோரிக்கைகளை நிறைவேற்ற "தமிழினமே ஒன்றுபடு" எனும் முழக்கத்தையும் எழுப்பினார்.

மொழிக்கலப்பு

ம.பொ.சி.யின் கொள்கை

"தமிழ் தனித்தியங்கும் மொழி. இன்னொன்றின் கிளை மொழியன்று. எனவே, தேவையில்லாத இடத்தில் பிறமொழிச் சொற்களைப் பிடிவாதமாகப் புகுத்துவது தமிழுக்குத் தீங்கு செய்வதாகும்'' என்பது ம.பொ.சி.யின் மொழியுணர்வுச் சிந்தனைகளில் ஒன்றாகும்.

தமிழும் கலப்படமும்

தமிழில் பிறமொழிக் கலப்பு பற்றிக் குறிப்பாக சமஸ்கிருத மொழிக் கலப்பு பற்றி தனிக்கவனம் செலுத்தி ம.பொ.சி.யின் இரு நூல்கள் வெளிவந்துள்ளன. முதலாவதாக 'தமிழும் கலப்படமும்', இரண்டாவதாக 'தமிழும் சமஸ்கிருதமும்' என்பன அவ்விரு நூல்களாகும்.

மொழி சிக்கலும் மாநில சுயாட்சியும்

"இந்தி மொழி ஆதிக்கம் ஏற்படுவதைத் தவிர்க்கின்ற அதே நேரத்தில் ஆங்கில மொழியின் ஆதிக்கத்தையும் தகர்த்தாக வேண்டும். இந்த இரு மொழிகளின் ஆதிக்கங்களிலிருந்தும் தமிழ் மொழியும், தமிழினத்து மக்களும் விடுதலை பெற்றாக வேண்டும், இதுவே தமிழரசுக் கழகத்தின் கொள்கை'' என்று ம.பொ.சி. "மொழி சிக்கலும் மாநில சுயாட்சியும்'' எனும் நூலில் கூறியுள்ளார்.

ம.பொ.சி. பார்வையில் தமிழ்ப் பண்பாடு

தமிழ்ப் பண்பாடு பற்றிய தமது கருத்தை ம.பொ.சி. "தமிழன் குரல்'' நூலில், 1947இல் பின்வருமாறு விளக்கியுள்ளார்.

தனித் தேசிய இனத்துக்குத் தனித்த பண்பாடும் இருக்க வேண்டும். தமிழருக்கு அத்தகைய பண்பாடு உண்டு. ஆனால், பொய்யும் வழுவும் புகுந்த காலத்தில் பிற நாட்டார் எழுதி வைத்த அல்லது எழுதச் செய்த ஏடுகளைப் புரட்டிப்பார்க்காமல் சங்க காலத்தில் தோன்றிய திருக்குறள், புறநானூறு, அகநானூறு போன்ற தமிழ் நூல்களை ஆராய்ந்து பார்த்தால், அவற்றில் காணப்படும் பண்பாடு தமிழினத்திற்கே உரிய தனிப்பண்பாடு என்பதை எவரும் ஏற்பர்.

எந்த அலையையும் தாங்கும் வல்லமை இந்த அரசுக்கு உண்டு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் – 04.07.2021

அன்பார்ந்த மக்கள் அனைவருக்கும் வணக்கம்!

கொரோனா என்ற பெருந்தொற்றில் இருந்து மீண்டு வருகிறோம். கொரோனா பரவல் கட்டுக்குள் வந்துவிட்டது. இந்தப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக அரசால் அறிவிக்கப்பட்ட முழு ஊரடங்கு விதிகளை முழுமையாகக் கடைப்பிடித்த நாட்டு மக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தப் பெருந்தொற்றால் பாதிக்கப்பட்ட மக்களை, தங்களது உயிரைப் பணயம் வைத்துக் காப்பாற்றிய மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் முன்களப் பணியாளர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாளொன்றுக்கு 36 ஆயிரத்தைத் தொட்ட தொற்றுப் பாதிப்பானது இப்போது 4 ஆயிரத்துக்கும் கீழே குறைந்து வருகிறது.

முழு ஊரடங்கு, மருத்துவர்களின் அர்ப்பணிப்பு, மாநிலத்தின் மருத்துவக் கட்டமைப்பு, துடிப்பான நிருவாகம் ஆகிய நான்கின் காரணமாகவும்தான் இந்தளவுக்கு நாம் வெற்றியைப் பெற முடிந்தது. இன்றைய தகவல்களின் அடிப்படையில் ஏராளமான படுக்கைகள் தயார் நிலையில் இருக்கின்றன. ஆக்சிஜன் படுக்கைகளாக இருந்தாலும், தீவிர சிகிச்சைப் பிரிவு படுக்கைகளாக இருந்தாலும் ஏராளமாக உள்ளன.

எந்த அலையையும் தாங்கும் வல்லமை இந்த அரசுக்கு உண்டு. அந்த நம்பிக்கை தமிழ்நாட்டு மக்களுக்கும் உண்டு என்பதை நானும் அறிவேன்!

நான் இப்போது நாட்டு மக்களிடம் சொல்ல விரும்புவது ஒன்றே ஒன்றுதான். கொரோனாவைக் கட்டுப்படுத்திவிட்டோம் என்று சொல்லலாமே தவிர, முழுமையாக ஒழித்துவிட்டோம் என்று சொல்ல முடியாது. எனவே, மக்கள் யாரும் அலட்சியமாக இருந்து விடக்கூடாது.

தளர்வுகள் அறிவித்துவிட்டார்கள், அதனால் நாம் எந்த விதிமுறைகளையும் பின்பற்றத் தேவையில்லை என்று யாரும் நினைக்கக் கூடாது.

இன்னமும் பள்ளி, கல்லூரிகள் திறக்கப்படவில்லை. அரசியல் மற்றும் சமுதாய விழாக்கள் அனுமதிக்கப்படவில்லை. திரையரங்குகளைத் திறக்கவில்லை. பூங்காக்கள் திறக்கவில்லை ஏனென்றால் இவை எல்லாம் மக்கள் அதிகமாகக் கூடும் இடங்கள்.

இப்படித் திறக்காமல் இருக்கிறோம் என்றால், ஏன் என்ற காரணத்தை உணர்ந்து மக்கள் எச்சரிக்கை உணர்வுடன் இருக்க வேண்டும்.

உணவகங்கள், கடைகள், மற்ற முக்கிய சேவைகள், பொதுப்போக்குவரத்து, அரசு மற்றும் தனியார் அலுவலகங்களுக்கு அனுமதி தருவதற்குக் காரணம், மக்களின் வாழ்வாதாரத்தின் மீது உள்ள அக்கறையால்தான்.

முழு ஊரடங்கு காரணமாக மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படுகிறது, அவசியமான பொருள்களைக் கூட வாங்குவதில் சிரமம் இருக்கிறது, அதேபோல் மாநிலத்தில் பொருளாதாரமும் சுணக்கம் அடைகிறது ஆகிய மூன்று காரணங்களால்தான் பல்வேறு தளர்வுகளை அறிவித்தோம்.

இந்தத் தளர்வுகளுக்கு உள்ளார்ந்த பொருள் இதுதான். அதனைத் தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

கொரோனாவை வெல்வதற்குத் தடுப்பூசிதான் மிகப்பெரிய ஆயுதமும் கேடயமும் ஆகும். தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் முழுமையாக நாம் இன்னும் தடுப்பூசி போட்டு முடிக்கவில்லை. ஒன்றிய அரசால் நமக்கு வழங்கப்பட்ட தடுப்பூசியைப் போட்டுள்ளோம். அவர்களும் முழுமையாக நமக்கு வழங்கவில்லை.

பள்ளிப் பிள்ளைகளுக்குத் தடுப்பூசி போடுதல் குறித்து இன்னும் மருத்துவ வல்லுநர்கள் முடிவுகள் எடுக்கவில்லை. குழந்தைகளுக்கான தடுப்பூசி ஆலோசனைகள் நடந்துகொண்டு இருக்கின்றன. இப்படி எல்லாத் தரப்பினருக்கும் தடுப்பூசி செலுத்தி முடிக்க வேண்டும். அப்படிச் செலுத்துவதை மக்கள் இயக்கமாகவே மாற்றுவதற்கு அரசு தயாராக இருக்கிறது.

முழுமையான அளவுக்குத் தடுப்பூசிகள் கிடைக்காத நிலையில் மக்கள் இன்னும் கூடுதல் எச்சரிக்கையுடன் இருந்தாக வேண்டும்.

என்னைப் பொறுத்தவரையில் தமிழ்நாட்டு மக்களுக்கு நான் வைக்கும் ஒரே ஒரு கோரிக்கை, மக்கள் அனைவரும் தங்களுக்குத் தாங்களே சுயக்கட்டுப்பாட்டை விதித்துக்கொள்ள வேண்டும். தேவைக்கு, அவசியத்தின் காரணமாக மட்டுமே வெளியில் வாருங்கள். அப்படி வரும்போதும் கொரோனா தடுப்பு விதிமுறைகளைப் பின்பற்றுங்கள்.

- வீட்டை விட்டு வெளியில் வரும் எல்லோரும் முகக்கவசம் அணியுங்கள்.
- கூட்டமாகக் கூடுவதைத் தவிர்த்துவிடுங்கள்.
- வரிசையில் நின்று வாங்குங்கள்.
- வரிசையில் நிற்கும்போதும் போதிய தனிமனித இடைவெளியைப் பின்பற்றுங்கள்.
- பொதுப் போக்குவரத்தைப் பயன்படுத்தும்போதும், அதிகமான கூட்டம் இருக்கும் இடத்திலும் இரண்டு முகக்கவசங்களைக் கூட பயன்படுத்தலாம்.
- கைகளை அடிக்கடி சோப்பு மற்றும் கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்யுங்கள்.
- கடைகளில் இருக்கும் ஊழியர்கள் அனைவரும் முகக்கவசங்கள் பயன்படுத்துங்கள்.
- அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் முகக்கவசம் அணிந்தே பணியாற்றுங்கள்.
- கடைகளின் நுழைவுவாயில்களில் கை சுத்திகரிப்பானை வையுங்கள். உடல் வெப்பநிலைப் பரிசோதனைக் கருவிகள் கொண்டு பரிசோதனை செய்யுங்கள்.
- கடைகளுக்குள் ஒரே நேரத்தில் அதிகப்படியான ஆட்களை அனுமதிக்க வேண்டாம்.
- நோய்த்தொற்று அறிகுறி தென்பட்டால் உடனடியாக மருத்துவமனைக்குச் செல்லுங்கள். நீங்களாகவே தெரிந்த சிகிச்சை முறைகளைச் செய்துகொள்ள வேண்டாம்.

இவை எல்லாமே மிகமிகச் சாதாரணக் கட்டுப்பாடுகள்தான். இதனைப் பின்பற்றி நடந்து கொண்டாலே கொரோனா தொற்று ஏற்படாமல் தடுக்கலாம்.

இந்தக் கட்டுப்பாடுகள் எல்லாம் அரசாங்கத்தின் கட்டுப்பாடுகள் இல்லை. மக்கள் தங்களுக்குத் தாங்களே போட்டுக்கொள்ளக் கூடிய சுயக்கட்டுப்பாடுகளாக மாற வேண்டும்.

அந்த அடிப்படையில் ஒவ்வொரு மனிதரும் தங்களுக்குத் தாங்களே காவல் அரணாக இருக்க வேண்டும்.

தளர்வுகளின்போது கட்டுப்பாட்டு விதிமுறைகளை மீறினால்தான் மூன்றாவது அலை வரக்கூடிய சூழல் எழும் என்கிறார்கள் மருத்துவர்கள். கட்டுப்பாடுகளை நாம் ஒழுங்காகக் கடைப்பிடித்தால் எந்த அலையும் உள்ளே வர முடியாது.

எனவே மக்கள் எல்லோரையும் நான் கேட்டுக் கொள்வது,

தளர்வுகள் தரப்பட்டுவிட்டது என்று சொல்லி விதிமுறைகளை மீறி நடக்க வேண்டாம்.

விதிக்கப்பட்ட விதிமுறைகள் அமலில்தான் உள்ளன.

விதிமுறைகளைப் பின்பற்றி நம்முடைய மதியால் கொரோனாவை வெல்வோம்.

நம்மையும் காப்போம்!

நாட்டையும் காப்போம்!

நன்றி வணக்கம்!

கொரோனா நோய்த்தொற்றினை முற்றிலும் அகற்றிட அரசின் முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவிப்பு–25.06.2021.

கொரோனா பெருந்தொற்று ஒன்றிய அரசால் பேரிடராக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில், 25.03.2020 முதல் தேசியப் பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், ஊரடங்கு நடைமுறையில் இருந்து வருகிறது. மாநிலத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களில் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு, நோய்த்தொற்றுப் பரவல் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகிறது. மாவட்டங்களில் உள்ள நோய்த்தொற்றுப் பரவலின் அடிப்படையில், மாவட்டங்கள் 3 ஆக வகைப்படுத்தப்பட்டு, நடைமுறையில் உள்ள ஊரடங்கு 28.06.2021 அன்று காலை 6 மணியுடன் முடிவடையும் நிலையில், தமிழ்நாட்டில் பெரும்பான்மையான மாவட்டங்களில் நோய்த்தொற்றுப் பரவல் குறைந்துள்ளதைத் தொடர்ந்து பல்வேறு தளர்வுகளுடன் இந்த ஊரடங்கை 05.07.2021 காலை 6 மணி வரை, நீட்டிப்பு செய்து உத்தரவிட்டுள்ளேன்.

மாவட்டங்களில் உள்ள நோய்த் தொற்றுப் பாதிப்பின் அடிப்படையில், ஏற்கெனவே மாவட்டங்கள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

வகை 1 – (11 மாவட்டங்கள்)

கோயம்புத்தூர், நீலகிரி, திருப்பூர், ஈரோடு, சேலம், கரூர், நாமக்கல், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மாவட்டங்கள்.

வகை 2 – (23 மாவட்டங்கள்)

அரியலூர், கடலூர், தருமபுரி, திண்டுக்கல், கள்ளக்குறிச்சி, கன்னியாகுமரி, கிருஷ்ணகிரி, மதுரை, பெரம்பலூர், புதுக்கோட்டை, இராமநாதபுரம், இராணிப்பேட்டை, சிவகங்கை, தேனி, தென்காசி, திருநெல்வேலி, திருப்பத்தூர், திருவண்ணாமலை, தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி, விழுப்புரம், வேலூர் மற்றும் விருதுநகர் மாவட்டங்கள்.

வகை 3 – (4 மாவட்டங்கள்)

சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், செங்கல்பட்டு மாவட்டங்கள்.

வகை 1இல் உள்ள மாவட்டங்களில் நோய்த் தொற்று குறைந்து வருவதைக் கருத்தில்கொண்டு ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டுள்ள சில கடைகள் / செயல்பாடுகளுக்கு மாலை 7 மணி வரை நேரத் தளர்வு அளிப்பதுடன், கூடுதலாகப் பின்வரும் செயல்பாடுகளும் அனுமதிக்கப்படுகிறது.

❖ தேநீர்க் கடைகளில் காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை பார்சல் சேவை மட்டும் அனுமதிக்கப்படும்.

❖ மின் சாதனப் பொருட்கள், பல்புகள், கேபிள்கள், ஸ்விட்ச்கள் மற்றும் ஒயர்கள் விற்பனை செய்யும்

கடைகள் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ ஹார்டுவேர் கடைகள் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ கல்விப் புத்தகங்கள் மற்றும் எழுதுபொருட்கள் விற்பனை செய்யும் கடைகள் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ காலணிகள் விற்பனை செய்யும் கடைகள் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ பாத்திரக் கடைகள், பேன்சி, அழகு சாதனப் பொருட்கள், போட்டோ/ வீடியோ, சலவை, தையல் அச்சகங்கள், ஜெராக்ஸ் கடைகள் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ மிக்சி, கிரைண்டர், தொலைக்காட்சி போன்ற வீட்டு உபயோக மின் பொருட்களின் விற்பனை மற்றும் பழுது நீக்கும் கடைகள் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ வாகன விநியோகஸ்தர்களது விற்பனை மற்றும் வாகனப் பழுதுபார்க்கும் மையங்கள் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ வாகனங்களின் உதிரிபாகங்கள் விற்பனை செய்யும் கடைகள் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ செல்பேசி மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ கணினி வன்பொருட்கள், மென்பொருட்கள், மின்னணு சாதனங்களின் உதிரிப்பாகங்கள் (Computer Hardware, Software, Electronic Appliances Spare Parts) விற்பனை செய்யும் கடைகள் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ சாலையோர உணவுக் கடைகளில் பார்சல் சேவை மட்டும் காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை அனுமதிக்கப்படும்.

❖ கட்டுமானப் பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ அரசின் அனைத்து அத்தியாவசியத் துறைகள் 100% பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படும். இதர அரசு அலுவலகங்கள், 50% பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ சார் பதிவாளர் அலுவலகங்கள் 100% பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ அனைத்துத் தனியார் அலுவலகங்கள் மற்றும் நிறுவனங்கள், 50% பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ வங்கிகள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள், தானியங்கி பணம் வழங்கும் (ATM) சேவைகள் 50% பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) மற்றும் அதன் செயல்பாடுகள் 50% பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ ஏற்றுமதி நிறுவனங்கள், ஏற்றுமதி நிறுவனங்களுக்கு இடுபொருள் தயாரித்து வழங்கும் நிறுவனங்கள் 100 சதவிகிதம் பணியாளர்களுடன் நிலையான வழிகாட்டு நடைமுறைகளைப் பின்பற்றித் தொடர்ந்து செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ இதர தொழிற்சாலைகள் 33% பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ தகவல் தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்பச் சேவை நிறுவனங்கள் 20% பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ வீட்டு வசதி நிறுவனம் (HFCs) வங்கி சாரா நிதி நிறுவனங்கள் (NBFCs), குறு நிதி நிறுவனங்கள் (MFIs) 33 சதவிகிதப் பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளும் நிறுவனங்களின் அலுவலகங்கள் 33 சதவிகிதப் பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ அனைத்து வகையான கட்டுமானப் பணிகள் அனுமதிக்கப்படும்.

❖ அழகு நிலையங்கள், சலூன்கள் (Beauty Parlour, Saloons, Spas) குளிர் சாதன வசதி இல்லாமலும், ஒரு நேரத்தில் 50 சதவிகித வாடிக்கையாளர்கள் மட்டும் அனுமதிக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ காலை 6 மணி முதல் மாலை 9 மணி வரை விளையாட்டுப் பயிற்சிக் குழுமங்கள் இயங்கவும், பார்வையாளர்கள் இல்லாமல், திறந்த வெளியில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும், அனுமதிக்கப்படும்.

❖ பள்ளி, கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் மற்றும் பயிற்சி நிலையங்களில் மாணவர் சேர்க்கை தொடர்பான பணிகள் அனுமதிக்கப்படும்.

❖ அரசுப் பூங்காக்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் கட்டுப்பாட்டில் உள்ள பூங்காக்கள், விளையாட்டுத் திடல்கள் காலை 6 மணி முதல் காலை 9 மணி வரை நடைப்பயிற்சிக்காக மட்டும் செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ இனிப்பு மற்றும் காரவகை விற்பனை செய்யும் கடைகளில் பார்சல் சேவைகள் மட்டும் காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை அனுமதிக்கப்படும்.

❖ இ–சேவை மையங்கள் வழக்கம் போல இயங்கும்.

❖ மின் வணிகம் (e-commerce) மூலம் உணவு விநியோகம் செய்யும் நிறுவனங்களும், உணவகங்கள் மற்றும் அடுமனைகளில் (hotels, restaurants and bakeries) பார்சல் சேவை மட்டும் காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை அனுமதிக்கப்படும்.

❖ இதர மின் வணிகச் சேவை நிறுவனங்கள் (E-commerce) அனைத்தும் காலை 6 மணி முதல் இரவு 9 வரை இயங்கலாம்.

❖ திரைப்படத் தயாரிப்புக்குப் பின்னர் உள்ள பணிகள் அனுமதிக்கப்படும்.

❖ திறந்த வெளியில், திரைப்படம் மற்றும் சின்னத்திரைப் படப்பிடிப்புகள் கலைஞர்கள் மற்றும் பணியாளர்கள் உட்பட 100 நபர்கள் மட்டும் கொரோனா (RTPCR) பரிசோதனை மேற்கொண்ட பின்னர் பங்கேற்கலாம் என்ற நிபந்தனையுடன் அனுமதிக்கப்படும்.

❖ திரையரங்குகளில், தொடர்புடைய வட்டாட்சியரின் அனுமதி பெற்று வாரத்தில் ஒரு நாள் மட்டும் பராமரிப்புப் பணி மேற்கொள்ள அனுமதிக்கப்படும்.

வகை 2இல் உள்ள மாவட்டங்களில் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டுள்ள கடைகள் / செயல்பாடுகளுக்கு மாலை 7 மணி வரை நேரத் தளர்வு அளிப்பதுடன், கூடுதலாக கீழ்க்கண்ட செயல்பாடுகளும் அனுமதிக்கப்படுகின்றன.

பாத்திரக் கடைகள், பேன்சி, அழகுசாதனப் பொருட்கள், போட்டோ, வீடியோ, சலவை, தையல் கடைகள், அச்சகங்கள், ஜெராக்ஸ் கடைகள் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ செல்பேசி மற்றும் அதனைச் சார்ந்த பொருட்கள் விற்பனை செய்யும் கடைகள் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ கணினி வன்பொருட்கள், மென்பொருட்கள், மின்னணு சாதனங்களின் உதிரிப்பாகங்கள்

(Computer Hardware, Software, Electronic Appliances Spare Parts) விற்பனை செய்யும் கடைகள் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ சாலையோர உணவுக் கடைகளில் பார்சல் சேவை மட்டும் காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை அனுமதிக்கப்படும்.

❖ அனைத்துத் தனியார் நிறுவனங்கள், 50% பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளும் நிறுவனங்களின் அலுவலகங்கள் 50 சதவிகிதப் பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ மாவட்டத்திற்குள் பொதுப் பேருந்து போக்குவரத்து, நிலையான வழிகாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி, குளிர் சாதன வசதி இல்லாமலும், 50% இருக்கைகளில் மட்டும் பயணிகள் அமர்ந்து பயணிக்க அனுமதிக்கப்படும்.

❖ மாவட்டங்களுக்கிடையே பொதுப் பேருந்து போக்குவரத்து, நிலையான வழிகாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி, குளிர் சாதன வசதி இல்லாமலும், 50% இருக்கைகளில் மட்டும் பயணிகள் அமர்ந்து பயணிக்க அனுமதிக்கப்படும்.

வகை 3இல் உள்ள மாவட்டங்களில் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டுள்ள செயல்பாடுகளுக்கான நேரத் தளர்வுகளுடன் கூடுதலாகக் கீழ்க்கண்ட செயல்பாடுகளுக்கும் அனுமதி அளிக்கப்படுகிறது.

❖ அனைத்துத் தனியார் நிறுவனங்கள், 100% பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ அனைத்துத் துணிக்கடைகள், குளிர் சாதன வசதி இல்லாமலும், ஒரு நேரத்தில் 50% வாடிக்கையாளர்களுடன் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ அனைத்து நகைக்கடைகள், குளிர் சாதன வசதி இல்லாமலும், ஒரு நேரத்தில் 50% வாடிக்கையாளர்களுடன் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ வணிக வளாகங்கள் (Shopping Complex / Malls) காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும். எனினும், வணிக வளாகங்களில் உள்ள உணவகங்களில் பார்சல் உணவு மட்டும் அனுமதிக்கப்படும். திரையரங்குகள் மற்றும் விளையாட்டுக் கூடங்களுக்கு அனுமதி இல்லை.

❖ கோயில்கள், மசூதிகள், தேவாலயங்கள், தர்காக்கள் உள்ளிட்ட அனைத்து மத வழிபாட்டுத் தலங்களும் நிலையான வழிகாட்டு நடைமுறைகளைப் பின்பற்றிச் செயல்பட அனுமதிக்கப்படும். அர்ச்சனை, திருவிழாக்கள் மற்றும் குடமுழுக்கு நடத்த அனுமதி இல்லை.

❖ காலை 6 மணி முதல் இரவு 9 மணி வரை விளையாட்டுப் பயிற்சிக் குழுமங்கள் இயங்கவும், பார்வையாளர்கள் இல்லாமல், திறந்த வெளியில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தவும், அனுமதிக்கப்படும்.

வகை 2 மற்றும் 3இல் உள்ள மாவட்டங்களில் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டுள்ள செயல்பாடுகளுக்கான நேரத் தளர்வுகளுடன், கூடுதலாகக் கீழ்க்கண்ட செயல்பாடுகளுக்கும் அனுமதி அளிக்கப்படுகிறது.

❖ தனியார் பாதுகாப்பு சேவை நிறுவனங்கள் மற்றும் அலுவலகம், வீடுகள் மற்றும் அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வீடு பராமரிப்பு உள்ளிட்ட சேவைகள் (Housekeeping) இ–பதிவில்லாமல் செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ மின் பணியாளர் (Electricians), பிளம்பர்கள் (Plumbers), கணினி மற்றும் இயந்திரங்கள் பழுது நீக்குபவர் (Motor Technicians) மற்றும் தச்சர் போன்ற சுயதொழில் செய்பவர்கள் சேவை கோருபவர் வீடுகளுக்குச் சென்று பழுது நீக்கம் செய்ய காலை 6 மணி முதல் மாலை 7 மணி வரை இ–பதிவில்லாமல் அனுமதிக்கப்படுவர்.

❖ அனைத்து அரசு அலுவலகங்கள், 100% பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ வங்கிகள் மற்றும் காப்பீட்டு நிறுவனங்கள், தானியங்கி பணம் வழங்கும் (ATM) சேவைகள் 100% பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ இந்தியப் பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் (SEBI) மற்றும் அதன் செயல்பாடுகள் 100% பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படும்.

❖ இதர தொழிற்சாலைகள் 100% பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படும்.

- தகவல் தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்பச் சேவை நிறுவனங்கள் 50% பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படும்.
- வீட்டுவசதி நிறுவனம் (HFCs) வங்கி சாரா நிதி நிறுவனங்கள் (NBFCs), குறு நிதி நிறுவனங்கள் (MFIs) 50 சதவிகிதப் பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படும்.

- உடற்பயிற்சிக் கூடங்கள், யோகா பயிற்சி நிலையங்கள், குளிர் சாதன வசதி இல்லாமல், ஒரு நேரத்தில் 50% நபர்களுடன் முறையான வழிகாட்டு நெறிமுறைகளுக்கு உட்பட்டு வழக்கமாகச் செயல்படும் நேரத்தில் அனுமதிக்கப்படும்.
- அருங்காட்சியகங்கள், தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்ட சின்னங்கள், அகழ் வைப்பகங்கள் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும்.

பொது

- அனைத்துக் கடற்கரைகளிலும், காலை 5 மணி முதல் காலை 9 மணி வரை நடைப்பயிற்சி செய்ய அனுமதிக்கப்படும்.
- தீப்பெட்டித் தொழிற்சாலைகள் 100% பணியாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படும்.

திருமணங்களுக்கான பயண அனுமதி

- வகை 2 மற்றும் 3இல் உள்ள மாவட்டங்களுக்கிடையே திருமணம் சார்ந்த போக்குவரத்துக்கு இ–பாஸ், இ–பதிவு இல்லாமல் பயணிக்கலாம்.
- வகை 1இல் உள்ள மாவட்டங்களுக்கிடையேயும், வகை 2, 3 ஆகியவற்றில் உள்ள மாவட்டங்களிலிருந்து வகை 1இல் உள்ள மாவட்டங்களுக்கும் திருமணம் சார்ந்த போக்குவரத்துக்கு இ–பாஸ் பெற்று அனுமதிக்கப்படும். இதற்கான இ–பாஸ் திருமணம் நடைபெற உள்ள மாவட்டத்தின் மாவட்ட ஆட்சியரிடமிருந்து இணையவழியாக (<https://eregister.tnega.org>) மணமகன் / மணமகள் அல்லது அவர்களது பெற்றோர் விண்ணப்பித்துப் பெற்றுக்கொள்ளலாம். வகை 1இல் உள்ள மாவட்டங்களிலிருந்து வகை 2, 3இல் உள்ள மாவட்டங்களுக்கு திருமணத்திற்காகப் பயணிக்கவும் இ–பாஸ் பெறவேண்டும்.
- திருமண நிகழ்வுகளில் 50 நபர்கள் மட்டும் கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவர்.
- நீலகிரி மாவட்டம், கொடைக்கானல், ஏற்காடு, ஏலகிரி, குற்றாலம் பகுதிகளுக்கு அவசரக் காரணங்களுக்காகப் பயணிக்க தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து இ–பாஸ் பெற்று பயணிக்க அனுமதிக்கப்படும்.

கொரோனா நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த, தமிழ்நாட்டில் முழு ஊரடங்கு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், பொதுமக்கள் அவசியமின்றி வீட்டிலிருந்து வெளியில் வருவதையும், கூட்டம் கூடுவதையும் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கொரோனா மேலாண்மைக்கான தேசிய வழிகாட்டு நடைமுறைகளில் குறிப்பிட்டுள்ளபடி, பொது இடங்களில் முகக் கவசம் அணிவது, சமூக இடைவெளியினைக் கடைப்பிடிப்பது, கைகளை அடிக்கடி சோப்பு, கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்வது ஆகியவற்றைக் கட்டாயம் பின்பற்றவும், நோய்த்தொற்று அறிகுறிகள் தென்பட்டவுடன், பொதுமக்கள் உடனே அருகிலுள்ள மருத்துவமனைகளை நாடி மருத்துவ ஆலோசனை, சிகிச்சை பெறவும் கேட்டுக்கொள்கிறேன்.

மக்கள் அனைவரும் அரசின் முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு நல்கி கொரோனா தொற்றினை முற்றிலும் அகற்ற உதவிட வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

கொரோனா மேலாண்மைக்கான தேசிய வழிகாட்டு நடைமுறைகளை முறையாகப் பின்பற்ற வேண்டும்

தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் தளர்வுகளுடன் கூடிய கட்டுப்பாடுகள் மேலும் ஒரு வாரம் நீட்டிப்பு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவிப்பு – 02.07.2021.

கொரோனா பெருந்தொற்று ஒன்றிய அரசால் பேரிடராக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தமிழ்நாட்டில், 25.03.2020 முதல் தேசியப் பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், ஊரடங்கு நடைமுறையிலிருந்து வருகிறது. கொரோனா நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த தேவையான கட்டுப்பாடுகளை 31.07.2021 வரை தொடர்ந்து அமல்படுத்த ஒன்றிய அரசின் உள்துறை அமைச்சகம் 29.06.2021 அன்று அறிவித்துள்ளது.

தற்போது தமிழ்நாட்டில் நடைமுறையில் உள்ள ஊரடங்கு 05.07.2021 அன்று காலை 6 மணியுடன் முடிவடையும் நிலையில், கொரோனா நோய்த் தொற்று வெகுவாகக் குறைந்துள்ள போதிலும், நோய்த் தொற்றுப் பரவலைக் கண்காணித்துத் தொடர்ந்து கட்டுப்படுத்த வேண்டிய அவசியத்தைக் கருத்தில்கொண்டு அனைத்து மாவட்டங்களிலும் கீழ்க்கண்ட செயல்பாடுகளுக்கு 05.07.2021 முதல் 12.07.2021 காலை 6 மணி வரை தொடர்ந்து தடை விதிக்கப்படுகிறது.

- ★ மாநிலங்களுக்கிடையே தனியார் மற்றும் அரசு பேருந்து போக்குவரத்து
- ★ மத்திய உள்துறை அமைச்சகத்தால் அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களைத் தவிர, சர்வதேச விமான போக்குவரத்து
- ★ திரையரங்குகள்
- ★ அனைத்து மதுக்கூடங்கள்
- ★ நீச்சல் குளங்கள்
- ★ பொதுமக்கள் கலந்துகொள்ளும் சமுதாயம், அரசியல் சார்ந்த கூட்டங்கள்
- ★ பொழுதுபோக்கு, விளையாட்டு, கலாச்சார நிகழ்வுகள்
- ★ பள்ளிகள் மற்றும் கல்லூரிகள்
- ★ உயிரியல் பூங்காக்கள்
- ★ நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்தும் விதமாகத் திருமண நிகழ்வுகளில் 50 நபர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.
- ★ இறுதிச் சடங்குகளில், 20 நபர்கள் மட்டுமே அனுமதிக்கப்படுவர்.

மக்களின் வாழ்வாதாரம், அத்தியாவசியத் தேவைகளைக் கருத்தில் கொண்டும், மாநிலத்தின் பொருளாதாரத்தைக் கருத்தில் கொண்டும், தமிழ்நாட்டில் நோய்த்தொற்றுப் பரவல் குறைந்துள்ளதைத் தொடர்ந்து, 05.07.2021 முதல், அனைத்து மாவட்டங்களிலும் ஒரே வகையான தளர்வுகள் வழங்கப்படுகிறது. நோய்க் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தவிர, அனைத்துப் பகுதிகளிலும், ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டுள்ள செயல்பாடுகள் தொடர்ந்து அனுமதிக்கப்படும். மேலும், ஏற்கெனவே இரவு 7 மணி வரை செயல்பட அனுமதிக்கப்பட்டுள்ள கடைகள் மற்றும் செயல்பாடுகள், இரவு 8 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள தடை செய்யப்பட்ட செயல்பாடுகள் தவிர அனைத்துச் செயல்பாடுகளும் அனுமதிக்கப்படும்.

மேலும், கூடுதலாகக் கீழ்க்கண்ட செயல்பாடுகளும் ஒரு சில கட்டுப்பாடுகளுடன் அனுமதிக்கப்படும்.

- ★ அரசு, மற்றும் தனியார் தொழில் சார்ந்த பொருட்காட்சி நிகழ்வுகள் (Business to Business

Exhibitions) நடத்த அனுமதிக்கப்படும். உரிய அழைப்பிதழ் வைத்திருப்பவர்கள் மட்டும் இதற்கு அனுமதிக்கப்படுவார்கள். இந்த அரங்குகளில் பொருட்காட்சி அமைப்பாளர் மற்றும் விற்பனைக் கூடங்களின் உரிமையாளர்கள், பணியாளர்கள், கட்டாயம் RTPCR பரிசோதனை அல்லது இரண்டு தவணைகளில் தடுப்பூசி செலுத்தியிருக்க வேண்டும்.

★ உணவகங்கள், விடுதிகள், அடுமனைகள், தங்கும் விடுதிகள் மற்றும் உறைவிடங்களில் உள்ள உணவகங்களில் காலை 6 மணி முதல் மாலை 8 மணி வரை, உரிய காற்றோட்ட வசதியுடன், நிலையான வழிகாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி, 50 சதவிகித வாடிக்கையாளர்கள் மட்டும் அமர்ந்து உணவு அருந்த அனுமதிக்கப்படுவர்.

★ தேநீர்க் கடைகளில் நிலையான வழிகாட்டு முறைகளைப் பின்பற்றி ஒரே நேரத்தில் 50 சதவிகித வாடிக்கையாளர்கள் தேநீர் அருந்த அனுமதிக்கப்படுவர்.

★ கேளிக்கை விடுதிகளில் (Clubs) உடற்பயிற்சிக் கூடங்கள், விளையாட்டுக்கள் மற்றும் உணவகங்கள் மட்டும் கொரோனா தடுப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றிச் செயல்பட அனுமதிக்கப்படும்.

★ தகவல் தொழில்நுட்பம் / தகவல் தொழில்நுட்பச் சேவை நிறுவனங்கள் 50 சதவிகிதப் பணியாளர்களுடன் இயங்க அனுமதிக்கப்படும்.

★ தங்கும் விடுதிகள், உறைவிடங்கள் (Hotels and Lodges), விருந்தினர் இல்லங்கள் (Guest Houses) செயல்பட அனுமதிக்கப்படும். அங்குள்ள உணவு விடுதிகள் மற்றும் தங்குமிடங்களில் (dormitory) 50 சதவிகித வாடிக்கையாளர்கள் மட்டும் அனுமதிக்கப்படுவர்.

★ அருங்காட்சியகங்கள், தொல்லியல் துறையின் பாதுகாக்கப்பட்ட சின்னங்கள், அகழ் வைப்பகங்கள் காலை 10 மணி முதல் மாலை 5 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும்.

★ உடற்பயிற்சிக் கூடங்கள் மற்றும் யோகா பயிற்சி நிலையங்கள் உரிய காற்றோட்ட வசதியுடன், ஒரே நேரத்தில் 50 சதவிகித வாடிக்கையாளர்களுடன் மட்டும் செயல்பட அனுமதிக்கப்படும்.

★ டாஸ்மாக் கடைகள் காலை 10 மணி முதல் மாலை 8 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும்.

★ அனைத்து வழிபாட்டுத் தலங்கள் நிலையான வழிகாட்டு நடைமுறைகளைப் பின்பற்றிச் செயல்பட அனுமதிக்கப்படும். திருவிழாக்கள் மற்றும் குடமுழுக்கு நடத்த அனுமதி இல்லை.

★ அனைத்துத் துணிக்கடைகள் மற்றும் நகைக்கடைகள், உரிய காற்றோட்ட வசதியுடன், ஒரே நேரத்தில் 50 சதவிகித வாடிக்கையாளர்களுடன் செயல்பட அனுமதிக்கப்படும்.

★ வணிக வளாகங்கள் (Shopping Complex / Malls) காலை 9 மணி முதல் மாலை 8 மணி வரை செயல்பட அனுமதிக்கப்படும். வணிக வளாகங்களில் உள்ள உணவகங்களில் 50 சதவிகித இருக்கைகளில் மட்டும் வாடிக்கையாளர்கள் அமர்ந்து உணவு அருந்த அனுமதிக்கப்படுவர். வணிக வளாகங்களில் உள்ள திரையரங்குகள் மற்றும் விளையாட்டுக் கூடங்களுக்கு அனுமதி இல்லை.

★ மாவட்டத்திற்குள்ளேயும், மாவட்டங்களுக்கு இடையேயும், பொதுப் பேருந்துப் போக்குவரத்து, நிலையான வழிகாட்டு நடைமுறைகளைப் பின்பற்றி, குளிர்சாதன வசதி இல்லாமலும், 50 சதவிகித இருக்கைகளில் மட்டும் பயணிகள் அமர்ந்து பயணிக்க அனுமதிக்கப்படும்.

★ SRF/JRF, M.Phil., Phd., ஆராய்ச்சி மாணவர்கள் தங்கள் கல்வி சார்ந்த பணிகளை (Educational Project Works) தொடர்புடைய கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ள அனுமதிக்கப்படுவர். இவர்களின் கல்வி சார்ந்த பணிகளுக்காகக் கல்லூரிகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் செயல்பட அனுமதிக்கப்படும்.

★ அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிலையம், SIRD போன்ற அரசு பயிற்சி நிலையங்கள், மையங்கள், உரிய காற்றோட்ட வசதியுடன், 50 சதவிகித பயிற்சியாளர்கள் மட்டும் பங்கேற்கும் வகையில் செயல்பட அனுமதிக்கப்படும்.

★ பொழுதுபோக்கு, கேளிக்கை பூங்காக்கள் (Entertainment, Amusement Parks) 50 சதவிகித வாடிக்கையாளர்களுடன் மட்டும் செயல்பட அனுமதிக்கப்படும். முகக்கவசம் அணிதல், கிருமிநாசனி பயன்படுத்துதல் ஆகியவை நிருவாகத்தால் முறையாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும். இந்தப் பூங்காக்களில், திறந்த வெளியில் நடத்தப்படும்

விளையாட்டுக்கள் மட்டும் அனுமதிக்கப்படும். தண்ணீர் தொடர்பான விளையாட்டுகளுக்கு (water sports) அனுமதி இல்லை.

★ மாவட்டங்களுக்கிடையே பயணிக்க இ–பாஸ், இ–பதிவு நடைமுறை இரத்து செய்யப்படுகிறது.

பொது

அனுமதிக்கப்பட்டுள்ள அனைத்துக் கடைகள் மற்றும் பொதுமக்கள் கூடக்கூடிய இடங்களில் கீழ்க்கண்ட முக்கிய நிலையான வழிகாட்டு நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டும்.

கடைகளின் நுழைவுவாயிலில், வாடிக்கையாளர் பயன்படுத்தும் வகையில் கை சுத்திகரிப்பான்கள் (hand sanitizer with dispenser) கட்டாயமாக வைக்கப்படுவதோடு, உடல் வெப்ப நிலைப் பரிசோதனைக் கருவி கொண்டு பரிசோதனை செய்ய வேண்டும் (thermal screening).

கடைகளில் பணிபுரிபவர்களும் மற்றும் வாடிக்கையாளர்களும் கட்டாயம் முகக்கவசம் அணிவதைச் சம்மந்தப்பட்ட நிருவாகம் உறுதி செய்ய வேண்டும்.

குளிர்சாதன வசதி பயன்படுத்தப்படும் இடங்களில் கதவுகள் மற்றும் ஜன்னல்கள் திறக்கப்பட்டுப் போதுமான காற்றோட்ட வசதியுடன் செயல்படுவதோடு, கடைகளில், சமூக இடைவெளியைக் கடைப்பிடிக்கும் வகையில் ஒரே நேரத்தில் அதிகப்படியான நபர்களை அனுமதிக்கக்கூடாது.

கடைகளின் நுழைவு வாயிலில் பொதுமக்கள் வரிசையில் காத்திருக்கும்போது, ஒரு நபருக்கும் மற்றொருவருக்கும் இடையே போதுமான இடைவெளி இருக்கும் வகையில் குறியீடுகள் போடப்பட வேண்டும்.

நோய்த் தொற்று கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள்

நோய்த் தொற்றுக்குள்ளானவர்களைக் கண்டறிதல், நோய்த் தொற்றுக்குள்ளானவர்களுடன் தொடர்பில் இருந்தவர்களைக் கண்டறிதல், சிகிச்சை அளித்தல், தடுப்பூசி செலுத்துதல் மற்றும் கொரோனா நோய்த் தடுப்பு நடவடிக்கைகளைப் பின்பற்றுதல் (Test-Track-Treat-Vaccination-Covid-19 Appropriate Behaviour) ஆகிய கோட்பாடுகளைக் கண்டிப்பாக நடைமுறைப்படுத்தப்படும்.

கொரோனா வைரஸ் நோய்த்தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கு, நோய்த்தொற்றுப் பாதிப்பிற்குள்ளானவர்கள் உள்ள பகுதிகளில், நோய்க் கட்டுப்பாட்டு மண்டல எல்லைகளை நுண்ணளவு வரை (Micro Level) வரையறை செய்து, நிலையான வழிகாட்டு நடைமுறைகளின்படி, தீவிரமாக நோய்த் தடுப்பு நடவடிக்கைகளை மாவட்ட ஆட்சியர் மற்றும் உள்ளாட்சி அமைப்புகள் மேற்கொள்ள வேண்டும்.

வரையறுக்கப்பட்ட நோய்க் கட்டுப்பாட்டுப் பகுதிகளில், கீழ்க்கண்ட நோய்க் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் கண்டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டும்.

நோய்க் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் அத்தியாவசியச் செயல்பாடுகளுக்கு மட்டும் அனுமதி அளிக்கப்பட வேண்டும். இந்த நோய்க் கட்டுப்பாட்டுப் பகுதிகளில், மருத்துவ அவசர சேவைகள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் வழங்குதல் தவிர, இதர செயல்பாடுகளுக்கு அனுமதி இல்லை.

நோய்க் கட்டுப்பாட்டுப் பகுதிகளில், நோய்த்தொற்றுப் பரவலைக் கண்காணிக்க, குழுக்கள் அமைக்கப்பட்டு வீடு வீடாகத் தீவிரமாகக் கண்காணிக்கப்பட வேண்டும்.

அனுமதிக்கப்பட்ட பல்வேறு செயல்பாடுகளுக்கான நிலையான வழிகாட்டு நடைமுறைகளைத் தொடர்புடைய துறைகள் கண்டிப்பாகப் பின்பற்ற வேண்டும்.

கொரோனா நோய்த் தொற்றைக் கட்டுப்படுத்த, பொதுமக்கள் அவசியமின்றி வீட்டிலிருந்து வெளியில் வருவதையும், கூட்டம் கூடுவதையும் தவிர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், கொரோனா மேலாண்மைக்கான தேசிய வழிகாட்டு நடைமுறைகளில் குறிப்பிட்டுள்ளபடி, பொது இடங்களில் முகக்கவசம் அணிவது, சமூக இடைவெளியினைக் கடைப்பிடிப்பது, கைகளை அடிக்கடி சோப்பு, கிருமிநாசினி கொண்டு சுத்தம் செய்வது ஆகியவற்றைக் கட்டாயம் பின்பற்றவும், நோய்த்தொற்று அறிகுறிகள் தென்பட்டவுடன், பொதுமக்கள் உடனே அருகிலுள்ள மருத்துவமனைகளை நாடி மருத்துவ ஆலோசனை, சிகிச்சை பெறவும் கேட்டுக்கொள்கிறேன்.

கொரோனா நோய்த் தொற்று மேலாண்மைக்கான விதிமுறைகள் கடைப்பிடிக்கப்படுவது கண்காணிக்கப்பட்டு, விதிமீறல்களில் ஈடுபடுவோர் மீது அபராதம் விதிக்கப்படும் நடவடிக்கைகள் தொடரும்.

மக்கள் அனைவரும் அரசின் முயற்சிகளுக்கு முழு ஒத்துழைப்பு நல்கி கொரோனா தொற்றினை முற்றிலும் அகற்ற உதவிட வேண்டுமென அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

❖ ❖ ❖

கொரோனா நோய்த்தொற்றினால் பெற்றோர்களை இழந்து தவிக்கும் குழந்தைகளின் பெயரில் தலா ரூ.5 இலட்சம் வைப்பீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 16.06.2021 அன்று தலைமைச் செயலகத்தில், கொரோனா நோய்த் தொற்றால் பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கு நிவாரண உதவித்தொகைகளை வழங்கினார்கள்.

தமிழகத்தில் கொரோனா நோய்த்தொற்றினால் பெற்றோர்களை இழந்து, ஆதரவின்றித் தவிக்கும் குழந்தைகளின் எதிர்காலத்தைப் பாதுகாத்திடும் வகையில், அந்தக் குழந்தைகளுக்குத் தலா ரூ.5 இலட்சம் வைப்பீடு, கொரோனா நோய்த் தொற்றினால் தாய் அல்லது தந்தையை இழந்த குழந்தையோடு இருக்கும் தந்தை அல்லது தாய்க்கு ரூ.3 இலட்சம் நிவாரணத் தொகை, கொரோனா தொற்றால் பெற்றோர்களை இழந்து உறவினர், பாதுகாவலரின் ஆதரவில் வளரும் குழந்தைகளின் பராமரிப்புச் செலவாக மாதந்தோறும் தலா ரூ.3 ஆயிரம் உதவித்தொகை, பெற்றோர்களை இழந்த குழந்தைகளுக்கு அரசு இல்லங்கள் மற்றும் விடுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் தங்குவதற்கு இடம், இக்குழந்தைகளுக்குப் பட்டப்படிப்பு வரையிலான கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணம் உள்ளிட்ட அனைத்தையும் அரசே ஏற்றுக்கொள்ளும் என்பது போன்ற பல்வேறு நிவாரண உதவிகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 29.05.2021 அன்று அறிவித்தார்கள்.

அந்த அறிவிப்புகளைச் செயல்படுத்திட சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறையால் அதற்கான வழிகாட்டு நெறிமுறைகளுடன் அரசாணை வெளியிடப்பட்டது.

அவற்றில் முக்கியமான நிவாரண உதவிகளான கொரோனா நோய்த்தொற்றினால் பெற்றோர்களை இழந்து, ஆதரவின்றித் தவிக்கும் குழந்தைகளுக்கு, அவர்களது பெயரில் தலா ரூ.5 இலட்சம் வைப்பீடு செய்து, அக்குழந்தை 18 வயது நிறைவடையும்போது, அந்தத் தொகையை அக்குழந்தைக்கு வட்டியோடு வழங்கும் வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 16.06.2021 அன்று தலைமைச் செயலகத்தில், 5 குழந்தைகளுக்கு அவர்களது பெயரில் தலா ரூ.5 இலட்சம் தமிழ்நாடு மின்விசை நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டு நிறுவனத்தில் (Tamil Nadu Power Finance and Infrastructure Development Corporation Limited) வைப்பீடு செய்தமைக்கான சான்றிதழ்களை, அக்குழந்தைகளின் பாதுகாவலர்களிடம் வழங்கினார்கள்.

மேலும், கொரோனா நோய்த்தொற்றினால் தாய் அல்லது தந்தையை இழந்த குழந்தைகளோடு இருக்கும் தந்தை அல்லது தாய்க்கு உடனடி நிவாரணத் தொகையாக ரூ.3 இலட்சம் வழங்கிடும் வகையில், பெற்றோர்களில் ஒருவரை இழந்து தவிக்கும் 5 குழந்தைகளுக்கு, அக்குழந்தைகளின் தந்தை அல்லது தாய்க்கு உடனடி நிவாரணத் தொகையாக தலா ரூ.3 இலட்சத்திற்கான காசோலைகளை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்கள்.

கொரோனா நோய்த்தொற்று தடுப்புப் பணிகளுக்கு முதற்கட்டமாக ரூ.100 கோடி முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு

தமிழக மக்கள் அனைவரும் தமிழக அரசின் கொரோனா தடுப்பு முயற்சிகளுக்கு கை கொடுக்கின்ற வகையில் நிதி வழங்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் வேண்டுகோள் விடுத்ததற்கிணங்க, 29.06.2021 அன்று வரை ரூ.353 கோடி நன்கொடையாகப் பெறப்பட்டுள்ளது.

மாண்புமிகு முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு அளிக்கப்படும் நன்கொடைகள், கொரோனா நிவாரணப் பணிகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும் என உறுதியளித்தவாறே, இதுவரை பெறப்பட்டுள்ள நிதியிலிருந்து, ரெம்டெசிவிர் போன்ற உயிர் காக்கும் மருந்துகளை அரசு மருத்துவமனைகளுக்கு வழங்குவதற்காகவும், மற்ற மாநிலங்களிலிருந்து திரவ ஆக்சிஜனை இரயில் போக்குவரத்து மூலமாகக் கொண்டு வருவதற்குத் தேவையான கண்டெய்னர்களை வாங்குவதற்காகவும், முதற்கட்டமாக ரூ.50 கோடியை வழங்கிடவும், இரண்டாவது கட்டமாக கொரோனா பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக ஆர்.டி.பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெப்போதும் இல்லாத அளவிற்கு நாள்தோறும் 1.6 இலட்சம் அளவிற்கு மேற்கொள்ளப்பட்டு வருவதைக் கருத்தில்கொண்டு, இப்பரிசோதனைகளை மேற்கொள்வதற்கான ஆர்.டி.பி.சி.ஆர். கிட்களை வாங்குவதற்கு ரூ.50 கோடியை வழங்கிடவும் மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஏற்கெனவே ஆணையிட்டிருந்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து, கொரோனா நோய் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைகளுக்குத் தேவைப்படும் திரவ மருத்துவ ஆக்சிஜனை வாங்குவதற்காகவும், இந்தத் தொற்றின் மூன்றாம் அலை தொடர்பான முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் ரூ.100 கோடி ஒதுக்கீடு செய்து ஆணை.

இதனையடுத்து, சிப்காட் நிறுவனம் மூலம், சிங்கப்பூர் மற்றும் பிற அயல்நாடுகளிலிருந்து ஆக்சிஜன் உருளைகள், ஆக்சிஜன் செறிவூட்டிகள் மற்றும் இதர மருத்துவக் கருவிகளை வாங்குவதற்கு ரூ.41.40 கோடியினையும், கருப்புப்பூஞ்சை நோய் சிகிச்சைக்காகத் தேவைப்படும் ஆம்போடெரிசின் உள்ளிட்ட அனைத்து உயிர் காக்கும் மருந்துகளை வாங்குவதற்கு ரூ.25 கோடியினையும் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒதுக்கீடு செய்தும் ஆணையிட்டிருந்தார்கள்.

தற்போது முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து, கொரோனா நோய் சிகிச்சைக்காக அரசு மருத்துவமனைகளுக்குத் தேவைப்படும் திரவ மருத்துவ ஆக்சிஜனை வாங்குவதற்காகவும், இந்தத் தொற்றின் மூன்றாம் அலை தொடர்பான முன்னேற்பாடு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காகவும் ரூ.100 கோடியை ஒதுக்கீடு செய்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

படமும்/செய்தியும்

கொரோனா நோய்க் கட்டுப்பாடு மற்றும் ஊரடங்கு குறித்த ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில், கொரோனா நோய்க் கட்டுப்பாடு மற்றும் ஊரடங்கு குறித்து 02.07.2021 அன்று தலைமைச் செயலகத்தில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்கள், தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

தமிழ்நாட்டில் ஊரடங்கு கட்டுப்பாடுகளில் கூடுதல் தளர்வுகள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவிப்பு – 27.06.2021.

தமிழ்நாடு அரசின் தளர்வுகளுடன் கூடிய ஊரடங்கு உத்தரவு 28.06.2021 அன்று முதல் நடைமுறைக்கு வரும் என ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருந்தது. இதுதொடர்பாக பொதுமக்கள், வணிக அமைப்புகள் ஆகியோரிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகள், கருத்துக்கள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு பின்வரும் கூடுதல் தளர்வுகள் அறிவிக்கப்படுகின்றன.

வகை 2, மாவட்டங்களில், துணிக்கடைகள், நகைக் கடைகள் காலை 9 மணி முதல் மாலை 7 மணி வரை 50 சதவிகித வாடிக்கையாளர்களுடன் குளிர்சாதன வசதி இன்றி செயல்பட அனுமதிக்கப்படும்.

பொதுமக்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் மேற்படி புதிய தளர்வுகளை அரசு வெளியிட்டுள்ள வழிகாட்டு நெறிமுறைகளைப் பின்பற்றி பொறுப்புடன் பயன்படுத்திக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன் என்று மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

ரூ.6.66 கோடி மதிப்பில், புலம்பெயர்ந்த வெளிமாநிலத் தொழிலாளர்களுக்கு உணவுப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கும் திட்டம்

கொரோனா பெருந்தொற்றிலிருந்து கட்டுமானத் தொழிலாளர்களைப் பாதுகாத்திடும் சீரிய நோக்கத்தோடு, தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற 13,41,494 தொழிலாளர்களுக்குக் கொரோனா தடுப்பூசி செலுத்திட வேண்டும் என்று பிறப்பிக்கப்பட்ட ஆணைக்கிணங்க, முதற்கட்டமாக 2 இலட்சம் கட்டுமானத் தொழிலாளர்களுக்கு சிறப்பு முகாம் மூலமாகக் கொரோனா தடுப்பூசி செலுத்தும் பணியினையும், கொரோனா பெருந்தொற்றுப் பரவல் காரணமாக அறிவிக்கப்பட்ட பொது முடக்கத்தால் பணிவாய்ப்பை இழந்த, குடும்ப அட்டை இல்லாத, புலம்பெயர்ந்த வெளி மாநிலத் தொழிலாளர்கள் பசியால் வாடக்கூடாது என்ற உயரிய எண்ணத்தோடு, 1,29,444 தொழிலாளர்களுக்கு 6 கோடியே 66 இலட்சத்து 44 ஆயிரத்து 243 ரூபாய் மதிப்பீட்டில், 15 கிலோ அரிசி, 1 கிலோ துவரம் பருப்பு, 1 கிலோ சமையல் எண்ணெய் ஆகிய உணவுப் பொருட்கள் அடங்கிய தொகுப்பை வழங்கும் திட்டத்தையும் 25.06.2021 அன்று நந்தனம் அரசினர் ஆடவர் கலைக் கல்லூரியில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நலவாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களுக்கு கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாமையும், வெளிமாநிலத் தொழிலாளர்களுக்கு உணவுப் பொருட்கள் அடங்கிய தொகுப்பு வழங்கும் திட்டத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார்கள் 25.06.2021.

முகாமிற்கு வெளியே வாழும் 13,553 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு கொரோனா நிவாரண நிதியாக ரூ.4,000 வழங்கும் திட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 19.06.2021 அன்று தலைமைச் செயலகத்தில் திட்டத்தைத் தொடங்கி வைத்தார்கள்.

தமிழ்நாட்டில் கொரோனா நோய்த் தொற்றுப் பரவல் காரணமாகவும், ஊரடங்கு காலத்தில் உள்ள பல்வேறு கட்டுப்பாடுகள் காரணமாகவும் பாதிக்கப்பட்டுள்ள பொதுமக்களின் வாழ்வாதாரத்திற்கு உதவும் வகையில், அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் முகாம் வாழ் இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு ரூ.4,000 நிவாரண நிதி வழங்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர்கள் பலர் பல்வேறு பகுதிகளில் முகாமிற்கு வெளியேயும் வசித்து வருகின்றார்கள். அவர்கள் சிறு தொழில்கள், தினக்கூலிப் பணிகள் போன்றவற்றில் தங்களை ஈடுபடுத்திக்கொண்டு வாழ்ந்து வருகின்றார்கள். கோவிட் – 19 பெருந்தொற்று காரணமாக ஏற்பட்டுள்ள அசாதாரண சூழ்நிலை காரணமாக இவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படைந்ததை அறிந்து, அவர்களின் நலனைக் காத்திட, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் சிறப்புநேர்வாக, முதல் முறையாக முகாமிற்கு வெளியே வாழும் 13,553 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு தலா ரூ.4,000 வீதம் மொத்தம் 5 கோடியே 42 இலட்சத்து 12 ஆயிரம் ரூபாய் கொரோனா நிவாரண நிதி வழங்கும் திட்டத்தைச் செயல்படுத்திட அரசாணை வெளியிட்டார்கள்.

அதன்படி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 19.06.2021 அன்று தலைமைச் செயலகத்தில், முகாமிற்கு வெளியே வாழும் 13,553 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு கொரோனா நிவாரண நிதியாக ரூ.4,000 வழங்கும் திட்டத்தினை, 5 இலங்கைத் தமிழர் குடும்பங்களுக்கு வழங்கி தொடங்கி வைத்தார்கள்.

சென்னை எழும்பூர் அரசு குழந்தைகள் நல மருத்துவமனையில் 250 படுக்கை வசதிகளுடனான சிறப்பு கொரோனா பராமரிப்பு மையத்தில் ஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் பிரத்தியேக பூஜ்ஜிய தாமத (Zero delay) குழந்தைகள் கொரோனா பராமரிப்பு மையத்தைப் பார்வையிட்டு ஆய்வு – 20.06.2021.

தமிழ்நாட்டில் கொரோனா நோய்த்தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களின் தலைமையில் பல்வேறு தொடர் நடவடிக்கைகள் போர்க்கால அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வருவதன் காரணமாக, மாநிலத்தில் கொரோனா நோய்த்தொற்றின் தாக்கம் வெகுவாகக் குறைந்து, நோய்த்தொற்று கட்டுப்பாட்டில் உள்ளது.

இந்நிலையில், கொரோனா நோய்த்தொற்றின் மூன்றாவது அலையைச் சமாளிப்பதற்கான ஆயத்தப் பணிகளில் ஒரு பகுதியாக, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 20.06.2021 அன்று சென்னை எழும்பூரில் உள்ள அரசு குழந்தைகள் நல மருத்துவமனை மற்றும் ஆராய்ச்சி நிலைய வளாகத்தில் குழந்தைகளுக்கென 250 படுக்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக பூஜ்ஜிய தாமத (Zero delay) குழந்தைகள் கொரோனா பராமரிப்பு மையம் அமைக்கப்பட்டுள்ளதைப் பார்வையிட்டு ஆய்வு செய்து, அங்கு அளிக்கப்படும் மருத்துவ சிகிச்சை வசதிகள் குறித்து மருத்துவர்களிடம் கேட்டறிந்தார்கள்.

இம்மையத்தில் அமைக்கப்பட்டுள்ள அதிதீவிர சிகிச்சைப் பிரிவையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள். இப்பிரிவுகளில் குழந்தைகளுக்குத் தேவையான அனைத்து மருத்துவக் கருவிகளும், ஆக்சிஜன் வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

தடுப்பூசி நிறைவாக கிடைக்கும் வகையில் எங்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்

மாண்புமிகு மத்திய சுகாதாரத் துறை அமைச்சர்
திரு. **ஹர்ஷ்வர்தன்** அவர்களுக்கு
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
எழுதிய கடிதத்தின் தமிழாக்கம் – 28.06.2021.

தமிழக அரசுக்கு வழங்கும் கொரோனா தடுப்பூசி ஒதுக்கீட்டை 75 சதவிகிதத்தில் இருந்து 90 சதவிகிதமாக உயர்த்துவது குறித்து தங்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

3 மடங்கு உயர்வு

கொரோனா தடுப்பூசி மருந்தை மத்திய அரசு மைய அளவில் பெற்று அதை 18 வயதுக்கு மேற்பட்டோருக்கு அளிப்பதற்காக மாநிலங்களுக்கு இலவசமாக வழங்க வேண்டும் என்ற எங்களின் கோரிக்கையை ஏற்றதற்கு நன்றி. தடுப்பூசி பற்றிய தயக்கத்தை நீக்கி, அதை மக்கள் இயக்கமாக மாற்ற எனது அரசு மேற்கொண்ட தொடர் முயற்சியின் விளைவாக இந்த மாதத்தில் தடுப்பூசி போட்டுக் கொண்டவர்களின் எண்ணிக்கை 3 மடங்காக உயர்ந்துள்ளது.

பழைய கோரிக்கை

கடந்த காலங்களில் செய்யப்பட்ட குறைவான ஒதுக்கீட்டை ஈடு செய்யும் வகையில் ஒரு கோடி தடுப்பூசி மருந்துகளை ஒதுக்க வேண்டும் என்று கேட்டு நான் ஏற்கெனவே கடிதம் எழுதியிருந்தேன். ஆனால் அளிக்கவில்லை.

ஆனாலும் தற்போது தடுப்பூசி மருந்தின் தேவை அதிகரித்திருக்கும் அளவிற்கு ஜூன் மற்றும் ஜூலை மாத ஒதுக்கீடு அமையவில்லை. எனவே, எனது பழைய கோரிக்கையையே மீண்டும் வலியுறுத்த விரும்புகிறேன். அதோடு, உடனடியாக தலையிடும் அளவிற்கான மற்றொரு பிரச்சினையையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

தனியாருக்கு அதிக ஒதுக்கீடு

புதிய தாராளமயமாக்கப்பட்ட தடுப்பூசி கொள்கையின்படி 75 சதவிகித தடுப்பூசியை மத்திய அரசு வாங்குகிறது. மீதமுள்ள தடுப்பூசிகளைக் கட்டணம் வாங்கி அளிப்பதற்காக தனியார் மருத்துவமனைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகிறது. தடுப்பூசியில் ஒரு பகுதியைத் தனியார் மருத்துவமனைகளுடன் பங்கிட்டுக்கொள்ள வேண்டும் என்பதை நான் ஏற்கிறேன்.

ஆனால் தனியார் மருத்துவமனைகளுக்குத் தரப்படும் 25 சதவிகித ஒதுக்கீடு என்பது அவர்களால் மக்களுக்கு அளிக்கப்பட்டு வரும் தடுப்பூசியின் எண்ணிக்கைக்கு மிக அதிகமாக உள்ளது. தமிழகத்தில் இதுவரை 1.43 கோடி தடுப்பூசிகள் செலுத்தப்பட்டுள்ளன. அதில் தனியார் மருத்துவமனைகள் போட்டது 6.5 இலட்சம் தடுப்பூசிகள் தான். இது வெறும் 4.5 சதவிகிதம்தான்.

இந்த மாதத்தில் அரசு 43.5 இலட்சம் தடுப்பூசிகள் அளித்துள்ள நிலையில் தனியார் மருத்துவமனைகள் 4.5 இலட்சம் தடுப்பூசிகளை மட்டுமே அளித்துள்ளன. இது 10 சதவிகிதம்தான்.

செயல்திறன் அடிப்படையில்

அந்த வகையில் தடுப்பூசியின் தேவை மற்றும் ஒதுக்கீட்டிற்கு இடையே பொருந்தா நிலையே உள்ளது. இதனால் தனியார் மருத்துவமனைகள் 7 இலட்சம் முதல் 8 இலட்சம் வரை தடுப்பூசிகளைத் தங்கள் கையிருப்பில் வைத்துள்ளனர். இது அவர்களுக்கு ஒரு மாதம் வரை போதுமானதாக இருக்கும்.

ஆனால் அரசிடமோ வெறும் 2 இலட்சம் தடுப்பூசிகள்தான் உள்ளன. இது அரசு நாளொன்றுக்கு அளிக்கும் தடுப்பூசியின் எண்ணிக்கையைவிட குறைவானதாகும். எனவே, கையிருப்பில் உள்ள தடுப்பூசியை அவர்களின் செயல்திறனின் அடிப்படையில் பகிர்ந்தளிக்கப்பட்டால் இந்தப் பிரச்சினை தீர்க்கப்படும்.

பாதிப்பு இருக்காது

தனியார் மருத்துவமனைகளுக்கு 25 சதவிகித ஒதுக்கீடு என்பது உற்பத்தியாளர்களை ஊக்குவிப்பதாக உள்ளது. நல்ல விலை வைத்து அதை விற்றுக்கொள்ள அவர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மக்களுக்கு அதிக வேகத்தில் தடுப்பூசி மருந்தை செலுத்த வேண்டும் என்ற எங்களின் நோக்கம், தடுப்பூசி செலுத்துவதில் சிறப்பான செயல்திறன் கொண்ட அரசு மருத்துவமனைகளுக்கான ஒதுக்கீட்டை அதிகப்படுத்துவதன் மூலம்தான் நிறைவேறும்.

மத்திய அரசின் கொள்முதல் விலையை உயர்த்தினால், தனியாருக்கு ஒதுக்கப்படும் தடுப்பூசி அளவைக் குறைப்பதினால் உற்பத்தியாளர்களுக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது.

கூடுதல் ஒதுக்கீடு

எனவே, இந்த பிரச்சினைகளைப் பரிசீலித்து, குறைந்த காலகட்டத்திற்குள் தடுப்பூசி நிறைவாக எங்களுக்குக் கிடைக்கும் வகையில் எங்களின் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும்.

ஆயிரம் பேருக்கு எத்தனை தடுப்பூசி ஒதுக்கப்பட்டுள்ளது ? என்ற விகிதத்தின்படி, ஒவ்வொரு மாநிலத்திற்கும் மத்திய அரசு அளிக்கும் தடுப்பூசி ஒதுக்கீட்டை மதிப்பிட வேண்டும். ஏற்கெனவே குறைவான ஒதுக்கீட்டைப் பெற்றுள்ள மாநிலங்களுக்கு அதை சரி செய்யும் வகையில் தடுப்பூசி ஒதுக்கப்பட்டுள்ளதா ? என்பதை உறுதி செய்ய வேண்டும்.

அரசு மற்றும் தனியார் நிறுவனங்களுக்கு ஒதுக்கப்படும் 75:25 என்ற தடுப்பூசி விகிதத்தை 90:10 என்று மாற்றி அமைக்க வேண்டும்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் நியாய விலைக்கடையில் ஆய்வு

படமும் / செய்தியும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 16.06.2021 அன்று சென்னை, ஆழ்வார்ப்பேட்டையில் உள்ள நியாய விலைக் கடைக்கு நேரில் சென்று குடும்ப அட்டைதாரர்களுக்கு கொரோனா பாதிப்பு நிவாரண உதவித்தொகை இரண்டாம் தவணையாக ரூ.2 ஆயிரம் மற்றும் 14 அத்தியாவசிய மளிகைப் பொருட்கள் அடங்கிய தொகுப்பினை வழங்கும் பணியினை ஆய்வு செய்தார்கள்.

முன்களப் பணியாளர்களான செய்தியாளர்களுக்கு கொரோனா தடுப்பூசி சிறப்பு முகாம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின் உத்தரவின்படி முதல் முறையாக நாளிதழ்கள், பருவ இதழ்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர் 540 நபர்களுக்கு கொரோனா நோய்த்தொற்று தடுப்பூசி செலுத்தப்பட்டது – 06.07.2021.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசின் கொரோனா நோய்த்தொற்றுத் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பான உண்மையான செய்திகளையும், கொரோனா நோய்த்தொற்றுக் குறித்த விழிப்புணர்வு செய்திகளையும் பொதுமக்களுக்கு விரைவாகக் கொண்டு செல்லும் பணிகளை முன்களப் பணியாளர்களான பத்திரிகை மற்றும் ஊடகத்துறையில் பணியாற்றும் செய்தியாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மிகவும் சிறப்பான முறையில் மேற்கொண்டு வருகிறார்கள்.

காலம் நேரம் பாராது, அல்லும் பகலும் அயராது உழைக்கும் அனைத்துப் பத்திரிகைத்துறை மற்றும் ஊடகத்துறையினர்களும் கொரோனா நோய்த்தொற்றுக் காலத்தில் மிகவும் பாதுகாப்பான முறையில் தங்களது பணிகளை மேற்கொள்ள ஏதுவாக, செய்தித்துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி ஆகியவை இணைந்து ஏற்பாடு செய்த கொரோனா நோய்த்தொற்றுத் தடுப்பூசி சிறப்பு முகாம் 06.07.2021 அன்று சென்னை, கலைவாணர் அரங்கில் நடத்தப்பட்டது.

இச்சிறப்பு முகாம் மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திரு.மு.பெ. சாமிநாதன் அவர்கள் தலைமையில் மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் அவர்கள் மற்றும் மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் ஆகியோர் முன்னிலையில் தொடங்கி வைக்கப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்படி, முதல் முறையாக நாளிதழ்கள், பருவ இதழ்கள், ஊடகவியலாளர்கள் (ம) பல்வேறு பத்திரிகைச் சங்கங்கள் மற்றும் அவர்தம் குடும்பத்தினர்கள் 540 நபர்களுக்கு இச்சிறப்பு முகாம் மூலம் கொரோனா நோய்த்தொற்றுத் தடுப்பூசி செலுத்தப்பட்டது. தமிழக அரசின் இந்த சிறப்பான முயற்சிக்கு மூத்த பத்திரிகையாளர்கள் பலரும் பாராட்டுக்களையும், நன்றிகளையும் தெரிவித்தனர். மேலும், இதுபோன்ற சிறப்பு முகாம்களை மாவட்ட அளவிலும் நடத்த வேண்டுமென மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்தனர்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், தமிழ்நாடு மூலிகைப் பண்ணைகள் மற்றும் மூலிகை மருந்துக் கழகத்தினால் தயாரிக்கப்பட்டு, இந்திய மருத்துவம் மற்றும் ஓமியோபதித் துறையினால் வழங்கப்பட்ட கபசுரக் குடிநீர், இயற்கை மற்றும் நோய் எதிர்ப்புத் தேநீர் பொடி, ஆடாதோடை மணப்பாகு, அமுக்கராச் சூரணம் மாத்திரை மற்றும் தாளிசாதி வடகம் ஆகிய கொரோனா நோய்த் தடுப்பு மற்றும் நோய் எதிர்ப்பு சக்திக்கான இந்திய முறை மருந்துகள் அடங்கிய தொகுப்பினைத் தடுப்பூசி செலுத்திக்கொண்ட செய்தியாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் அனைவருக்கும் வழங்கினார்கள்.

"மின்னகம்" என்ற புதிய மின் நுகர்வோர் சேவை மையம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தொடங்கி வைத்தார்கள் – 20.06.2021.

தமிழ்நாட்டில் உள்ள மூன்று கோடியே பத்து இலட்சம் மின் இணைப்புதாரர்களின் மின்கட்டணம் தொடர்பான சந்தேகங்கள், புதிய மின் இணைப்பு தொடர்பான தகவல்கள், மின்னழுத்த ஏற்ற, இறக்கம், உடைந்த மின்கம்பங்கள், தாழ்வாகச் செல்லும் மின்கம்பிகள், பழுதடைந்த மின் பெட்டிகள், ஆபத்தான நிலையில் உள்ள மின்மாற்றிகள், மின்தடை குறித்த தகவல், குறைந்த மின்னழுத்தம், உயர் மின்னழுத்தம் போன்ற மின்துறை சார்ந்த தகவல்கள், புகார்களைப் பொதுமக்கள் தெரிவிக்க, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 20.06.2021 அன்று சென்னை, அண்ணா சாலையிலுள்ள தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள **"மின்னகம்" என்ற புதிய மின் நுகர்வோர் சேவை மையத்தைத் திறந்து வைத்து, அதற்கான பிரத்தியேகமான 9498794987 என்ற கைப்பேசி எண்ணையும் அறிமுகப்படுத்தினார்கள்.**

இப்புதிய மின் நுகர்வோர் சேவை மையம், 24 மணி நேரமும் பொதுமக்கள் தொடர்பு கொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. இம்மையத்தில் ஒரு ஷிப்ட்டுக்கு 65 நபர்கள் வீதம் மூன்று ஷிப்டுகளுக்கு 195 நபர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர். அப்பணியாளர்கள் பொதுமக்கள் தெரிவிக்கும் புகார்களைக் கணினி மூலம் பதிவு செய்து, இப்புகார்கள் சம்மந்தப்பட்ட மேற்பார்வைப் பொறியாளர், செயற்பொறியாளர், உதவி செயற்பொறியாளர், உதவிப்பொறியாளர் அலுவலகங்களுக்கு, CC-MAC மென்பொருள் தொழில்நுட்பம் வாயிலாகத் தானியங்கி Whatsapp மூலம் உடனடியாகச் சென்றடைந்து, அதன்மீது துரித நடவடிக்கை எடுக்கப்படும். பெறப்படுகின்ற புகார்கள் குறித்த தகவல்களை ஒருங்கிணைக்கத் தமிழ்நாடு முழுவதும் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள 44 மேற்பார்வைப் பொறியாளர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் செயல்படும் வகையில் தலா 3 நபர்கள் வீதம் 132 நபர்கள் பணியமர்த்தப்பட்டுள்ளனர்.

மேலும், புகார்தாரரின் கைப்பேசி எண்ணிற்குப் புகாரின் எண் குறுஞ்செய்தியாக அனுப்பப்பட்டு, அப்புகார்கள் சரிசெய்யப்பட்டவுடன், அதுகுறித்த தகவலும், குறுஞ்செய்தியாக அனுப்பப்படும். மின்வாரியம் தொடர்பாகத் தமிழ்நாடு முழுவதும் சமூக வலைத்தளம் **(Facebook, Twitter, Instagram)** மூலம் பதிவேற்றப்படும் புகார்களும் கண்காணிக்கப்பட்டு நடவடிக்கை எடுப்பதற்கு **Social Media Cell** அமைக்கப்பட்டுள்ளது.

ஜெர்மனி, கொலோன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறை தொடர்ந்து, தொய்வின்றி இயங்க ரூ.1.25 கோடி நிதியுதவி!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவிப்பு – 07.07.2021

தமிழ் மொழியின் வளர்ச்சியில், ஜெர்மனியில் உள்ள கொலோன் பல்கலைக்கழகத்தில் உள்ள தமிழ்ப் பிரிவும் முக்கியப் பங்காற்றி வருகிறது. இப்பல்கலைக்கழகத்தில் இந்தியவியல், தமிழியியல் ஆய்வு நிறுவனம் 1963ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டு, தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. கடந்த 2014ஆம் ஆண்டு கொலோன் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறைக்கு உருவான நிதிப்பற்றாக்குறையால், அங்கு பணிபுரிந்த தமிழ்ப் பேராசிரியர் திரு.உல்ரிக்க நிக்லாஸ் அவர்கள் செப்டம்பர் 2020இல் ஓய்வு பெற்றபின், தமிழ்ப் பிரிவை மூடுவதாக அப்பல்கலைக்கழக நிருவாகம் அறிவித்தது. அந்த சமயத்தில், அமெரிக்கவாழ் இந்தியர்கள் தமிழ்த் துறை தொடர்ந்து இயங்குவதற்குத் தேவையான நிதியில் பாதியைத் திரட்டி கொலோன் பல்கலைக்கழகத்திற்கு அளித்ததால், தமிழ்ப் பிரிவை மூடும் முடிவு ஜூன் 2022 வரை ஒத்திவைக்கப்பட்டது.

கொலோன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்குத் தேவையான நிதியில் 1 கோடியே 25 இலட்சம் ரூபாயை, 2019இல் தமிழக அரசின் சார்பில் அளிப்பதாக அறிவித்திருந்த நிலையில், அதனை உடனடியாக அளித்து அப்பல்கலைக்கழகத்திற்கு உதவ வேண்டுமென, அப்போதைய எதிர்க்கட்சித் தலைவராக இருந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வலியுறுத்தியிருந்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், கொலோன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை தொடர்ந்து, தொய்வின்றி, இயங்கிட ஏதுவாக, தமிழ்நாடு அரசின் சார்பில் ஒரு கோடியே 25 இலட்சம் ரூபாயை உடனடியாக கொலோன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைக்கு வழங்கிட 07.07.2021 அன்று உத்தரவிட்டுள்ளார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞர் வழியில் செயல்பட்டு வரும் இவ்வரசு, இப்படிப்பட்ட திட்டங்களுக்கு நிதியுதவி செய்து, கொலோன் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை இன்னும் இரண்டு ஆண்டுகளில் 60 ஆண்டுகளைக் காணும் நல்வாய்ப்பிற்கு உதவிடும் என்பதோடு, தமிழ்மொழி, பண்பாடு, நாகரிகம் போன்றவற்றை உலகளவில் பரவிட என்றென்றும் துணை நிற்கும்.

தமிழ்நாட்டில் வாழும் மதம் மற்றும் மொழிவாரியான சிறுபான்மையினரின் நலன்களைப் பேணிக் காத்திட ஆணையம்

தமிழ்நாட்டில் வாழும் மதம் மற்றும் மொழிவாரியான சிறுபான்மையினரின் நலன்களைப் பேணிக் காத்திடவும், அவர்களின் உரிமைகளைப் பாதுகாக்கவும், கடந்த 1989ஆம் ஆண்டு, டிசம்பர் திங்கள் 13ஆம் நாளன்று, அப்போதைய முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம் அமைக்கப்பட்டது. அதற்குப் பிறகு, கடந்த 2010ஆம் ஆண்டு, மீண்டும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையச் சட்டம், 2010 (Act 21 of 2010)இன்படி, சட்டப்பூர்வ அதிகாரம் பெற்ற ஆணையமாகச் செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையத்தை
திருத்தியமைத்து அறிவிப்பு – 29.06.2021.

தமிழ்நாடு மாநில சிறுபான்மையினர் ஆணையம், சிறுபான்மையினரின் கல்வி, சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்காகச் செயல்பட்டு வருகிறது. இந்த ஆணையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் திருத்தியமைத்து, அதன் தலைவராக திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் அவர்களை நியமித்து உத்தரவிட்டுள்ளார்கள். திரு. எஸ்.பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கடந்த 1989 மற்றும் 1991இல் நடந்த சட்டமன்றத் தேர்தல்களில் தென்காசி சட்டமன்றத் தொகுதியிலிருந்தும், கடந்த 2006ஆம் ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியிலிருந்தும் சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர் ஆவார்.

படமும் / செய்தியும்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் 08.07.2021 அன்று தலைமைச் செயலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாண்புமிகு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள், தலைமைச் செயலாளர், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை முதன்மைச் செயலாளர், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை இணைச் செயலாளர், ஆதிதிராவிடர் நலத்துறை ஆணையர், தாட்கோ மேலாண்மை இயக்குநர், பழங்குடியினர் நலத்துறை இயக்குநர், சமூகநீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு காவல்துறை கூடுதல் இயக்குநர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரியில் ஒருங்கிணைந்த பேறுகால அவசரச் சிகிச்சை மையம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 07.07.2021 அன்று தொடங்கி வைத்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 07.07.2021 அன்று திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பேறுகால அவசரச் சிகிச்சை மற்றும் சிசு தீவிர சிகிச்சைப் பராமரிப்பு மையத்தைத் திறந்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து, திருக்குவளையில் உள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த இல்லத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்று, அங்குள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். பின்னர் அங்கு வைக்கப்பட்டுள்ள புகைப்படங்களைப் பார்வையிட்டார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பிறந்த இல்லத்தில் வைக்கப்பட்டுள்ள பார்வையாளர் பதிவேட்டில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், “தலைவர் கலைஞர் அவர்களின் உயிரினும் மேலான உடன்பிறப்புக்களோடு ஓயாது பணியாற்றி, உழைப்பால் முதல்வராகப் பொறுப்பேற்றுள்ள நான் எடுத்துக்கொள்ளும் உறுதி, தலைவர் கலைஞர் அவர்கள் அடிக்கடி சொல்வார், பதவி என்பது பொறுப்பு, பொறுப்போடு மக்களுக்குப் பணியாற்ற வேண்டும் என்று. அதை மனதில் ஏற்று முதல்வர் பதவியை, பதவியாகக் கருதாமல், பொறுப்பு என்று கருதி என் பயணம் தொடரும். அதைத்தான் அவர் பிறந்த வீட்டில் உறுதி எடுத்துக் கொள்கிறேன்” என்று குறிப்பு எழுதி கையொப்பமிட்டார்.

வீரர்கள் எல்லோரும் ஓர் அணி என்ற உணர்வுடன் களத்தில் செயல்படுகின்ற நேரத்தில்தான் வெற்றி உறுதியாகிறது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 26.06.2021 அன்று நேரு உள் விளையாட்டு அரங்கில் நடைபெற்ற நிகழ்ச்சியில், விளையாட்டு வீரர்களுக்கான கொரோனா நோய்த் தொற்று தடுப்பு ஊசி சிறப்பு முகாமைத் தொடங்கி வைத்து, ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் விளையாட்டு வீரர்களுக்கு அரசின் சிறப்பு ஊக்கத்தொகை வழங்கி ஆற்றிய உரை.

விளையாட்டு வீரர்களுக்கான கொரோனா நோய்த் தொற்று தடுப்பு ஊசி சிறப்பு முகாம் நிகழ்ச்சிக்கு வருகை தந்திருக்கக்கூடிய அனைவரையும் வரவேற்று, எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை மற்றும் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. சிவ.வீ. மெய்யநாதன் அவர்களே, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன் அவர்களே, மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் திரு.பி.கே. சேகர்பாபு அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் திரு. பரந்தாமன் அவர்களே, திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களே, டாக்டர் எழிலன் அவர்களே, நிகழ்ச்சியில் பங்கேற்கக்கூடிய இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. அபூர்வ வர்மா அவர்களே, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களே, தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு. என். ராமச்சந்திரன் அவர்களே மற்றும் நிகழ்ச்சியில் பங்கேற்கக்கூடிய அரசு அதிகாரிகளே, விளையாட்டுத் துறையைச் சேர்ந்த நிருவாகிகளே, எனக்கு முன்னால் உரையாற்றிய தமிழ்நாடு ஒலிம்பிக் சங்க செயற்குழு உறுப்பினர் திரு. ஆதவ் அர்ஜுன் அவர்களே, விளையாட்டு வீரர்களே, தொலைக்காட்சி, பத்திரிகை ஊடக நண்பர்களே, உங்கள் அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்.

தமிழ்நாடு அரசின் சார்பில் நடைபெறும் விளையாட்டு வீரர்களுக்கான கொரோனா நோய்த் தொற்று தடுப்பு ஊசி சிறப்பு முகாம் மற்றும் ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகளில் கலந்துகொள்ளும் விளையாட்டு வீரர்களுக்கு அரசின் சிறப்பு ஊக்கத் தொகை வழங்கும் நிகழ்ச்சிக்கு வருகை தந்துள்ள அனைவருக்கும் நான் வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நிகழ்ச்சியிலே நானும் பங்கேற்கக்கூடிய வாய்ப்பினைப் பெற்றமைக்குப் பெருமைப்படுகிறேன், பூரிப்படைகிறேன்.

விளையாட்டுப் போட்டிகளில் முக்கியமாக இருக்க வேண்டிய ஒன்று என்னவென்றால், டீம் ஸ்பிரிட். (Team Spirit). இதுதான் மிக மிக முக்கியமான ஒன்றாக விளங்குகிறது.

ஒவ்வொரு வீரரும் தனித்தனி திறமை கொண்டவர்களாக இருந்தாலும், அந்த வீரர்கள் எல்லோரும் ஓர் அணி என்ற உணர்வுடன் களத்தில் செயல்படுகின்ற நேரத்தில்தான் அது முழு வெற்றியைப் பெற்றிட முடியும். அந்த டீம் ஸ்பிரிட்டை இந்த விழா நடத்துகின்ற துறைகளிடம் நான் காண்கிறேன். எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து இந்த நிகழ்ச்சியைச் சிறப்பாக ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இதுவும் ஒரு டீம் ஸ்பிரிட் தான்.

தமிழ்நாடு அரசின் இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை, தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கம் ஆகியவை ஒருங்கிணைந்து, டீம் ஸ்பிரிட்டுடன் இந்த நிகழ்ச்சியை நடத்திக்கொண்டு இருக்கிறார்கள். எனவே, இந்த நிகழ்ச்சியே, விளையாட்டுப் போட்டிகள் போல உடலுக்கும் மனதுக்கும் ஊக்கம் தரக்கூடிய வகையில் நடைபெறுகிறது.

வாழ்க்கையே ஒரு விளையாட்டு என்று சொல்வார்கள். அரசியலை விளையாட்டாக நினைப்பவர்களும் நம் நாட்டிலே இருக்கிறார்கள். ஆனால், விளையாட்டுத் துறையை விளையாட்டாக நினைத்துவிடக்கூடாது. அதை விளையாட்டாக நினைத்தால் விளையாட்டாகப் போய்விடும். ஆகவே, அரசு இன்றைக்கு இந்த விளையாட்டுத் துறையை மேன்மைமிக்க துறையாக உருவாக்குவதில் உறுதியாக இருக்கிறது.

விளையாடுபவர்களை விளையாட்டுக்காரர்கள் என்று சொல்வதில்லை, அவர்களை ‘விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள்’ என்றுதான் சொல்கிறோம். இந்த வீரர்களால், வீராங்கனைகளால் நாட்டுக்குப் பெருமை. நாளைய தலைமுறைக்கு ஒரு வலிமை.

ஒருவர் விளையாட்டுப் போட்டியில் தீவிரமாகப் பங்கேற்கிறார் என்று சொன்னால், அவரது உடல் திறன் வலுவாக இருப்பது மட்டுமல்ல, மனதிடமும் உறுதி குலையாமல் இருக்க வேண்டும். இலக்கை நோக்கிப் பயணிப்பதில் எத்தனை இடையூறுகள் வந்தாலும் அதனைச் சவாலாக எதிர்கொண்டு, சமாளிக்கத் தெரிய வேண்டும், அதற்கான பயிற்சிகளை எடுக்க வேண்டும்.

கிரிக்கெட்டில் டோனி மாதிரி விளையாட்டு வீரர் சிக்ஸர் அடித்தால், மைதானத்தில் இருக்கும் அத்தனைபேரும் அவர்களே சிக்ஸர் அடித்த மாதிரி சந்தோசப்படுவார்கள். அதேபோன்று, ஃபுட்பாலில் ரொனால்டோ கோல் போட்டால், ஸ்டேடியத்தில் கூடியிருக்கும் அத்தனைபேரும் கோல் போட்டது போன்ற உணர்வைப் பெறுவார்கள். அதை தொலைக்காட்சியில் பார்க்கின்ற ரசிகர்களுக்கும் மக்களுக்கும் அந்த உணர்வுதான் ஏற்படுகிறது. அவர்களிலிருந்து டெண்டுல்கர்களும், டோனிகளும், பி.டி.உஷாக்களும், மல்லேஸ்வரிகளும் உருவாகிறார்கள்.

அந்த வகையில் ஒரு தலைமுறைக்கே ஊக்கம் தரக்கூடியவர்கள்தான் இங்கே குழுமியிருக்கின்ற விளையாட்டு வீரர்களான நீங்கள் அனைவரும், அதை மறந்துவிட முடியாது. எனவே உங்கள் நலன் பேணிப் பாதுகாக்கப்படும். எனவே, அரசைப் பொறுத்தவரைக்கும் நிச்சயமாக என்றைக்கும் உங்களுக்குத் துணை நிற்கும் என்ற உறுதியை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சர்வதேச விளையாட்டு மற்றும் ஒலிம்பிக் போட்டிகளில் நம்முடைய வீரர்கள் வெற்றி பெற்று தமிழ்நாட்டிற்கும், இந்தியத் துணைக் கண்டத்திற்கும் பெருமை சேர்க்கும் வகையில் தேவையான உயர்மட்ட செயல் திறன் பயிற்சி, பயணச் செலவுகள், ஊக்கத்தொகை, சமூக நலன் மற்றும் மனநலன் மேம்படுத்தும் பயிற்சிகளும் தமிழ்நாடு அரசால் வழங்கப்பட்டு, ஊக்கப்படுத்தப்பட்டு வருகின்றன.

நமது மாநிலத்தைச் சேர்ந்த விளையாட்டு வீரர்களுக்கு அரசின் பல்வேறு துறைகளில் விளையாட்டு வீரர்களுக்கான இட ஒதுக்கீட்டின் கீழ் பணி நியமனம் வழங்கப்பட்டு வருகிறது.

ஒவ்வொரு விளையாட்டு வீரரிடமும், வீராங்கனையரிடமும் 3 முக்கியப் பண்புகள் இருக்கும். விரைவாகச் செயல்படுதல், துணிவாக முயற்சி செய்தல், உடலை வலிமையாகப் பராமரித்தல் ஆகிய இந்த மூன்றும் மிகமிக முக்கியம். இந்த மூன்றுப் பண்புகளையும் அரசும் உள்ளத்திலே வைத்துக் கொண்டிருக்கிறது.

பேரிடர் காலத்தில் விரைவாகச் செயல்பட்டு, துணிவான முயற்சிகளை மேற்கொண்டு, தமிழ்நாடு என்ற மாநிலத்தை வலிமையாகப் பராமரித்து வருகிறது. வலிமைமிக்க தமிழ்நாட்டில் விளையாட்டுத் துறையைச் சார்ந்த நீங்களும் ஓர் அங்கம்.

சர்வதேச அளவிலும் இந்திய அளவிலும் சிறந்து விளங்கக்கூடிய நமது வீரர்களுக்கான சிறப்பு ஊக்கத்தொகைத் திட்டம் தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலம் வீரர் மற்றும் வீராங்கனைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.10 இலட்சம் வரை விளையாட்டுக் கருவிகள், போட்டிகளுக்கான பயணச் செலவு ஆகியவற்றுக்கான நிதியுதவிகள் எல்லாம் வழங்கப்பட்டு வருகின்றன.

சர்வதேச அளவிலான போட்டிகளில் வெற்றி பெறக்கூடிய வகையில் ஆண்டுக்கு ரூ.25 இலட்சம் வரை உயர்மட்டப் பயிற்சி, உலகளாவிய போட்டிகளுக்கான பயணச் செலவு ஆகியவற்றுக்கான நிதியுதவி செய்யப்படுகிறது.

ஜப்பான் நாட்டின் தலைநகர் டோக்கியோவில் 23.07.2021 முதல் 08.08.2021 வரை நடைபெற உள்ள ஒலிம்பிக் போட்டிகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்த செல்வி நேத்ரா குமணன், திரு வருண் எ.தக்கர் மற்றும் திரு. கே.சி.கணபதி ஆகியோர் பாய்மரப் படகோட்டுதல் போட்டியிலும், திரு. ஜி.சத்தியன் மற்றும் எ.சரத்கமல் ஆகியோர் மேசைப் பந்து போட்டியிலும், செல்வி சி.ஏ.பவானி தேவி வாள் சண்டைப் போட்டியிலும், மாற்றுத்திறனாளர்களுக்கான பாராலிம்பிக் போட்டிகளில் உயரம் தாண்டுதல் போட்டியில் திரு. டி.மாரியப்பன் என ஆக மொத்தம் 7 வீரர், வீராங்கனைகள் பங்கேற்க இருக்கிறார்கள் என்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

செல்வி சி.ஏ.பவானி தேவி அவர்களுக்கு ரூ.5 இலட்சம் சிறப்பு ஊக்கத்தொகை அரசால் ஏற்கெனவே வழங்கப்பட்டு விட்டது. மீதமுள்ள 6 விளையாட்டு வீரர்களுக்கும் அரசின் சிறப்பு ஊக்கத் தொகையாக தலா ரூ.5 இலட்சம் வீதம் ரூ.30 இலட்சம் வழங்கப்பட இருக்கிறது என்பதை மிகுந்த மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

விளையாட்டு வீரர்கள் அனைவருக்கும் தேவையான உடற்பயிற்சி மற்றும் அறிவியல் ரீதியிலான பயிற்சி மேற்கொள்வதற்கான நவீன உட்கட்டமைப்பு வசதிகள் உலகத்தரத்தில் அரசு ஏற்படுத்தித் தரக்கூடிய அந்தப் பணிகளையெல்லாம் நிச்சயமாக இந்த அரசு செய்யும் என்ற உறுதியினை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தலைசிறந்த விளையாட்டு வீரர்களை உருவாக்குவதற்கு நம்முடைய குழந்தைகளின் திறமைகளை ஆரம்பக் கட்டத்திலிருந்தே கண்டறிய வேண்டும். 12 வயதுக்குள்ளாகவே, பல்வேறு விளையாட்டுகளில் திறமையான குழந்தைகளைக் கண்டறிந்து, அவர்களுக்கு சர்வதேசத் தரத்திலான பயிற்சிகளை வழங்குவதற்கு இந்த அரசு உறுதியாக இருக்கும். அந்த நோக்கத்தில்தான் இங்கே அர்ஜுன் அவர்கள் சொன்னதைப்போல, 2021 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு வெளியிடப்பட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையிலே, ஒலிம்பிக் விளையாட்டில் விளையாட்டு வீரர்கள் வெற்றி பெறும் வகையில், தமிழ்நாட்டை 4 பகுதிகளாகப் பிரித்து, ஒலிம்பிக் அகாடமிகள் திறக்கப்படும் என்ற செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. எல்லா விளையாட்டுகளிலும் சாதிக்கக்கூடிய வீரர்களுக்குச் சிறப்புப் பயிற்சி, ஊக்கத் தொகை, போட்டிகளுக்குச் சென்று வரப் பயணச் செலவு உள்ளிட்ட அனைத்து ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

சென்னையில் பிரம்மாண்டமான விளையாட்டு அரங்கம் அமைத்து எல்லா வகையான போட்டிகளுக்கும் உயர்தரப் பயிற்சிகள் அளிக்கப்படும். அதுமட்டுமல்லாமல், பல்வேறு வாக்குறுதிகளை நாங்கள் வழங்கியிருக்கிறோம். நிச்சயமாக அத்தனையும் நிறைவேற்றப்படும். ஒலிம்பிக் அகாடமி உள்ளிட்ட முன்னெடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்வதன் மூலமாக இந்திய அளவிலான

தரவரிசையில் தமிழ்நாட்டையும், சர்வதேச அளவிலான தரவரிசையில் இந்தியாவையும் நாம் முன்னேற்றிட முடியும். இந்தத் திசையில் நாம் தொடர்ந்து பயணித்தால் ஒலிம்பிக் போட்டிகளின் பதக்கப் பட்டியலில் சீனா, அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளை ஒரு நாள் பின்னுக்குத் தள்ளக்கூடிய ஒரு சூழ்நிலை நிச்சயம் ஏற்படும்.

நானும் பள்ளி, கல்லூரிப் பருவத்தில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்றதுண்டு. விளையாட்டுகளில் பங்கேற்கும்போது, விளையாட்டு வீரர்களுக்கு என்னென்ன தேவை என்பதை நான் நன்றாக அறிந்து வைத்துள்ளேன். சென்னையின் மேயராகவும் இந்த மாநிலத்தின் துணை முதல்வராகவும் இருந்தபோது மிகச் சிறந்த கிரிக்கெட் வீரர்களுடன் காட்சிக் கிரிக்கெட் போட்டிகளில் பங்கேற்று விளையாடியதை மறக்க முடியாது. எனவே, தமிழ்நாட்டின் முதலமைச்சராக மட்டுமின்றி, விளையாட்டின் மீதான ஆர்வத்தில் உங்களில் ஒருவனாக உங்கள் முன்னேற்றத்திற்கும் வெற்றிக்கும் உதவிட நான் என்றைக்கும் தயாராக இருக்கிறேன்.

கொரோனா நோய்த் தொற்று உங்களைப் போன்ற விளையாட்டுத் துறையினரின் சாதனைகளுக்கும், தொடர்ச்சியான முன்னேற்றத்திற்கும் தடையாக இருந்துவிடக்கூடாது என்பதால்தான், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து விளையாட்டு வீரர்களையும் கருத்தில்கொண்டு இந்தத் தடுப்பூசி சிறப்பு முகாம் இங்கே தொடங்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளி வீரர், வீராங்கனையர்களுக்கு அவரவர் இருப்பிடத்திற்கே சென்று தடுப்பூசி போடுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டிருப்பதாக இங்கே தெரிவித்திருக்கிறார்கள்.

விளையாட்டுப் போட்டிகளைப் பொறுத்தவரை ஒரு அணி ரன் எடுத்தும் வெற்றி பெறலாம்; எதிரணியினர் ரன் எடுப்பதைத் தடுத்தும் வெற்றி பெறலாம். ஒரு அணி கோல் அடித்தும் வெற்றி பெறலாம்; எதிரணியினரின் கோல் முயற்சிகளைத் தடுத்தும் வெற்றி பெறலாம். இந்த கொரோனா நோய்த் தொற்றுக் காலத்தில், முதற்கட்டமாக, அத்தகைய தடுப்பாட்டத்தைக் கையாள்வது போல, இந்தத் தடுப்பூசி முகாம் இங்கே நடைபெறுகிறது. இந்தச் சிறப்பு முகாமை அனைத்து விளையாட்டு வீரர், வீராங்கனைகளும் பயன்படுத்தி, தங்களது உடல் நலனைப் பேணிப் பாதுகாத்து, விளையாட்டுக் களத்தில் தமிழ்நாட்டிற்குப் பெருமை சேர்த்திட வேண்டுமென அன்புடன் நான் வேண்டுகிறேன்.

உலக அரங்கில் விளையாட இருக்கக்கூடிய நமது விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்த வேண்டிய கடமை நம் அரசுக்கு இருக்கிறது. எனவே, தங்கப் பதக்கம் வெல்லக்கூடிய வீரர்களுக்கு ரூ.3 கோடி வழங்கப்படும். வெள்ளிப் பதக்கம் வெல்லக்கூடிய வீரர்களுக்கு ரூ.2 கோடி வழங்கப்படும். வெண்கலப் பதக்கம் வெல்லக்கூடிய வீரர்களுக்கு ரூ.1 கோடி வழங்கப்படும் என்று தமிழ்நாடு அரசின் சார்பில் இந்தப் பரிசுத்தொகை அறிவிப்பை வெளியிடுவதில் நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

‘தமிழக வீரர்களே சென்று வருக !
தரணியை வென்று வருக !’

நன்றி, வணக்கம்.

❖ ❖ ❖

ஒலிம்பிக் போட்டிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட வாள்வீச்சு வீராங்கனைக்கு ரூ.5 இலட்சம் நிதியுதவி

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் வழங்கினார் – 20.06.2021.

தமிழகத்தைச் சேர்ந்த செல்வி பவானி தேவி அவர்கள், தமிழகத்தின் பாரம்பரியக் கலையான வாள்வீச்சில் பயிற்சி பெற்று உலக அளவிலான பல்வேறு போட்டிகளில் பங்கேற்று, பல பதக்கங்களை வென்றுள்ளார். அவரின் ஊக்கத்தினையும், விடாமுயற்சியினையும் கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின்பகிர்மானக் கழகத்தில் “விளையாட்டு அலுவலர்” பதவி வழங்கப்பட்டுள்ளது.

செல்வி பவானி தேவி அவர்கள் தற்போது ஜப்பான் நாட்டின், டோக்கியோ மாநகரில் நடைபெற உள்ள சர்வதேச ஒலிம்பிக் போட்டியில் கலந்துகொள்ளத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இவர் இந்தியாவிலிருந்து ஒலிம்பிக் வாள்வீச்சு போட்டிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்மணி ஆவார். அவர் தேவையான பயிற்சிகள் பெற அனைத்து உதவிகளையும் தமிழ்நாடு அரசு செய்து வருகிறது. அவர் தற்போது இப்போட்டிக்காக இத்தாலி நாட்டில் பயிற்சி பெற்று வருகிறார். மேலும் சில பயிற்சிகள் பெற செல்வி பவானி தேவி அவர்கள் தமிழ்நாடு அரசிடம் ரூ.5 இலட்சம் நிதியுதவி கோரியிருந்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள், செல்வி பவானி தேவி அவர்களின் கோரிக்கையைக் கனிவுடன் பரிசீலித்து, அவரை ஊக்குவிக்கும் வகையில், 20.06.2021 அன்று சென்னை, அண்ணா சாலை, தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் மின் பகிர்மானக் கழகத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை அவரது தாயாரிடம் வழங்கினார்.

படமும் / செய்தியும்

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 119ஆவது பிறந்த நாள் விழா

பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 119ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 15.07.2021 அன்று சென்னை, அண்ணாசாலை, பல்லவன் இல்லம் எதிரில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்.

ஜூலை 15 : பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாள்



மக்கள் சுகமே தன் சுகம் என்று எந்நேரமும் பாடுபட்ட மாசற்ற மாபெரும் தலைவர் காமராஜர்

தேசப்பிதா காந்தியடிகளின் வழியில் வந்த மாசற்ற மாபெரும் தலைவர் காமராஜர் அவர்கள்.

காமராஜர் காந்தியவாதியாக இருந்தாலும் மன உறுதி படைத்தவர். மக்களின் நலன் பொருட்டு எக்காரியத்தையும் செயலாற்றும் ஆற்றல் பெற்றவர். இந்தியாவிலிருந்து ஆங்கிலேயர்கள் ஆட்சியை அகற்றிட காந்தியடிகள் போராடினார். தென்னகத்தில் அந்நிய ஆட்சியை எதிர்த்துப் போராடியவர் சத்தியசீலர் காமராஜர்.

இந்தியாவில், மக்களுக்காகப் பாடுபட்ட தலைவர்கள் பலர் தோன்றி இருந்தாலும் சரித்திரத்தில் தனியிடத்தைப் பெற்றவர் காமராஜர் என்றால் மிகையாகாது.

மக்கள் சுகமே தன் சுகம் என்று எந்நேரமும் பாடுபட்ட மாசற்ற மாபெரும் தலைவர் காமராஜர். அவருடைய மகத்தான வெற்றிக்குக் காரணம் மக்களோடு அவருக்கு இருந்த நெருங்கிய தொடர்பாகும்.

சாதாரண மக்கள் உடனடியாக சந்தித்து தங்களுடைய குறைகளைக் கூறக்கூடிய தலைவர் ஒருவர் உண்டு என்றால் அவர் பெருந்தலைவர் காமராஜர் ஒருவர்தான். அதனால்தான் அவர் ஏழைப் பங்காளன் காமராஜர் என்று எல்லோராலும் போற்றிப் புகழப்பட்டார்.

“கிராமத்து மக்கள் எல்லோரும் எழுதப்படிக்கத் தகுந்த வகையில், தாங்கள் எல்லா ஊர்களிலும் பள்ளிக்கூடங்களைத் திறக்க வேண்டும். அதுதான் எனது வேண்டுகோள்” என்றார் தந்தை பெரியார். தான் ஏற்கெனவே எண்ணியிருந்த எண்ணத்தைப் பெரியாரும் பிரதிபலித்ததைக் கண்டு மனம் பூரிப்படைந்தார் காமராஜர். இளமை முதல் இறுதிவரை காமராஜர் ஆடம்பர வாழ்க்கையை விரும்பாத ஒரு அப்பழுக்கற்ற பரிசுத்தமான ஒரு காந்தியவாதி.

“நாட்டில் எந்தக் குழந்தைகளுக்கும் உணவு, உடை, கல்வி அளிப்பதில் பெற்றோர்களுக்குச் சிரமமே இருக்கக் கூடாது.

“குழந்தைகளை 15 வயது வரை வளர்க்கும் பொறுப்பை அரசாங்கமே ஏற்க வேண்டும்.”

– நன்றி : **காமராஜர் ஒரு காவியம் எனும் நூலிலிருந்து...**

மேகதாது திட்டம், தமிழக விவசாயிகளின் நலன்களைப் பாதிக்காது என்பதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள்
மாண்புமிகு கருநாடக முதலமைச்சர்
திரு. **எடியூரப்பா** அவர்களுக்கு எழுதிய கடிதத்தின்
தமிழாக்கம் – 04.07.2021.

தமிழகம் மற்றும் கருநாடக மாநிலங்களுக்கு இடையேயான உறவைப் பலப்படுத்தும் நோக்கத்தில், நீங்கள் கொடுத்த பாராட்டுக்கு நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மேகதாது அணையைப் பொறுத்தமட்டில் அது, அங்கு 67.16 டி.எம்.சி. தண்ணீரைத் தேக்குவதற்கானது அதைத் தமிழகத்தில் உள்ள 2 நீர் மின் திட்டங்களுடன் ஒப்பிட்டுப் பேசுவது சரியானது அல்ல என்பதை ஆரம்பத்திலேயே தெளிவாகக் கூறிக் கொள்கிறேன்.

தமிழகத்தில் உள்ள 2 நீர் மின் திட்டங்களுக்காக நீரை வேறு இடத்திலிருந்து பெறுவது இல்லை. இருக்கும் நீரையே மறுசுழற்சி முறையில் நீரேற்றம் செய்து, தேவைப்படும் மின்சாரத்தைத் தயாரித்துக் கொள்கிறோம். அந்த 2 திட்டங்களுக்காகக் கூடுதல் நீரைப் பெறுவது இல்லை. மேலும், அந்த 2 திட்டங்களும் குடிநீர்த் தேவையிலும், பாசனத்திலும் பாதிப்பினை ஏற்படுத்துவது இல்லை. எனவே, இந்த தரமான திட்டங்களை, மேகதாது அணைத் திட்டத்தோடு ஒப்பிட வேண்டாம். இது பொருத்தமானது அல்ல.

விவசாயிகள் நலன்களைப் பாதிக்கும்

மாநிலங்களுக்கு இடையேயான காவிரி நதிநீர் பங்கீட்டுக்கான இறுதித் தீர்ப்பை நடுவர் மன்றம் அறிவித்தது. அதை சுப்ரீம் கோர்ட்டு மாற்றி அமைத்து தமிழகத்துக்கு ஆண்டுக்குத் தரவேண்டிய நீரின் அளவு பற்றி 3 அம்சங்களை உத்தரவிட்டது. இதில் முதல் அம்சத்தைக் கட்டுப்படுத்தி, தமிழகத்துக்கு வர வேண்டிய தண்ணீரைத் திசை திருப்புவதாக மேகதாது திட்டம் அமைந்துள்ளது.

அதாவது, கபினி அணைக்குக் கீழ் உள்ள வடிநிலப்பகுதி, கிருஷ்ணராஜ சாகர் அணைக்குக் கீழ் உள்ள வடிநிலப்பகுதி, சிம்சா, அர்க்காவதி மற்றும் சுவர்ணாவதி வடிநிலப்பகுதியில் இருந்து தமிழகம் நோக்கி வரும் தடையற்ற நீரோட்டத்தைத் தடுத்து, திசை திருப்பும் வகையில் மேகதாது அணைத் திட்டம் உள்ளது. எனவே மேகதாது திட்டத்தை அமல்படுத்துவது, தமிழக விவசாயிகளின் நலன்களைப் பாதிக்காது என்று கூறுவதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியாது.

தமிழக நீரின் அளவில் பாதிக்கும்

மேகதாது அணையைக் கட்டுவதற்கு, உச்சநீதிமன்றம் அனுமதித்தபடி பெங்களூரு மாநகராட்சியின் குடிநீர்த் தேவைக்காகத்தான் என்று நீங்கள் கூறுவதை ஏற்க இயலாது. மேகதாது அணைக் கட்டப்பட இருக்கும் இடத்துக்கும், பெங்களூருக்கும் இடையே மிக அதிக தூரம் உள்ளது. எனவே, பெங்களூரு மாநகரத்தின் குடிநீர்த் தேவைக்காக மேகதாது அணை கட்டுகிறோம் என்று குறிப்பிடுவது சரியான காரணமாக இல்லை.

மேலும் பெங்களூரு மாநகர குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்ய கருநாடக அரசு, ஏற்கெனவே உள்கட்டமைப்பு வசதிகளை வைத்துள்ளது. **பெங்களூரு மாநகரத்தின் 4.75 டி.எம்.சி. குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக 67.16 டி.எம்.சி. நீரைத் தேக்கம் செய்ய அணை கட்டுவது என்பது யாராலும் ஏற்கமுடியாத ஒன்று.** மேகதாது அணைத் திட்டம் தமிழகத்துக்குக் கிடைக்க வேண்டிய நீரின் அளவைப் பாதிப்பதாக அமையும்.

மேகதாது திட்டத்தைக் கைவிட வேண்டும்

தற்போது தமிழகத்துக்குத் தர வேண்டிய நீரின் அளவை உச்சநீதிமன்றம் உறுதி செய்துள்ளது. ஆனால்

இந்த வழக்கின் கால அவகாசம் சற்று நீண்டகாலமாக இருப்பதால், தமிழகத்தில் உள்ள காவிரிப் பாசன திறனைத் துரதிருஷ்டவசமாக மேம்படுத்த முடியாமல் போய் விட்டது. காவிரி நீரைத் திறமையாகப் பயன்படுத்துவதற்காக பழைய கட்டமைப்புகளை நவீனப்படுத்தவும், மேம்படுத்தவும் வேண்டியதுள்ளது. இந்தப் பணிகளைச் செய்து முடிக்காவிட்டால் உச்சநீதிமன்றத்தின் உத்தரவுப்படி பெறப்படவேண்டிய தண்ணீரின் அளவை நாங்கள் பெறமுடியாத சூழல் ஏற்பட்டுவிடும்.

எனவே, மேற்கூறிய உணர்வுப்பூர்வமான காரணங்களுக்காக மேகதாது திட்டத்தை நீங்கள் கைவிட வேண்டும், தொடரக்கூடாது என்று மிக அழுத்தத்துடன் கேட்டுக்கொள்கிறேன்.

நமது இரண்டு மாநிலங்களுக்கு இடையே உள்ள நல்ல ஒத்துழைப்பு மற்றும் நட்புறவு தொடர்ந்து நீடிக்கும் என்று கூறுவதுடன், கருநாடக மாநில மக்களின் நல்வாழ்வுக்காக என்னுடைய வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உச்சநீதிமன்றத்தின் காவிரி இறுதித் தீர்ப்பிற்கு எதிரான மேகதாது அணை கட்டும் முடிவினை கருநாடக மாநில அரசு உடனடியாகக் கைவிட வேண்டும்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிக்கை – 18.06.2021.

“ஒன்றிய அரசு அனுமதி வழங்கியதும் மேகதாது அணை கட்டப்படும்” எனக் கருநாடக மாநில முதலமைச்சர் திரு. எடியூரப்பா அவர்கள் ஒருதலைபட்சமாக, உச்சநீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கின்ற நிலையில் அறிவித்திருப்பது மிகுந்த கண்டனத்திற்குரியது.

இத்திட்டம் தமிழ்நாடு விவசாயிகளின் நலனுக்கு விரோதமானது என்றும், உச்சநீதிமன்றத்தின் இறுதித் தீர்ப்பின் அடிப்படையில் தமிழ்நாட்டிற்குக் கிடைக்கும் காவிரி நீரின் அளவினைக் குறைத்திடும் என்றும் கூறி தமிழ்நாடு அரசு மிகக் கடுமையாக இத்திட்டத்தை எதிர்த்து வருகிறது. தமிழ்நாடு சட்டமன்றத்தில் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, மாண்புமிகு பிரதமர் அவர்களிடம் தமிழ்நாடு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அத்தீர்மானத்தை 28.03.2015 அன்று நேரடியாக வழங்கி எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. உச்சநீதிமன்றத்தில் இந்தப் புதிய அணை கட்டுவது தொடர்பாகத் தமிழ்நாடு அரசு தொடுத்த வழக்கும் நிலுவையில் உள்ளது. காவிரி மேலாண்மை ஆணையத்திலும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்போது மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களைத் தில்லியில் நேரில் சந்தித்தபோது **“மேகதாது அணை கட்டுவதற்கு அனுமதி வழங்கக்கூடாது”** என வலியுறுத்தியிருக்கிறேன். இந்நிலையில் உச்சநீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருக்கின்ற சூழலில், கருநாடக முதலமைச்சர் திரு. எடியூரப்பா அவர்கள் தன்னிச்சையாக இப்படியொரு அறிவிப்பை வெளியிட்டிருப்பது இரு மாநில நல்லுறவிற்கு எவ்விதத்திலும் உகந்த ஒரு நிலைப்பாடு அல்ல என்பதோடு, தமிழ்நாட்டையும், தமிழ்நாட்டு விவசாயிகளையும் வஞ்சிக்க முயற்சிக்கும் செயலாகும்.

ஆகவே, தமிழ்நாட்டு விவசாயிகள் மற்றும் தமிழ்நாட்டு மக்களின் நலனுக்கும், உச்சநீதிமன்றத்தின் காவிரி இறுதித் தீர்ப்பிற்கும் எதிரான மேகதாது அணை கட்டும் முடிவினைக் கருநாடக மாநில அரசு உடனடியாகக் கைவிட வேண்டும் என்றும், மேகதாது அணை கட்ட ஒன்றிய அரசு அனுமதி வழங்கக் கூடாது என்றும் தமிழ்நாட்டின் சார்பில் எனது கடுமையான எதிர்ப்பினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தெரிந்து கொள்ளுங்கள் இணையத்தின் வாயிலாக



படத்தின் அருகில்
இருக்கும் குறியீட்டை
ஸ்கேன் செய்யுங்கள்!
தலைவர்களின்
புகைப்படங்களைப்
பெற்றுக்கொள்ளுங்கள்!!

முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 24.06.2021 அன்று முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் நினைவிடத்தில், மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்தநாள் விழா

இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, 07.07.2021 அன்று தமிழ்நாடு அரசின் சார்பில், சென்னை, காந்தி மண்டப வளாகத்தில் உள்ள இரட்டைமலை சீனிவாசன் அவர்களின் மணிமண்டபத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு. மு.பெ.சாமிநாதன் அவர்கள், மாண்புமிகு ஆதிதிராவிட நலத் துறை அமைச்சர் திரு. என்.கயல்விழி செல்வராஜ் அவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அரசு செயலாளர் திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் இரட்டைமலை சீனிவாசன் குடும்பத்தினர் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

படமும் செய்தியும்

கவியரசு கண்ணதாசன் அவர்களின் 95ஆவது பிறந்தநாள் விழா

கவியரசு கண்ணதாசன் அவர்களின் 95ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, தமிழ்நாடு அரசின் சார்பில் 24.06.2021 அன்று சென்னை, தியாகராயநகரில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

எழுகவே

எழுகவே ! எழுகவே ! எழுகவே !
எண்ணிறந்த வயது கொண்ட
இளைய பாரதம் நிமிர்ந்து
எழுகவே ! எழுகவே ! எழுகவே !

கண்ணி ரண்டும் பகையை நோக்கிக்
கனல் பறக்க எழுகவே !
கையி ரண்டும் கருவி ஏந்திக்
களம் முடிக்க எழுகவே !
விண்ணி ரண்டு பட்ட தென்று
வீறு கொண்டு எழுகவே !
வெள்ள மென்று விளைஞர்கோடி
உள்ள மொன்றி எழுகவே !
எழுகவே ! எழுகவே ! எழுகவே !

உழவர் கைக்குத் துணை புரிந்து
பயிர் வளர்க்க எழுகவே !
ஒன்று தேசம் ஒன்று என்று
உரிமை கொண்டு எழுகவே !
தொழில் வளர்த்து வறுமை நீக்கித்
துயர் துடைக்க எழுகவே !
தோன்றும் செல்வம் பொதுமை யாக்கத்
தோள்கள் தட்டி எழுகவே !
எழுகவே ! எழுகவே ! எழுகவே !

தமிழெ டுத்து உலகை வெல்லும்
தலைமை காக்க எழுகவே !

தர்மம் யார்க்கும் ஒன்று என்ற
தலைவன் வாழ எழுகவே !
அமைதி நாடி அமைதி நாடி
அறம் வளர்க்க எழுகவே !
அறம் வளர்த்துப் புகழ் படைத்த
அன்னை வாழ எழுகவே !
எழுகவே ! எழுகவே ! எழுகவே !

(26.05.1966இல் சென்னையில் நடைபெற்ற முதல் ‘இளைஞர் பேரணி’க்காக எழுதப்பட்டது.)

நன்றி: **கண்ணதாசன் கவிதைகள்**
எனும் நூலிலிருந்து...

டெல்டா மாவட்ட விவசாயிகளின் நலனுக்காக ரூ.61.09 கோடி மதிப்பில் குறுவை நெல் சாகுபடித் தொகுப்புத் திட்டம்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 12.06.2021 அன்று மேட்டூர் அணையினைத் திறந்து வைத்ததைத் தொடர்ந்து, டெல்டா மாவட்ட விவசாயிகள் குறுவை நெல் சாகுபடியில் உயர் மகசூல் பெற வேண்டும் என்ற நோக்கத்தில் முக்கிய இடுபொருட்கள் மற்றும் வேளாண் இயந்திரங்களை விவசாயிகளுக்கு மானியத்தில் வழங்கும் வகையில், ரூ.61.09 கோடி மதிப்பில் குறுவை நெல் சாகுபடித் தொகுப்புத் திட்டத்தை அறிவித்து ஆணையிட்டுள்ளார்கள்.

இந்தக் குறுவை சாகுபடி உதவி தொகுப்புத் திட்டமானது தஞ்சாவூர், நாகப்பட்டினம், மயிலாடுதுறை மற்றும் திருவாரூர் மாவட்டங்கள் முழுவதும் மற்றும் கடலூர், அரியலூர் மற்றும் திருச்சி மாவட்டங்களில் உள்ள சில பகுதிகளிலும் செயல்படுத்தப்படும்.

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியமாக விளங்கும் காவிரி டெல்டா மாவட்டங்களில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, சிறப்புக் கால்வாய் தூர்வாரும் பணிகள் மற்றும் மேட்டூர் அணை திறப்பு குறித்து, பல்வேறு விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகளைக் கலந்தாலோசித்து, டெல்டா மாவட்டங்களில் ரூ.65.11 கோடி மதிப்பீட்டில் 4,061.44 கி.மீ. தூரத்திற்கு 647 தூர்வாரும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகின்றன.

11.06.2021 அன்று, திருச்சி கல்லணையில் ரூ.1,036 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் சீரமைப்புப் பணிகளை ஆய்வு செய்து, பின்னர், 12.06.2021 அன்று குறுவை நெல் சாகுபடிக்காக மேட்டூர் அணையினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். கல்லணையிலிருந்து 16.06.2021 அன்று காவிரி டெல்டா பகுதி பாசனத்திற்காகத் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.

மாண்புமிகு
தமிழ்நாடு முதலமைச்சர்
திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
அறிவிப்பு – 17.06.2021.

மேட்டூர் அணையில் 16.06.2021 அன்றைய நிலவரப்படி, 94.26 அடி (57.656 டிஎம்சி) நீர் இருப்பில் உள்ளது. உச்சநீதிமன்ற உத்தரவின்படி, தொடர்ந்து காவிரியில் மாதந்தோறும் உரிய அளவில் தண்ணீர் திறந்துவிட வேண்டுமென, காவிரி நீர் மேலாண்மை ஆணையத்திற்கு உரிய அறிவுரை வழங்கவேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு மத்திய நீர்வளத்துறை அமைச்சர் அவர்களுக்குக் கடிதம் எழுதினார்கள். அதனடிப்படையில், எதிர்வரும் 22.06.2021 அன்று காவிரி நீர் மேலாண்மை ஆணையத்தின் கூட்டம் நடைபெற உள்ளது.

காவிரி டெல்டா மாவட்டங்களில் வழக்கமாக 3.2 இலட்சம் ஏக்கரில் குறுவை நெல் சாகுபடி மேற்கொள்ளப்படும். நடப்புக் குறுவைப் பருவத்தில் 3.5 இலட்சம் ஏக்கர் பரப்பில் நெல் சாகுபடி மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டு, குறுவை சாகுபடிக்குத் தேவையான குறுகிய கால நெல் ரக விதைகள், இரசாயன உரங்கள், உயிர் உரங்கள் மற்றும் நுண்ணூட்ட உரங்கள் போன்ற இடுபொருட்களைப் போதிய அளவு இருப்பில் வைத்திடவும், நெல் நடவு இயந்திரங்களைக் கொண்டு, விரைவாக நடவுப் பணியை மேற்கொள்ளவும் வேளாண்மைத்துறை நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

தமிழ்நாடு அரசு மேற்கொண்டுவரும் இத்தகைய முன்னேற்பாட்டு நடவடிக்கைகளின் காரணமாக, 14.06.2021 வரை, 1,69,300 ஏக்கர் பரப்பளவில் குறுவை நெல் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தொடர்ந்து நெல் நாற்றங்கால் விடும் பணியும் நடவுப்பணியும் நடைபெற்று வருகிறது.

டெல்டா மாவட்ட விவசாயிகள், குறுவைப் பருவத்தில் அதிக மகசூல் எடுக்க வேண்டும் என்பதற்காக, 2,870 மெட்ரிக் டன் சான்று நெல் விதைகள், 1,90,000 ஏக்கர் பரப்பில் முழு மானியத்தில் இரசாயன உரங்கள், 24,000 ஏக்கர் பரப்பில் பசுந்தாளுர விதைகள் போன்ற இடுபொருட்கள் விவசாயிகளுக்கு மானிய விலையில் விநியோகிக்கப்படும். இதற்காக, அரசு ரூ.50 கோடி நிதியினையும், வேளாண் இயந்திரங்களை மானியத்தில் விவசாயிகளுக்கு வழங்கவும், நீரைத் திறம்படச் சேமித்து பயிர்சாகுபடிக்குப் பயன்படுத்தும் வகையிலும், பண்ணைக்குட்டைகள் அமைக்கவும் ரூ.11.09 கோடி நிதியினையும் வழங்கி, **ஆக மொத்தம் ரூ.61.09 கோடி மதிப்பீட்டில் குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்து ஆணையிட்டுள்ளார்கள். இத்திட்டத்தின் மூலம் 2 இலட்சத்து 7 ஆயிரத்து 259 விவசாயிகள் பயனடைவார்கள்.**

எனவே, நடப்பாண்டில் ஜூன் 12ஆம் தேதி மேட்டூர் அணை திறக்கப்பட்டதாலும், ரூ.61.09 கோடி மதிப்பில் அறிவிக்கப்பட்ட குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டத்தின் காரணமாகவும், குறுவை நெல் சாகுபடி இலக்கான 3 இலட்சத்து 50 ஆயிரம் ஏக்கரை விடக் கூடுதலான பரப்பளவில் இந்த ஆண்டு சாகுபடி மேற்கொள்ளப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

புது தில்லி, சாணக்யபுரியில் உள்ள பழைய தமிழ்நாடு இல்லத்தில் புதிய கட்டடங்கள் கட்டுவது குறித்த ஆய்வுக் கூட்டம்!

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் 18.06.2021 அன்று புது தில்லி தமிழ்நாடு இல்லத்தில், சாணக்யபுரியில் உள்ள பழைய தமிழ்நாடு இல்லத்தில் புதிய கட்டடங்கள் கட்டுவது குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், மாண்புமிகு நீர்வளத் துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள், நாடாளுமன்ற உறுப்பினர் திரு. டி.ஆர். பாலு அவர்கள், கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் புது தில்லி தமிழ்நாடு இல்ல உள்ளுறை ஆணையாளர்–I, டாக்டர் ஜக்மோகன் சிங் ராஜூ, இ.ஆ.ப., உள்ளுறை ஆணையாளர்–II, திரு. ஆஷிஷ் சாட்டர்ஜி, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

தொழிலாளர்களின் நலன்களைப் பேணிக் காப்பதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலம்

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியம் திருத்தியமைப்பு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் அறிவிப்பு – 29.06.2021.

தொழிலாளர்களின் நலன்களைப் பேணிக் காப்பதில், இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்னோடி மாநிலமாகத் திகழ்ந்து வருகிறது. அமைப்புசாராத் தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்பு வழங்கும் வகையில், தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர் (வேலை மற்றும் பணி நிலைமைகள் முறைப்படுத்துதல்) சட்டம், 1982ஆம் ஆண்டு இயற்றப்பட்டது. இச்சட்டத்தின்கீழ், 1994ஆம் ஆண்டு தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியம் அமைக்கப்பட்டது. கடந்த ஐந்தாண்டுகளாகத் திருத்தியமைக்கப்படாத தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர்கள் நல வாரியத்தினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் திருத்தியமைத்து ஆணையிட்டுள்ளார்கள்.

கட்டுமானத் தொழிலாளர்களின் கட்டணச் சுமையை நீக்கும் வகையில், பதிவு மற்றும் புதுப்பித்தலுக்காக வசூலிக்கப்பட்ட கட்டணங்கள் 01.09.2006 முதல் அப்போதைய முதலமைச்சராக இருந்த முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் முழுவதுமாக இரத்து செய்யப்பட்டு, அனைத்துத் தொழிலாளர்களும் அரசின் நலத்திட்டங்களைப் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டது. கட்டுமானத் தொழிலாளர்கள் உள்ளிட்ட அனைத்து அமைப்புசாராத் தொழிலாளர்களும், அந்தந்த மாவட்ட அலுவலகங்களை எளிதில் தொடர்பு கொண்டு, நலத்திட்ட உதவிகளைப் பெறுவதற்கு ஏதுவாக, அனைத்து மாவட்டங்களிலும் **01.11.2008 முதல் தொழிலாளர் உதவி ஆணையர் (சமூகப் பாதுகாப்புத் திட்டம்) அலுவலகங்கள், அப்போதைய மாண்புமிகு முதலமைச்சர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் உருவாக்கப்பட்டன.**

தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில், தற்போது 13,41,494 தொழிலாளர்கள் பதிவுசெய்து பயன்பெற்று வருகின்றனர். இவ்வாரியத்தின் அலுவல் சார்பற்ற உறுப்பினர்களின் பதவிக் காலம் 18.02.2016இல் முடிவடைந்த நிலையிலும், கடந்த 5 ஆண்டுகளாக இவ்வாரியம் திருத்தியமைக்கப்படவில்லை. முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வழியில் செயல்படும் இந்த அரசு, பதவியேற்ற குறுகிய காலத்திற்குள் கட்டுமானத் தொழிலாளர்களின் நலனைப் பேணுவதற்காக, அனைத்துத் தரப்பு வேலை அளிப்போர் மற்றும் தொழிலாளர் பிரதிநிதிகளைக் கொண்டு, கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தைத் திருத்தியமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவ்வாறே பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

திருத்தியமைக்கப்பட்ட தமிழ்நாடு கட்டுமானத் தொழிலாளர் நலவாரியத்தின் தலைவராக திரு. பொன்.குமார் அவர்களுடன், அரசுப் பிரதிநிதிகளாக நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல், நிதி, பொதுப்பணி ஆகிய துறைகளின் கூடுதல் தலைமைச் செயலாளர்கள், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சி, நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறைகளின் முதன்மைச் செயலாளர்கள், தொழிலாளர் ஆணையர், இயக்குநர், தொழிலகப் பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்ககம் மற்றும்

ஒன்றிய அரசின் மண்டலத் தொழிலாளர் ஆணையர் அவர்களும், வேலையளிப்போரின் பிரதிநிதிகளாக (Representatives of Employers), தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம், நெடுஞ்சாலை மற்றும் பொதுப்பணித் துறைகளின் முதன்மைப் பொறியாளர்களும், இயக்குநர், நகராட்சி நிருவாகத் துறை ஆகியோருடன், திரு. பதம் துகார், CREDAI, சென்னை அமைப்பின் தலைவர், திரு. சிவகுமார், மாநிலத் தலைவர், இந்திய கட்டட வல்லுநர் சங்கம், திரு. எல். சாந்தகுமார், தலைவர், அகில இந்திய கட்டுமான வல்லுநர் சங்கத்தின் தென் பிராந்தியத் தலைவர், திரு. ஷாஜகான் சேட், எம்.கே.எம்.எஸ். கட்டுமான நிறுவனத்தின் நிருவாகப் பங்குதாரர் ஆகியோரும், உடலுழைப்புத் தொழிலாளர்களின் பிரதிநிதிகளாக (Representatives of Manual Workers) தருமபுரி, நாமக்கல், கடலூர் மாவட்டங்களில் உள்ள தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள், அகில இந்திய காங்கிரஸ் தொழிற்சங்க நிறுவனத்தின் (AITUC) துணைப் பொதுச்செயலாளர், இந்திய தொழிற்சங்கங்களின் மையத்தின் செயற்குழு உறுப்பினர், மறுமலர்ச்சித் தொழிலாளர் முன்னணியின் மாநிலச் செயலாளர், அகில இந்திய அமைப்பு சாராத் தொழிலாளர் காங்கிரசின் மாநிலத் தலைவர், இந்திய தேசியத் தொழிற்சங்க காங்கிரஸ் சங்கத்தின் உறுப்பினர், தொழிலாளர் விடுதலை முன்னணியின் மாநிலப் பேரவை அமைப்பாளர் உள்ளிட்டோர் அங்கம் வகிப்பர்.

சிலம்புச் செல்வர் ம.பொ.சி. அவர்களின் 116ஆவது பிறந்தநாள் விழா

படமும் / செய்தியும்

தமிழ்நாடு அரசின் சார்பில், சிலம்புச் செல்வர் ம.பொ.சிவஞானம் அவர்களின் 116ஆவது பிறந்தநாளை முன்னிட்டு, 26.06.2021 அன்று சென்னை, தியாகராய நகரில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு அருகில் அலங்கரித்து வைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கு மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திரு.மு.பெ.சாமிநாதன் அவர்கள், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.

பேரிடர்களைத் திறம்பட எதிர்கொள்ளும் மாநிலமாகத் தமிழகத்தை மாற்றுவோம்

தமிழ்நாடு மாநிலப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் கூட்டத்தில்
மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் உறுதி – 05.07.2021.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில், தமிழ்நாடு மாநிலப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் இந்த ஆண்டிற்கான முதல் கூட்டம் தலைமைச் செயலகத்தில் 05.07.2021 அன்று நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பேரிடர்களின் தாக்கத்தின்போது ஏற்படும் மனித உயிரிழப்புகள், பொதுச் சொத்துக்கள் மற்றும் உட்கட்டமைப்புகளுக்கு ஏற்படும் பாதிப்புகளை வெகுவாகக் குறைத்து, **தமிழகத்தை அனைத்து வகையான பேரிடர்களையும் திறம்பட எதிர்கொள்ளும் மாநிலமாக மாற்றுவதே அரசின் நோக்கமாகும் என்று உறுதிப்படத் தெரிவித்தார்.** அந்த நோக்கத்தைச் செயலாக்க மாநில மற்றும் மாவட்ட அளவில் அனைத்துத் துறை அலுவலர்களும் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

மேலும், சமீப காலமாக ஏற்படும் இயற்கைப் பேரிடர்கள் இயற்கையாக மட்டும் ஏற்படுவதில்லை, மனிதர்களும் இதற்குப் பொறுப்பேற்றாக வேண்டுமென்று தெரிவித்தார். பருவகால சூழ்நிலை தற்போது சீராக இல்லை, இத்தகைய சூழலைப் புரிந்து நாம் நடந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். பேரிடர் தடுப்புப் பணிகள் என்பது பேரிடர் காலங்களில் மக்களைக் காப்பது மட்டுமல்ல, அத்தகைய பேரிடர் ஏற்படாத சூழலை நாம் உருவாக்கிட வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

சென்னைப் பெருநகரத்தை வெள்ளநீர் சூழாமல் தவிர்க்க, பெருநகர வெள்ளநீர் மேலாண்மைக் குழு அமைக்கப்படும் என்று ஆளுநர் உரையில் குறிப்பிட்டுள்ளதைச் சுட்டிக்காட்டிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சென்னையில் ஆக்கிரமிப்புகளை அகற்றி, கரைகளைப் பலப்படுத்திட ஒரு நிரந்தரத் திட்டத்தை உருவாக்கிட வேண்டுமென்று அறிவுறுத்தினார். அதேபோன்று, கடலூர் மாவட்டம் வெள்ளம் பாதிக்கும் மாவட்டமாக இருப்பதால், அதற்கும் நிரந்தரத் தீர்வு காணும் வகையில், பேரிடர் தடுப்பு நடவடிக்கைகளை முன்கூட்டியே ஆராய்ந்து செயல்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

இயற்கைப் பேரிடர் ஏற்படும் காலங்களில், அதிக அளவில் பாதிக்கப்படுபவர்கள் நகர்ப்புற ஏழை எளிய மக்கள், கிராமப் பகுதிகளின் விவசாயப் பெருங்குடி மக்கள் என்று சுட்டிக்காட்டிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்த பாதிப்புகளிலிருந்து அவர்களைக் காத்து, அவர்களின் இழப்புகளை ஈடுசெய்து மறுவாழ்வுக்கு வழிகோலுவதே அரசின் தலையாய நோக்கமாக இருக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

பேரிடர்களின் அபாயம் மற்றும் பாதிப்புகளைக் குறைப்பதற்கான முன்னெச்சரிக்கை மற்றும் தடுப்பு நடவடிக்கைகளைப் பொதுமக்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளவேண்டும் என்றும், பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் வசிக்கும் மக்களின் பேரிடர்களை எதிர்கொள்ளும் திறனை மேம்படுத்தி, ஒரு மக்கள் இயக்கமாகப் பேரிடர் மேலாண்மையின் செயல்பாடுகள் விரிவுபடுத்தப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

அதேபோன்று, பேரிடர் மீட்புப் பணிகளில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள முன்வரும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் மற்றும் தனிமனிதர்களுக்கு அரசுத் துறைகளின் மூலம் உரியப் பயிற்சி அளிக்க வேண்டும், அவர்களை ஊக்குவிக்கத் தமிழ்நாடு பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் மூலம் சிறப்பான திட்டம் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றும் அலுவலர்களை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக்கொண்டார்.

பேரிடர்கள் குறித்த முன்னெச்சரிக்கைச் செய்திகள் அனைவரையும் சென்று சேரும் வகையில் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மீனவர்களுக்குப் புயல், வெள்ளம் உள்ளிட்ட பேரிடர் குறித்த முன்னெச்சரிக்கைச் செய்திகள் உரிய நேரத்தில் கிடைக்கும் வகையில் பேரிடர் எச்சரிக்கை தகவல் திட்டம் மேம்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென்றும் அறிவுறுத்தினார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரிடர் காலங்களில், நீர் நிலைகளின் வழிப்பாதைகள் பாதுகாப்பையும், அனைத்து மருத்துவமனைகளிலும் தடையில்லா மாற்று மின்சார வசதி உறுதியும் செய்யப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தமிழ்நாடு மாநிலப் பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் தலைவர் என்ற முறையில் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், பேரிடர்களின் தாக்கத்தைக் குறைக்கத் தேவையான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் மேற்கொள்ள உறுதுணையாக இருப்பதாக உறுதியளித்தார். ஒரு அரசாங்கத்தின் முதலாவது பணி மக்களைக் காப்பதுதான், அத்தகைய பணிக்கு நாம் அனைவரும் சேர்ந்து முக்கியத்துவம் கொடுப்பதுதான் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்.

படமும்/ செய்தியும்

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையில் அமைச்சரவைக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் 24.06.2021 அன்று தலைமைச் செயலகத்தில், அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

"உங்கள் தொகுதியில் முதலமைச்சர்" துறையின்கீழ் 50,643 மனுக்களுக்குத் தீர்வு

முழுமையாக தீர்வு காணப்பட்ட 50,643 மனுதாரர்களில் 11 மனுதாரர்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் நேரில் அழைத்து 29.06.2021 அன்று உரிய ஆணைகளை வழங்கினார்கள்.

உங்கள் தொகுதியில் முதலமைச்சர் துறையின்கீழ் இதுவரை 1,21,720 மனுக்கள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, 50,643 மனுக்களுக்குத் தீர்வு காணப்பட்டு, பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மாண்புமிகு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்களால் 29.06.2021 அன்று வழங்கப்பட்டன.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தேர்தல் பரப்புரையின்போது பெறப்பட்ட மனுக்கள் மீது துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அவ்வாறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு, ஏற்றுக்கொள்ளப்பட்ட மனுக்களிலிருந்து சில பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டு, **மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கடந்த 18.05.2021 அன்று 549 நபர்களுக்கும், 03.06.2021 அன்று 3,213 நபர்களுக்கும் மற்றும் 11.06.2021 அன்று 1,100 நபர்களுக்கும் நலத்திட்ட உதவிகளுக்கான ஆணைகள் வழங்கப்பட்டன.**

இதுவரை 1,21,720 மனுக்களின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அவற்றில், 50,643 மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ள கோரிக்கைகள் ஏற்கப்பட்டுள்ளன. ஏற்கப்பட்டுள்ள 50,643 கோரிக்கைகளில், வருவாய்த் துறையின்கீழ் தனிநபர் கோரிக்கைகளான பட்டா, சமூகப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் ஓய்வூதியங்கள், இதர நலத்திட்ட உதவிகள் 18,744 ஆகும். மேலும், ஊரக வளர்ச்சித் துறையின் கீழ் 7,311 நபர்களுக்கு வீடு கட்ட வழங்கப்பட்ட உதவித் தொகைகளும், அடிப்படைக் கட்டமைப்புகளுக்கான

சுமார் ரூ.300 கோடி மதிப்பிலான 5,250 பணி ஆணைகளும் இவற்றில் அடங்கும். நகரப் பகுதிகளில் அடிப்படை வசதி கோரி பெறப்பட்ட 1,767 மனுக்கள் பல்வேறு நகராட்சிகள் மூலம் ஏற்கப்பட்டுள்ளன. புதிய குடும்ப அட்டை மற்றும் கூட்டுறவு உணவுப் பொருள் துறை சம்பந்தப்பட்ட 2,504 மனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. தமிழ்நாடு மின் பகிர்மானக் கழகம் (TANGEDCO) தொடர்பான 1,334 கோரிக்கைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளன. சமூகநலத் துறை தொடர்பான 933 மனுக்களுக்கான கோரிக்கைகள் ஏற்கப்பட்டுள்ளன. இதுதவிர, மற்ற துறைகள் சார்ந்த 12,800 மனுக்களுக்கும் தீர்வு காணப்பட்டுள்ளன.

எஞ்சியுள்ள மனுக்களில், 36,072 மனுக்கள் மனுதாரரின் முகவரி இல்லாமலும், மனுதாரரை தொலைபேசியில் தொடர்புகொள்ள இயலாமலும், கோரிக்கைகளில் தெளிவு இல்லாமலும் உள்ளதால், இவற்றைத் தற்போது நிறைவேற்றிட இயலாத நிலை உள்ளது. எனினும், அவர்களைத் தொடர்பு கொண்டு, அவர்களது கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும். மேலும், 35,005 மனுக்கள் தற்போதுள்ள அரசு விதிகளின்கீழ் நிறைவேற்றிட இயலாத நிலை இருப்பதால், அவர்களுக்கான மாற்றுத் தீர்வுகள் அளிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதுதவிர, வேலைவாய்ப்புக் கோரி பெறப்பட்ட 66,264 மனுக்கள் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைக்கு அனுப்பப்பட்டுள்ளன. அவ்வாறு பெறப்பட்ட மனுக்களில் சம்பந்தப்பட்ட மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர்கள் 47,611 மனுதாரர்களைத் தொடர்பு கொண்டு கூடுதல் விவரங்களைப் பெற்றுக்கொண்டனர். அதனடிப்படையில், மனுதாரர்களின் விருப்பத்திற்கேற்ப வேலைவாய்ப்பு உதவித்தொகை கோரிய 271 நபர்களுக்கு உதவித்தொகை வழங்கவும், அரசு மற்றும் தனியார் வேலைவாய்ப்பு கோரும் 5,082 மனுதாரர்களுக்கு மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் வழிகாட்டி மையம் (District Employment and Career Guidance Centre) மூலம் போட்டித் தேர்வுகளுக்கான இணையதள வகுப்புகளில் சேர்த்துக் கொள்ளப்பட்டு, தற்போது வகுப்புகள் நடைபெற்று வருகின்றன.

தனியார் வேலைவாய்ப்பு கோரி பெறப்பட்ட 2,545 மனுக்களில், மனுதாரர்களின் விவரங்கள் www.tnprivatejobs.gov.in என்ற இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன. இவர்களுக்கான இணையதள வேலைவாய்ப்பு முகாம் (Online Job Mela) கடந்த 21.06.2021 அன்று நடத்தப்பட்டது. இதில் 184 நபர்களுக்கு உடனடியாக தனியார் நிறுவன வேலைவாய்ப்பில் தேர்வு செய்யப்பட்டனர்.

அதன்படி, **முழுமையாகத் தீர்வு காணப்பட்ட 50,643 மனுதாரர்களில் 11 மனுதாரர்களை, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நேரில் அழைத்து 29.06.2021 அன்று உரிய ஆணைகளை வழங்கினார்கள்.**

படமும்/ செய்தியும்

நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தலைமையில் 30.06.2021 அன்று தலைமைச் செயலகத்தில், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் செயல்பாடுகள் குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், மாண்புமிகு நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள், தலைமைச் செயலாளர், நிதித்துறை கூடுதல் தலைமைச் செயலாளர், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

பத்திரிகையாளர்களுக்குக் கொரோனா நிவாரண நிதியுதவி வழங்கிய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றி

கொரோனா பெருந்தொற்று அனைத்து தரப்பு மக்களையும் அச்சுறுத்தி வருகின்றது. கொரோனா நோயால் உலகம் முழுவதும் கோடிக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டு, இலட்சக்கணக்கான மக்கள் தங்கள் இன்னுயிரை இழந்துள்ளனர்.

இந்த நிலையில் **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் கடந்த மே மாதம் 7ஆம் தேதி பொறுப்பேற்றுக்கொண்டது முதல் தொடர்ந்து கொரோனா பெருந்தொற்றிலிருந்து தமிழக மக்களைக் காக்கும் வகையில் பொதுமக்கள் பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்படக்கூடாது என்பதற்காக கொரோனா நிவாரண நிதியாக ரூ.4,000 வழங்க உத்தரவிட்டு, இரண்டு தவணையாக வழங்கியுள்ளதுடன், 14 வகையான மளிகைப் பொருட்களையும் வழங்கியுள்ளார்கள்.**

கொரோனா பெருந்தொற்றால் தாய், தந்தையை இழந்து, ஆதரவின்றி தவிக்கும் குழந்தைகளின் எதிர்காலத்தைப் பாதுகாத்திடும் வகையில் அந்த குழந்தைகளுக்கு தலா ரூ.5 இலட்சம் வைப்புத்தொகை மற்றும் உறவினர் அல்லது பாதுகாவலரின் ஆதரவில் வளர குழந்தைகளின் பராமரிப்புச் செலவாக மாதம் ரூ.3,000 உதவித்தொகை, அரசு இல்லங்கள் மற்றும் விடுதிகளில் தங்குவதற்கு இடம், பட்டப்படிப்பு வரை விடுதிக் கட்டணம் உட்பட கல்விக் கட்டணம் அனைத்தையும் அரசே ஏற்கும் என்பன உள்ளிட்ட பல்வேறு நிவாரண உதவிகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.

கொரோனா பெருந்தொற்று காலத்தில் கொரோனா நோய்த்தொற்று குறித்த செய்திகளை மருத்துவமனைகள் உள்ளிட்ட பாதிப்பு அதிகம் உள்ள இடங்களிலும் சேகரித்து வெளியிட்டு, **பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வரும் செய்தித்தாள்கள், காட்சி ஒலி ஊடகங்களில் பணியாற்றி வருகின்ற ஊடகத்துறையினர் அனைவருமே முன்களப் பணியாளர்கள் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள்.** அதனடிப்படையில், மருத்துவர்கள் மற்றும் அரசுத்துறை அலுவலர்களுக்கு இணையாக முன்னுரிமை அடிப்படையில் செய்தியாளர்களுக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

பத்திரிகை மற்றும் ஊடகத் துறையில் பணிபுரியும் அரசு அங்கீகரிக்கப்பட்ட செய்தியாளர்கள் கொரோனா நோய்த் தொற்று காரணமாக இறக்க நேரிட்டால், அவர்களது வாரிசுதாரர்களுக்குத் தமிழக அரசால் சென்ற ஆண்டு வழங்கப்பட்ட இழப்பீட்டுத் தொகையைவிடக் கூடுதலாக உயர்த்தி வழங்கக் கோரி ஊடகவியலாளர்கள் சார்பாக அளிக்கப்பட்ட கோரிக்கையினை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பரிவுடன் பரிசீலித்து, அதனை ரூ.10 இலட்சமாக உயர்த்தி வழங்கியுள்ளார்கள்.

மக்களுக்கும், அரசுக்கும் ஒரு இணைப்புப் பாலமாக இயங்கிவரும் செய்தியாளர்களின் பணியினை ஊக்குவிக்கும் வகையில், அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பத்திரிகைகள், தொலைக்காட்சிகள் மற்றும் காலமுறை இதழ்களில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரார்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்கள் (அரசு அங்கீகார அட்டை, மாவட்ட ஆட்சியர் வாயிலாக வழங்கப்பட்ட அடையாள அட்டை அல்லது இலவசப் பேருந்துப் பயண அட்டை போன்ற ஏதேனும் ஒரு வகையில் அரசால் அங்கீகரிக்கப்பட்டவர்கள்) ஆகியோருக்கு சிறப்பு நிவாரண நிதியுதவி ரூ.5,000 வழங்க

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

அதனடிப்படையில், **நாமக்கல் மாவட்டத்தில் 67 செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்களுக்கு தலா ரூ.5,000 என மொத்தம் ரூ.3,35,000/– வழங்கப்பட்டுள்ளது.**

கொரோனா சிறப்பு நிவாரணத் தொகை பெற்ற நியூஸ் 7 தமிழ் தொலைக்காட்சியின் செய்தியாளர் திரு.சி.ஸ்ரீதர் அவர்கள் தெரிவித்ததாவது,

சி. ஸ்ரீதர்

என் பெயர் சி.ஸ்ரீதர். நான் நியூஸ் 7 தமிழ் தொலைக்காட்சியின் நாமக்கல் மாவட்ட செய்தியாளராகப் பணிபுரிந்து வருகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஊடக செய்தியாளர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்களை முன்களப் பணியாளர்களாக அறிவித்தார்கள்.

அதன் அடிப்படையில் நியூஸ் 7 தமிழ் தொலைக்காட்சியில் மக்கள் மனதில் பதியும் வகையில் தயாரிக்கப்பட்ட கொரோனா நோய்த்தொற்று தடுப்பு குறும்படங்கள் ஒளிபரப்பாகி விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றது. “அன்பு பாலம்” நிகழ்ச்சியின் மூலமாக நாமக்கல் மாவட்டத்தில் மட்டும் ரூ.1 இலட்சத்துக்கும் மேற்பட்ட நிதியைத் தொலைக்காட்சியின் பார்வையாளர்களிடம் பெற்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதிக்கு வழங்கியுள்ளோம்.

அ. பூபதி

கொரோனா சிறப்பு நிவாரண நிதியாக ரூ.5,000 வழங்கிய முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவிக்கின்றேன் என்று கூறினார்.

கொரோனா சிறப்பு நிவாரணத் தொகை பெற்ற தமிழ் முரசு நாளிதழின் புகைப்படக்காரர் திரு. அ.பூபதி அவர்கள் தெரிவித்ததாவது,

என் பெயர் அ.பூபதி. நான் தமிழ் முரசு நாளிதழின் நாமக்கல் மாவட்ட புகைப்படக்காரராகப் பணிபுரிந்து வருகிறேன்.

கொரோனா தொற்று மக்களை வாட்டி வதைத்துக் கொண்டிருக்கும் நிலையிலும், செய்தியாளர்களாகிய நாங்கள், இரவு பகல் பாராமல் எந்த நேரத்திலும் எங்களது பணியைச் செய்து கொண்டிருக்கிறோம். முன்களப் பணியாளர்கள் என்று அறிவித்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு, கொரோனா தொற்று தாக்கி எங்களில் யாருக்கேனும் உயிரிழப்பு ஏற்பட்டால் அவர்களது குடும்பத்திற்கு உதவும் வகையில் தமிழக அரசு ரூ.10 இலட்சம் இழப்பீட்டுத் தொகை வழங்க ஆணை பிறப்பித்த தமிழக முதல்வருக்கு எங்களது கோடான கோடி நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். மேலும், தற்போது வாழ்வாதாரத்தை இழந்து தவிக்கும் இவ்வேளையில் நிவாரண நிதியாகச் செய்தியாளர்களுக்கு ரூ.5,000 வழங்கிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்றார்.

கொரோனா சிறப்பு நிவாரணத் தொகை பெற்ற நியூஸ் 18 தொலைக்காட்சியின் செய்தியாளர் திரு. ஆர்.ரவிச்சந்திரன் அவர்கள் தெரிவித்ததாவது,

ஆர். ரவிச்சந்திரன்

என் பெயர் ஆர்.ரவிச்சந்திரன். நான் நியூஸ் 18 தொலைக்காட்சியில் நாமக்கல் மாவட்ட செய்தியாளராகப் பணியாற்றி வருகிறேன். எங்களது பணியானது 24 மணிநேரமும் செல்லுகின்ற இடத்தில் காலம்நேரம் பாராமல் செய்கின்ற பணியாகும்.

நிவாரணத் தொகை ரூ.5,000 கிடைக்கப் பெற்றதால் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தேன். செய்தியாளருக்கு நிவாரணத் தொகை வழங்கிய தமிழக முதல்வர் ஸ்டாலின் ஐயா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன்.

கொரோனா சிறப்பு நிவாரணத் தொகை பெற்ற தினச்சூரியன் நாளிதழின் புகைப்படக்காரர் திரு.ஆர்.யோகநாதன் அவர்கள் தெரிவித்ததாவது,

ஆர். யோகநாதன்

எனது பெயர் ஆர்.யோகநாதன். நான் தினச்சூரியன் நாளிதழின் நாமக்கல் மாவட்ட புகைப்படக்காரராகப் பணிபுரிந்து வருகிறேன்.

கொரோனா பாதிப்பு காலத்தில், ஜனநாயகத்தின் 4வது தூண் எனப்படுகின்ற பத்திரிகை மற்றும் ஊடகத்துறையில் பணிபுரியும் செய்தியாளர்கள், புகைப்படக்காரர்கள், ஒளிப்பதிவாளர்கள் ஆகியோர் முன்களப் பணியாளர்கள் என்று அறிவித்ததோடு, ரூ.5,000 நிவாரணத் தொகை வழங்க ஆணையிட்ட முதல்வர் அவர்களுக்குச் செய்தியாளர் என்ற முறையில் என் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

– சி. சீனிவாசன்,
செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்
நாமக்கல் மாவட்டம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 23.06.2021 அன்று, கலைவாணர் அரங்கத்தில் நடைபெற்ற சட்டப்பேரவைக் கூட்டத்தில், மாண்புமிகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில், ‘‘ஒன்றிய அரசு’’ என்று அழைப்பதற்கான விளக்கத்தை அளித்தார்.

தமிழரசு

R.N.I. No. 21446/70 Regn. No. TN/CCN/643/2021-2023
& WPP No. TN/PMG (CCR) 518/2021-2023

Date of Publication : 2nd week of every month
Date of Posting : 27th - 30th of every month

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. **மு.க.ஸ்டாலின்** அவர்கள் 07.07.2021 அன்று, திருவாரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் கட்டப்பட்டுள்ள ஒருங்கிணைந்த பேறுகால அவசர சிகிச்சை மற்றும் சிசு தீவிர சிகிச்சை பராமரிப்பு மையத்தைத் திறந்து வைத்துப் பார்வையிட்டார்.

Published by Dr.V.P. JEYASEELAN, I.A.S., on behalf of Information Department
Government of Tamil Nadu, Secretariat, Fort St. George, Chennai - 600 009 and Printed by: T. Suyambulingom at TAMILARASU PRESS,
Rajiv Gandhi Salai, Taramani, Chennai - 600 113. Editor: Dr.V.P. JEYASEELAN, I.A.S.,